# வீர
# பர்மியர் விஜயம்.

ஆசிரியர்.

வி. நாகையா.

1931.

(Copy-right.)

விலை ரூபாய் ஒன்று.

# முகவுரை.

ஆராய்ச்சியில் சரித்திர ஆராய்ச்சியு மொன்று. இதன் அவசியத்தை ஆங்கிலேயர்கள் நன்கு உணர்ந்தவர்களாக இருக்கின்றனர். தேச முன்னேற்றத்திற்கு சரித்திர ஆராய்ச்சி இன்றி யமையாதது என்பது ஆங்கிலேயருடைய கொள்கை. சரித்திர ஆராய்ச்சியில் அறிஞர்கள் பலர் இறங்கி தங்களுடைய வாழ் நாட்களைச் செலவழிப்பதில் ஓர் தனிப் பெருமை கொள்கிறார்கள் அவர்களுக்கு துணையாய் அரசாங்கங்களும் இருந்து வருகின்றன. லண்டன் கோபுர வாயில் காப்பவனிடம் நாம் அணுகி, அவனிடம் இங்கிலாந்தின் புராதன வரலாற்றைக் கேட்போமாகில், அவன் முழு விருத்தாந்தங்களைக் கூறுவான். பொதுவாய்ப் பார்க்கு மிடத்து அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ஜர்மனி போன்ற நாடுகளின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாய் நிற்பது சரித்திர ஆராய்ச்சியே யன்றி மற்றெதுவு மல்ல. சரித்திர புத்தகங்களைப் படித்து பிற நாடுகளின் பூர்வீக வாலாறுகளை அறிந்து கொள்வதற்குப் பதிலாய் ஐரோப்பா தேசத்தவர்கள் ஒவ்வொரு நாடுகளுக்கும் சென்று அவ்வந்த நாட்டின் அபூர்வ காட்சிகளேயும், இயற்கை அழகையும் கண்டு களித்து சரித்திர விசாரணை செய்து திரும்புகிறார்கள். ஆயிரக் கணக்காய் செலவு செய்து அவர்கள் ஆராய்ச்சி செய்வ தொன்றே அவர்கள் மாட்டுள்ள ஆர்வம் எத்தகைத் தென்பதைச் சுட்டுவதா யிருக்கிறது. புத்தர் பிறந்த நாட்டில் பௌத்தமதம் செழித்தோங்கா விடினும் வெகு சமீப தேசமாகிய பர்மா தேசத்தில் பௌத்த மதம் செழிப்புடன் திளைத்து வருகிறது. தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே இந்திய பர்மிய மன்னர்க்குள் நேய பான்மையும், விவாக சம்பந்தமும், வாணிய தொடர்பும் இருந்து வந்திருக்கின்றன.

மிஸ்டர் கோக்ஸ், மிஸ்டர் ஹார்வி முதலானோர் பர்மாவைப் பற்றிய சரித்திரங்களைப் புத்தக ரூபமாய் வெளியிட்டிருக்கின்றனர். அவற்றைப் படித்துப் பார்க்கும் ஒருவர் பர்மியர்களைப் பற்றி தப்பபிப்பிராயம் கொள்ளவே செய்வர் என்று பர்மிய சரித்திராசிரியர்கள் அடிக்கடி கூறி வருகின்றனர். பிரபல பர்மிய நூலாசிரியர்களால் பர்மிய பாஷையில் எழுதப்பட்டுள்ள நூல்கள் பலவற்றிலிருந்தும் ஆங்கில சரித்திர ஆராய்ச்சி நுணுக்கங்களைக் கொண்டும் வீர பர்மியர் விஜயம் என்னும் பெயருடன் இப் புதிய நூலை தமிழுகத்திற்குக் கொண்டு வந்துள்ளேன். சிறியேனுடைய ஜீவிய நாளில் ஆரம்பமாய் எழுதப் பெற்றுள்ள நூல் இதுவொன்றேயாகும். இதனை ஒவ்வொரு தமிழர்களும் வாசித்துப் பயனடைய வேண்டுமென்ற அவாவுடன் சிறந்தை மிகக் கொண்டு எழுதி முடித்தேன். ஐயம் நேர்ந்த போழ்தெல்லாம் பர்மிய ஆசிரியர்களிடம் சென்று கேட்டுத் தெரிந்து கொண்ட பின்னரே, நூலை வெளியிடலானேன். எழுதி முடிப்பதில் சிரமத்தைக் கருதாது எமக்கு துணையாக நின்று உதவி செய்து வந்த அன்பர் திருவாரூர் கே கோவிந்த ராஜுலுவுக்கு யான் என்னுடைய மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்திக் கொள்கிறேன். பர்மாவில் குடியேறியுள்ள தமிழுணர்ந்த மக்கள் அவசியம் இந்நூலைப் படித்துப் பயனடைய பின்வாங்காரகளென்றும் ஒவ்வொருவருடைய கரத்திலும் இது தவழ்ந்து வருமென்றும் பெரிதும் எதிர் பார்த்தவனாய் இதனைச் சமர்ப்பிக்கின்றேன். இதில் குற்றம் குறைகளிருந்தால் அவற்றைச் சிறியேனிடம் அனுப்பி வைக்க கோருகிறேன். அங்ஙனம் செய்தால் அவற்றை அன்புடன் ஏற்று மறு பதிப்பில் சேர்த்து வெளியிடக்கூடும் என்பதை தாழ்மையுடன் அறிவித்து கொள்கிறேன்.

127, 51-வது வீதி,
இரங்கூன். 11-9-31.

C. நாகையா,
ஆசிரியன்.

# அட்டவணை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | முகவுரை ... ... | 1 |
| 2. | பர்மிய வம்ச விளக்கம் ... | 5 |
| 3. | விநாயகர் மகத்துவம் ... ... | 9 |
| 4. | ஷுவேதகோன் பொற் கோவில் ... | 14 |
| 5. | பியுனோட்டி அரசன் ... ... | 18 |
| 6. | பௌங்டின் டே ... ... | 27 |
| 7. | சான் ஸீத்தா Kyan Sittha ... | 31 |
| 8. | மஹா பீஞோர்ச் சோ ... ... | 50 |
| 9. | தல்லாய்ங் மந்திரி ... ... | 54 |
| 10. | தர்ம ஸேட்டீ மன்னர்... ... | 57 |
| 11. | டபின் ஷுவேட்டீ மன்னர் ... | 64 |
| 12. | பர்மிய நெப்போலியன் ... | 88 |
| 13. | சேனாதிபதி மகா பாண்டுலா ... | 102 |

# தமிழ் பர்மா இந்துஸ்தானி

# ஒக்கபிலேரி

---

தாங்கள்

**பர்மா பாஷை**

கற்றுக்கொள்ள பிரியமா? அப்படியானால் "பர்மா - இந்துஸ்தானி" இரண்டு பாஷை ஒக்கபிலேரி என்று தமிழில் அச்சிட்டு வெளிவந்திருக்கிறது அதை வாங்கிப் படித்தால் நன்றாய்ப் பேசக் கற்றுக்கொள்ளலாம். இன்றே எழுதி தருவித்துப் படியுங்கள்.

முதல் பதிப்ப சிலவாகிப்போய் இப்பொழுது புதிய சீர்திருத்தத்துடன் இரண்டாமுறை அச்சிட்டு இருக்கிறோம்.

விலை அணா எட்டு

---

## நவீனகதாபுத்தகசாலை

## இரங்கூன்



ஆசிரியர்.

C. நாகையா.

ஓம்:

# வீர பர்மியர் விஜயம்.

## அதிகாரம் 1

## பர்மிய வம்ச விளக்கம்

ஆதி காலத்தில் பர்மாவில் இந்துனிஸியர்கள் என்னும் ஓர் வகுப்பினர் வசித்து வந்தனர்; அவர்கள் மங்கோலியர் (மலை வாசிகள்) வழி வந்தவர்கள். அவர்கள் விசேஷமாக மேற்கு சீனத்தையே பூர்விக நாடாகக் கொண்டவர்களெனத் தெரிகிறது. கிழக்கு திபேத்திலிருந்து குடியேறியவர்களே, திபேததோ பர்மியர்கள். அவர்கள் வழித் தோன்றியவர்களாய் விளங்கிய மொவன் வகுப்பினரும் மிகுதியாகவே இங்கு வசித்து வந்தனர். அவர்கள் நதி தீரங்களின் வழியே வந்து குடியேறியவர்கள். அவர்கள் பர்மாவில் குடியேறிய கால வரையை நிர்ணயிக்கப் போதுமான சரித்திர ஆதாரம் கிடைக்கவில்லை. தல்லாய்ங் என்றழைக்கப்படும் மொவன் ஜாதியார் பர்மா முழுதும்—விசேஷமாக ஹென்ஸடா பகுதியிலும் குடியேறி வசித்தார்கள். திபேத்தோ—பர்மியர்கள் பரம்பரையில் வந்தவர்கள் பியு, கான்ரான், தெட் என்ற ஜாதியினராய் வழங்கப் பெற்று வரலாயினர். காலத்திற் கேற்றவாராய் தெட் வகுப்பினரை ச்சின்கள் என்றும், கான்ரான் ஜாதியினரை அரக்கானியர்கள் என்றும் அழைத்தனர். பியு வகுப்பினர் தற்போது எங்கும் காணப்படாதிருப்பதால் நசித்து விட்டனரோ வெனவும் ஐயுற ஏதுவாகிறது. அன்றியும்

நாளடைவில் பர்மியர்களாகவே அவர்கள் மாறி விட்டார்களோ வெனவும் கருதவும் முடிகிறது. அவர்கள் தல்லாய்ங்காரர்களால் தென் கிழக்கு திசையிலிருந்து கடற்கரை வழியாய் அழைத்து வரப்பட்டவர்களெனத் தெரிகிறது.

பர்மிய அரசாங்க தஸ்தாவேஜுகள் அமைப்பிற்கு ஆரம்பத்தில் எழுத்துக்கள் வரையும் பழக்கம் தென் இந்தியாவிலிருந்து பியு வகுப்பினரால் கொண்டு வரப்பட்டதெனத் தெரிகிறது. அஞ்ஞான்று இந்திய நாகரிகமே யாவற்றிலும் வெளி நாடுகள் முழுதும் பரவி மிளிர்ந்த தெனவும் இதனால் கொள்ளக் கிடக்கிறது. அக் காலத்தில் பியு வகுப்பார் உபயோகித்த எழுத்துக்கள் பம்பாய், கோவா கடற்கரைப் பகுதிகளில் வழங்கி வந்ததான சடம்ப ஆட்சி மாலையில் உள்ள எழுத்துகளாக இருந்தன. இக் காலத்தில் இந்திய நாகரிகம் முதன்மை பெற்றதாய் விசேஷமாக திகழா திருப்பினும் பண்டைக் காலத்தில் வெளி நாடுகளில் துலங்கிய சட்டம், கல்வி, நாகரிகம் முதலிய யாவற்றிலும் இந்தியாவே வழி காட்டியாய்—மூலாதாரமாய் இருந்தது. புராதன இந்தியர்கள் வங்காளம் முதல் பார்னியோ தீவின் பகுதிகள் வரை தொடர்ந்தாற் போலுள்ள சிறு தீவுகளிலும் ஜாவா, சுமத்திரா முதலியவற்றிலும் தங்கள் இராஜ்ஜியத்தை நிறுவினர். அவர்கள் சிறு வர்த்தகத்தை முன்னிட்டே முதலில் குடியேறி, பின்னர் தங்களின் திறமையால் ஆட்சியை ஆங்காங்கு நிறுவலாயினர். இவ்விதமேதான் புரோம், இரங்கூன், தட்டோன் முதலிய இடங்களிலும் தங்கள் ஆட்சியை அமைத்தனரெனத் தெரிகிறது. ஷ்வேவே ஸெட்டோ, ஷ்வேதகான் பொற் கோயில் ஆகிய வற்றின் அமைப்பு கோளங்கள் இந்திய நூற்களின் ஆதாரவைக் கொண்டே எடுத்து அமைக்கப்பட்ட தெனவும் புரா

தன இந்திய சரித்திரங்களில் காணப் பெறுகிறது. ஐரோப்பா கண்டத்தில் அமைத்துள்ள கிறிஸ்துவக் கோயில்களுக்கு ஆங்கிலப் பெயர் ஒன்றும், உரோம் பாஷைப் பெயர் ஒன்றுமாக அமைந்திருப்பதைக் காணலாம். அதுபோல் பர்மாவில் புராதன காலந் தொட்டே இந்தியர் சம்பந்தம் இருந்து வந்ததை மெய்ப்பிக்க, பிரதம நகரங்களுக்கு சமஸ்கிருதம் அல்லது பாலி பாஷையிலுள்ள இந்தியப் பெயர் ஒன்றோடு பர்மியப் பெயரும் சேர்ந்து திகழ்வது இன்றும் நேரில் அறியக் கூடியதாகும். உதாரணமாக பர்மா இந்து தேச சம்பந்தமான பெயர்களில் சில வற்றைக் கீழே தருகிறோம்.

| பர்மியப் பெயர். | இந்தியப் பெயர். |
|---|---|
| டாங்கோ | கேதுமதி |
| புரோம | ஸ்ரீ க்ஷேத்திரா |
| தட்டோன | சுவர்ண பூமி |
| மாநதலே | இரத்நபுரம் |
| பெகு | உஸ்ஸா. |

ஒரிஸாவி லிருந்து குடியேறி யிருந்தவர்களே பெகுவில் மிகுந் திருந்ததால, தங்கள் பூர்வ பூமியின் பெயரைக் குறிக்கும் பான்மையதாய் பெகுவுக்கு உஸ்ஸா என்னும் பெயரிட்டனர் போலும்!

குடியேறியவர்களில் ஓர் பகுதியினர் அஸ்ஸாம் சமுத்திரக் கரையோரம் வந்து அப்பர் பர்மாவில் வதியலாயினர். மற்றப் பகுதியினர் கப்பல் பிரயாணத்தின் மூலம் சென்னையி லிருந்து லோயர் பர்மாவில் குடியேறியவர்களாவர். தட்டோன், புரோம், பெகு, ரங்கூன் முதலியவை போன்ற முககிய நகரங்

களில் இந்தியர்கள் ஏராளமாய் குடியேறி வசித்தார்கள். சென்னை சமுத்திரப் பகுதியில் வசித்து வந்த தல்லாய்ங்காரு (திராவிட) என்னும் வகுப்பினரிலிருந்து பிரிந்து வந்த பகுதியினர்களாகவே தல்லாய்ங்காரர்கள் இருந்தாக வேண்டுமென்றும் நிச்சயிக்க ஏதுவிருக்கிறது. அவர்கள் அசல் இந்துக்களைப் போலவே சிறு கோயில்களை ஸ்தூபிகள் சகிதம் கட்டி வைத்திருக்கின்றனர். அக் கோயில்களின் ஸ்தூபி அமைப்புகள் பெகுவில் உள்ள ஷ்வே மோடோ ஸ்தூபியைப் போன்றும், ரங்கூன் ஷ்வே தகான் பொற்கோயில் ஸ்தூபி, தட்டோன் ஷ்வே ஸாரான் ஸ்தூபியைப் போன்றும் திகழ்கின்றன. தங்களின் புராதன கால சம்பந்தத்தை மெய்ப்பிக்கவே இன்றும் இந்தியர்கள் முக்கிய நகரங்களிலெல்லாம் இந்து ஆலயங்களை நிர்மாணித்து சகல சிறப்புகளோடும் திருவிழாக்கள் நடத்தி வருகின்றனர்; எல்லா தொழில்களிலும் இந்தியர் ஈடுபட்டிருக்கின்றனர். இந்து மதத்திலிருந்து பிரிந்த பௌத்த மதத்தைத் தழுவியவர்களான பர்மியர்களின் முக்கிய வழக்க ஒழுக்கங்களில் பல இந்து மத சம்பிரதாயத்தை அனுசரித்தவையாக இருக்கின்றன. புராதன தல்லாய்ங்காரர்களின் நூற்களில் தமிழ் நாட்டின் முக்கிய ஸ்தலங்களில் ஒன்றான காஞ்சிபுரத்தைப் பற்றியும், பிரசித்தி பெற்ற தாமபால மன்னனைப் பற்றியும் அடிக்கடி குறிப்பிடப்பட்டிருக்கின்றன. பல்லவ மன்னர்கள் தமிழ் நாட்டில் ஆட்சி புரிந்த காலத்திலிருந்த அட்சரங்கள் தல்லாய்ங்காரர்கள் நூற்களில் காணப்படுவதாலும் இந்தியர்க்கும் பர்மியர்க்கும் அக் காலத்திலிருந்தே தொடர்ந்து வரும் சம்பந்தம் எளிதில் நனி விளங்கும். இவற்றோடு, சோழ அரசர்கள் தமிழ் நாட்டில் ஆட்சி செலுத்தி வந்த காலத்தில், ஏராளமான பருத்தி உடைகள் அந் நாட்டிலிருந்து பர்மாவிற்கு இறக்குமதி செய்யப் பெற்று வந்தன.

அன்றியும், பர்மிய மதச் சின்னங்கள் வங்காளத்தி லிருந்து கொண்டுவரப் பெற்றன. இவைகளால பர்மியர், வம்ஸத்தாலும், அவர்களின் நாகரிகம், வழக்கம், ஒழுக்கம் முதலிய வற்றாலும் இந்தியச் சார்புடையோரே யாவர் என தெள்ளிதில் கூறத் துணியலாம்

# அதிகாரம் 2.

## வைநாயகர் மகத்துவம்

பர்மா, ஓர் அழகிய நாடாகும். அதன்கண் மாபெரும் மலைகளும் செழிப்பு மிக்க தாவர வர்க்கங்களும், முப்போகம் விளையும் கழனிகளும், பன்னூறு மைல்களை கொண்டுள்ள ஜீவ நதிகளின் ஓட்டமும் இயற்கையின் அமைப்பையும் வனப்பையும் சிறப்பிப்பதாக இருக்கின்றன. இந் நாளில் மேற்றிசை தேசத்தார் உலகச் சுற்றுப் பிரயாணம் செய்வதில் மிகவும் ஆர்வமுடையார்களென்பதைக் கால தேச வர்த்தமானங்களைப் படித்து வரும் வாசகர்கள் நன்கு அறிவர். பர்மாவில் சுற்றுப் பிரயாணம் செய்து திரும்பியவர்களில் ரஷியா தேசத்து இளவரசியும் ஒருவராவர். அவர் பர்மாவைப் பற்றி தமது அபிப்பிராயத்தைக் கூறுகையில், இத் தேசத்தையும் இதன் காட்சிகளையும், பொற் கோபுரங்களைத் தாங்கிய பல்லாயிரக் கணக்கான பௌத்தாலயங்களின் சிறப்பையும், பர்மியரது நடை உடை பாவனைகளையும், அவர்களது கடவுள் பக்தியையும் பார்த்து மிக ஆச்சரியப் பட்டதாய் குறிப்பிட்டுள்ளார். நம் நாட்டில் காலம் கடந்து மழை வருஷிப்பது போல் இந்த நாட்டில் பருவ மழை தடைபடுவதில்லை. பொதுவாக பர்மிய நாடு இயற்கை வளத்திலும், நில வளத்திலும் நிகரற்


றதாகவே காணப்படுகிறது. உலகில் பல்வேறு பாஷைகள் பேசும் சகல வருணத்தவர்களும் இங்கே வசிக்கின்றனர்.

பெண்களின் இயற்கை அழகும் அவர்களின் அலங்காரப் பட்டுடைகளும் மாதர் உலகிற்கே சிறப்பை அளிப்பதாகுமெனச் சொல்லலாம். ஆண் மகன் அநுபவித்து வரும் எல்லாவித உரிமைகளும் பெண்களுக்கு முண்டு. இந்தியாவில் ஸ்திரீகள் அடக்கியாளப் பெறுவதுபோல் இந்த நாட்டில் இல்லை. பர்மியர்கள் மங்கோலியர் வழி வந்தவர்களானதால் அவர்கள் மஞ்சள் நிறத் தோற்றமுடையவர்களாகக் காணப்படுகின்றனர். அச் சமூகத்தவரில் கச்சின், கரீன், தல்லாய்ங், மொகருவி, ச்சின், பல்லெளவுங் என்பதாக ஜாதிப் பிரிவுகள் இருந்து வருகின்றன. பர்மிய சமூகத்தவரும், சரீன்காரரும் தற்கால நாகரிகத்தில் சிறந்து விளங்குகின்றனர். ஆயினும் ஒவ்வொரு ஜாதியினர்க்கும் தனிப் பாஷை ஒன்றுண்டு, அவ்விதமிருந்தும் இந் நாட்டார் பொதுவாக பர்மிய பாஷையைப் பேசும் ஆற்றல் பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்பட்டதன் பின்னர் கரீன் ஜாதியார் தனிப்பட்ட ஓர் சமூகத்தவராகவும், கிறிஸ்துவ மதத்தைத் தழுவியவர்களாகவும், அடிமை உத்தியோக மோப்பம் பிடித்து அதற்காக ஆங்கிலப் படிப்பை விருத்தி செய்து வருபவர்களாகவும் இருந்து வருவதைக் காணலாம். இச் சாதியார் பௌத்த சமயத்திற்கும் இந் நாட்டு தேசிய இயக்கத்திற்கும் நேர் எதிரிடையாக இருப்பதும் வெள்ளிடை மலை. சரீன், பர்மியர்களல்லாத பிற வகுப்பினர்கள் காட்டுமிராண்டிகளாகவும் மலைப் பிரதேச வாசிகளாகவும் தெய்வ பக்தி அற்றவர்களாகவும் இருந்து வருகின்றனர். தென் இந்தியாவில்

சாமுண்டி, காட்டேறி, மூக்கன், இராக்காயி, கருப்பண்ணசாமிப் போன்ற எண்ண முடியாத முனிகளைத் தெய்வங்களாகப் பாவித்து அவைகட்கென சாராயம், கோழி முதலியவற்றைப் படைத்து, அகோர பூஜை செய்து வருவதுபோல், கச்சின், ச்சின் பல்லெளங் ஆகிய ஜாதியினரும் "ன்ஞு" என்னும் ஒருவித பிசாசுத் தன்மை கொண்டுள்ள முனிக் கூட்டங்களைக் "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்ற பழமொழிக் கேற்ப, வந்தன வழிபாடுகள் செய்து வருகின்றனர். இச் சாதியார் தோற்றம் பார்ப்பதற்குப் பெரிதும் விகாரமாய் இருப்பதுமன்றி, முகத்தில் பச்சை குத்தப் பெற்றிருப்பதையும் காணலாம். இவர்களின் கொள்கைகள் பொதுவாக மூடத் தன்மை வாய்ந்ததாகவே இருக்கின்றன. இத்தனை வேற்றுமைகள் செறிந்து காணப்படும் பர்மா தேசத்தில், பர்மியர்களிடை விநாயகர் மகத்துவம் தாண்டவமாடி வருகிறதென்று சொன்னால், அச் செய்தி வாசகர்கட்கு எத்துணை ஆனந்தத்தை ஊட்டுவைக்குமென்பதைச் செப்பவும் வேண்டுமோ! பொதுவாக பர்மியர் தெய்வ வழிபாட்டில் அதிக ஆர்வமும் உறுதியும் உடையவர்கள். பௌத்த மத குருவுக்கு பர்மிய வனிதைகள் பய பக்தியுடன் செய்யும் பணிவிடைகளும், மரியாதைகளும் அளவிடற்பால தன்று. அவர்கள் தான தருமம் செய்வதால் நற்கதியும் மோட்சமும் உண்டென்ற மேம்பாடான சித்தாந்தத்தைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். அச் சமூகத்தவர் எங்ஙனம் தெய்வ பக்தியில் சிறந்தவர்களென்பதை, அயல் நாட்டார் அறிந்து கொள்வதற்கு அவர்கள் நடத்தும் திருவிழா பண்டிகை முதலானவையே போதிய சான்றுகளாகும். பௌத்த மதம் ஹிந்து மதத்தின் கிளையாக இருந்து வருவது போல், பர்மியரும் இந்துக்களால் சிறப்பாக வணங்கப்படும் விநாயகக் கடவுளுக்கு ஆரா

தனை செய்து வருகின்றனர். அமெரிக்கா, ஜப்பான் போன்ற அன்னிய நாடுகளிலும் விநாயகர் பூஜை மிக விமரிசையுடன் நடத்தப்பட்டு வருவதைப் பத்திரிகைகள் வாயிலாக வாசகர்கள் அறிந்திருக்கலாம். ஆதலால், பர்மியர் விநாயகரைப் பூஜிப்பது ஆச்சர்யமல்ல. பர்மாவில் அன்னியர் ஆதிக்கம் வேரூன்றுவதற்கு முன், பர்மிய மன்னர்களால் பௌத்த மதத்திற்கு தக்க ஆதரவு அளிக்கப்பெற்று வந்தது. இந்நாளில் பர்மிய சமூகமும் அதன் சமயமும் சிதைவுண்டு வருகின்றன.

இந் நாளில் இந்தியர்க்குள் ஆலய வழிபாட்டில் பாகுபாடு இருந்து வருவது கண்கூடு. இது வெறுக்கத்தக்க செயலேயாகும். பர்மாவில் ஆண்டுதோறும் நவம்பர் மாதத்தில் விநாயகர் சதுர்த்தி திருநாள் ஆரம்பமாவது முறையாக இருந்து வருகிறது. விநாயகரை "மகா பெய்னே" என்று பர்மியர் தங்கள் பாஷையில் சிறப்புடன் அழைக்கின்றனர். எனினும் அவ் வகுப்பார் விநாயகரை, முழு முதற் கடவுளாகக் கொள்ளாது, ஓர் முனிவராகவே பாவித்து பூசனை செய்து வருகிறார்கள். பர்மியர் இரதத்தின்மீது கணேசரை யெழுந்தருளச் செய்து திருவீதி வலமாக எடுத்துச் சென்று உற்சவங்கள் நடத்தியிருக்கின்றனர். காலச் சக்கர மாறுதலினால் தற்போது பர்மியரும் அம் முழு முதற் கடவுளைக் கிரமமாகப் பூசனை செய்வதில்லை. சமயா சமயங்களில் மட்டும் அவரைத் துதி செய்து வருகிறார்கள். மேலே கூறியுள்ளபடி நவம்பர், டிசம்பர் மாதங்களில் "மகா பெய்னே"



ஷ்வேதகான் பொற் கோயில், இரங்கூன்.

௧

கணேசர் திருவிழாவை பர்மியர் சிறப்பாகக் கொண் டாடுகின்றனர். ஆயினும் விசேஷமாக மாந்தலே என்னும் இரத்ன புரத்தில், காலஞ் சென்ற தீபா மன்னரது ஆளுகையில், விநாயகர் பூஜை மிகச் சிறப் புடன் கொண்டாடப்பெற்று வந்ததாக பர்மிய சரி தைகள் கூறுகின்றன. இவ் விழாவை யொட்டி அரண்மனை வயலில் ஆரம்பமாக நெற்கதிர் அறுவடை செய்து, அதை மன்னரால், அரக்கான் பையாக்கோவி லில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ விக்கினேஸ்வரருக்கு உபயம் செய்விக்கப் பெற்று வந்தது. பின் அத் தானி யத்தை யமுது செய்து பூஜை முகத்தில் சுவாமிக்குப் படைப்பது வழக்கம். அடுத்தபடியாக நெற் தானி யங்களையும், தினை, சாமை முதலியவற்றையும் உபய மாக அரசாங்கத்தின் சார்பில் அளிக்கப் பெறுவது முண்டு. அவற்றைப் போடுவதற்கென எருது போன்றதும், இருல் மீனைப் போன்றதுமான பெரிய பெரிய உருவங்களைச் செய்து அவற்றின் வயிறுகளைக் கூடுபோன்று குடைந்து வைத்திருப்பார்கள். இவை பார்ப்பதற்கு வேடிக்கைக் காட்சியாகவும் தோன்றும். பெருச்சாளி வாகன மொன்றே கணேசரது வாகன மாகுமென்பதை அன்பர்க ளறிந்ததே. அவ்வாறி ருக்க, பர்மியர் மட்டும் ஸ்ரீ விநாயகப் பெருமானை ஆண் மயில் வாகனத்தில் எழுந்தருளச் செய்து திரு வீதி சுற்றிவரச் செய்திருக்கின்றனர். தீபாவின் அரண் மனைக்குச் சுவாமி காட்சி யளிக்கச் செல்வது வழக் கத்தில் இருந்து வந்திருக்கிறது. விநாயகர் தரிசனம் பெற்ற பின்னர், மன்னரால் ஆங்கு குழுமியிருக்கும் ஏழைகளுக்கு வெள்ளித் துண்டுகளும் நீண்ட உரு மால்களும் தானம் செய்யப் பெற்று வந்தது.

# அதிகாரம்—3.

# ஷுவேதகான் பொற் கோவில்.

## நிர்மாண விபரம்

கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 585 ஆண்டுகளுக்கு முன் வங்காளத்தில் ஏற்பட்ட கொடும் பஞ்சத்தின் பயனாய் ஆயிரக் கணக்கான மக்கள் பட்டினிக் கிடந்து மாய்ந்தனர். லோயர் பர்மா (கீழ் பர்மா)வைச் சேர்ந்ததும், அக் காலத்தில் சுவர்ணபூமி என்றழைக்கப் பெற்றதும், தற்காலம் தட்டோன் என்றழைக்கப் பெறுவதுமாகிய நகரிலிருந்து ஈகை குணம் மிகக் கொண்ட பர்மிய தனவந்தர்களில் இருவர், ஏராளமான அரிசிகளை வங்காளத்திற்குக்கொண்டுபோய் பசியால் வாடிய மக்களுக் கீய்ந்து உபகரித்தனர். அவ்விரு பர்மிய தர்ம சீலர்களின் பெயர் டபுஸா, பாலிக்கெட் என்பனவாகும். தங்களின் தர்ம காரியம் முடிந்ததும் இந்தியாவினின்றும் பர்மாவிற்குப் பிரயாணமாக யத்தனித்தனர். அதுபோது அவர்களின் ஈகையால் உவகை யடைந்த ஓர் தேவ தூதர் அவர்களின் முன் தோன்றி புண்ணிய க்ஷேத்திரமாகிய க(யை)யாவுக்குச் சென்று புத்தர் பிரானின் பொற்றுமரைக் கமலங்களைப் போற்றிப் பணிந் துய்யுமாறு கூறினார். தேவ தூதரின் மொழிக் கேற்க இவ்விரு பர்மியரும் கயைக்குச் சென்றனர். அங்கு ஞானத்தரு வென்னும் போதி விருக்ஷத்தின் கீழ் நிர்வி கல்ப சமாதியில் வீற்றிருந்த பௌத்த பிரானை தரிசித்தனர்; பாதாரவிந்தங்களைப் பணிந்தனர். நிஷ்டையில் அமர்ந்திருந்த பௌத்த பிரான் தமது திரு விழிகளால் பர்மிய பக்தர்களை நோக்கி "இம்மையில் நன்மைகளைப் பெற விரும்புகிறீர்களா? மறுமையில் நன்மைகளை யடைய

அவாவுகிறீர்களா?" என வினவ, தர்ம சீலர்களான பர்மியர்கள் "தெய்வீக நிதியையே தேடுகிறோம்" என்று விடை பிறுத்தனர். உடனே புத்தர் பிரான் தமது திரு முடியிலிருந்து எட்டு உரோமங்களைக் கொய்தெடுத்து அவர்களிடம் கொடுத்து, அவற்றை தெய்ங் கொவட்டாரா மலையில், தமக்கு முன்னிருந்த மூன்று பெரியார்கள் விட்டுச் சென்ற தண்டு, கமண்டலம், காவியுடை முதலியவை யுள்ள விடத்தில் அடக்கம் செய்ய வேண்டுமென்றும், ஸாண்டகூன் (Wood oil tree) மரம் தரையில் பதியாமல் நிற்கும் இடை வழியிலேயே அவற்றை அடக்கம் செய்ய வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

இந்தியாவினின்று பர்மாவுக்குத் திரும்பி வந்து சேர்ந்த டபுஸா, பாலிக்கெட் இருவரும் பூந்தட்டான் (போட்டட்டவ்ன்) என்னும் பகுதியை யடைந்தனர். அப்போது அவர்களின் முன் ஓர் தேவ தூதர் தோன்றி சிறிது தூரத்திற்கு அப்பால் ஸூலே என்ற மற்றொரு தேவ தூத ரிருப்பதாயும், அவர் அவர்களுக்கு தெய்ங் கொவட்டாரா மலையைக் காட்டுவா ரென்பதாயும் கூறினார். அதன் பிரகாரமே அவர்கள் அங்கு சென்றனர். (அவ்விடத்தில்தான் தற்போது ஸூலே பொற்கோயிலின் ஸ்தூபி விளங்குகிறது) ஸூலே தேவ தூதர் அவர்களை வட புறமாகச் செல்லுமாறு கூறினார்.

வெகு சிரமப்பட்டு ஆராய்ந்து முடிவில் குறிப்பிட்ட அவ் விடத்தைக் கண்டு பிடித்தனர். பின்னர் தங்கச் சிமிழ் ஒன்றில் பூஜைக் குரிய அச் சின்னங்களை வைத்து அடக்கம் செய்யலாயினர். இந்தப் பொற் சிமிழ் அடக்கம் செய்யப்பட்ட பின்னர்தான் ஷ்வேதகானுக்கு அஸ்திவார மிடப் பெற்றது. நாளடைவில் பர்மிய அரசர்களும், இளவரசர்களும் யாத்ரா மார்க்கத்தில் தங்கள் அரிய வைபவங்களுடன்

இவ் வாலயத்தில் விடுதி யமைத்துத் தங்கினர். அக் காலங்களில் தான் கொஞ்சம் கொஞ்சமாக கோபுரத் தைக் கட்டி முடிக்க ஏதுவாகியது. தற்போது ஆங்கி லத்தில் ராயல் லேக் என்றழைக்கப் பெறும் பிர மாண்டமான ஏரியானது மண்டபங்கள் அமைப்ப தற்காக கற்கள் செய்ய மண் தோண்டி யெடுத்ததா லாய பெரும் பள்ளத்தாக் காகுமென பர்மிய இதி காசங்கள் கூறுகின்றன.

சமுத்திர மட்டத்திற்கு இருநூறு அடி உயரத்தி லமைக்கப்பட்டுள்ள இப் பொற் கோபுரம் பார்வைக் குக் கம்பீரமானதாகவும், காண்போர் உள்ளத்தைக் கவரும் அழகுடன் கூடிய 386 அடி உயரம் வானூ ஓங்கி சூரிய கிரணங்களைத் தொட்டுக் கொண்டிருப் பது போன்று செஞ்சுடரைக் கக்கிக் கொண்டிருக் கும் சிறப்பினைப் பெற்றதாகவும், கடலினூடே செல் லும் கப்பல் வெகு தூரம் சென்று பார்வைக்கு மறை யும் வரையில் பிரயாணிகள் கண்டு களிக்கும் தன்மை வாய்ந்ததாகவும் இருந்து வருகிறது.

இத் தங்க ஸ்தூபியானது உட்புறம் செங்கற் களைத் தவிர, பிறி தெதுவும் சேர்க்கப் படாமல் நெருக்கமாகப் பொருத்திக் கட்டப்பெற்றதும், தங் கத்தாலாய தகட்டு உரையை மேலே போர்த்தப் பெற்றுள்ளதும், தனித தனியே பன்னிரண்டு பிர காரங்களை மேல் பாகத்தில் கொண்டுள்ளதும் குறிப் பிடத் தக்கவை யாகும். ஸ்தூபிக்கு ஆதாரமாக சுற் றிலும் கட்டப் பெற்றுள்ள பல வேறுவித அமைப்பு களை யுடைய சிறு சிறு ஆலயங்களும், பிச்சயாஸ் என்றழைக்கப் பெறும் மூன்று பிரகாரங்களும், மணி யும், பிட்சா பாத்திரமும், தலைப்பாகையும், ஆபரண மாக அமைக்கப்பெற்றுள்ள தாமரை மலரும், வாழை மொக்கும், பித்தளைத் தகட்டா லாக்கப்பெற்ற குடை யும், செயற்கைப் பொருள்களால் செய்யப்பெற்ற

புஷ்பங்களும்; வைரக் கற்களின் கொத்தும் ஆலய அலங்கார வைபவத்திற்கு முக்கிய பொருள்களாக மிளிர்கின்றன. தங்கத்தாலும், இரும்பாலும் பதின் மூன்றரை அடி குறுக்களவு உடையதாயும் நாற்பத்தேழடி உயரமுடையதாயும், தங்கத்தால் செய்யப்பட்ட நாலுக்கு மேற்கொண்ட மணிகள் தொங்க விடப்பட்டதாயுமுள்ள குடையானது பர்மாவை இறுதியாக ஆட்சி புரிந்த பர்மிய மன்னர் தந்தையாரும், பிரசித்திப் பெற்ற அரசருமாகிய மின்டோன் மின்னால் செய்தளிக்கப் பெற்றதாகும். இதன் பெறுமானம் 60,000 தங்க நாணயங்களாகும். 1930-ஆம் ஆண்டில் மே மாதத்தில் 5-ம் தேதியன்று அகில பர்மாவையே அலக்கழித்த பூமியதிர்ச்சியின் வேகத்தால் இவ் வபூர்வக் குடை பிரகாரத்தில் முறிந்து விழுந்தது. இதை ஒன்பதரை லட்ச ரூபாய்கள் வரை செலவு செய்து புதுப்பித்து பௌத்த பிரான் பிறந்த தினமாகிய 1931ஷு ஏப்ரல் மாதம் 21ந்தேதி கஸொவ்ன் பௌர்ணமியில் ஸ்தாபிதம் செய்தனர்.

ஸ்தூபியின் நாற்றிசையிலுமுள்ள சலவைக் கற்களாலாய பிரகாரங்களில் ஜனங்கள் கும்பல் கும்பலாகக் கூடி தெய்வப் பிரார்த்தனை செய்து வருவதை என்றும் காணலாம். தென் திசையிலுள்ள பிரகாரத்திலேயே ஜனங்கள் விசேஷமாகக் குழுமி பிரார்த்தனை செய்து வருகின்றனர். நடைவழியின் இரு மருங்கிலும் அழகிய நங்கைகள் கடைகளில் அமர்ந்து தங்க இதழ்களையும், மெழுகு வர்த்திகள், மணிகள், கண்ணாடிகள், புத்தகங்கள், புஷ்பங்கள் முதலியவைகளையும் இதர பல சாமான்களையும் தங்களின் முன் அழகுபெற அமைத்து விற்பனை செய்து வருகின்றனர். முடிதரித்த பறக்கும் நாகம், இறகுகளோடு கூடிய பெண் உருவம், யானைகளின் உருவம் முதலிய பல

சின்னங்களும், பழங்களோடு கூடிய தங்க மரங்கள், பிட்சா பாத்திரங்கள், பல வர்ணங்களி லமைத்த கண்ணாடிகள், கல்லினாலேயே திறம்பட செய்யப் பெற்ற குடைகள் முதலியவைகள் பிரகாரங்களை அணி செய்கின்றன. இவைகளில் ஒவ்வொன்றும் வேலைப்பாடுகள் மிகக் கொண்ட தென்பதும் மிகை யாகாது. திருவிழா வைபவ தினங்களில் ஆலயத்தில் ஆயிரக் கணக்கான ஜனங்கள் நிறைந்து திகழ்வதை என்றும் கண்டு களிக்கலாம்.

## அதிகாரம்—4.

### பியுஸோட்டி அரசன்

கிறிஸ்து இறந்த 667 ஆம் ஆண்டில் அரிமகனை வென்ற பகான் பட்டணம் நிர்மாணிக்கப் பெற்றது. இந்நகரமானது பர்மாவின் புராதன நகரங்களிற் சிறந்ததாகவும், சரித்திர சம்பந்த முடையதாகவும், எண்ணிறந்த பௌத்த கோயில்களைக் கொண்டுள்ள தாகவும், அந்நாளில் இலங்கியும், இந்நாளில் இலங்கிக் கொண்டுமிருக்கிறது. நகர நிர்மாணத்திற்குப் பின் நாற்பத்தைந்து ஆண்டுவரை ஆட்சி புரிந்து வந்த தமுடி அரசனது ஆட்சியில், பெரிய பெரிய மிருகங்களும் பறவைகளும் நாடு நகரங்களில் பிரவேசித்துக் காடுகளை நாசமாக்கியதன் மூலமாக குடி ஜனங்களிடை ஆர்பாட்டங்கள் செய்துவந்தன. அக்காலத்தில் புலி, பன்றி முதலிய விலங்கினங்களை யெதிர்த்து அவற்றை உயிர் வதை செய்து நாட்டில் பெருங் கீர்த்தியையும், புகழையும் நிலை நாட்டிச் சென்ற வீரர்களில், பியுஸோட்டி என்ற அரசிளங் குமாரனும் ஒருவனாவான். அவனுடைய வீரப் பிரதாபத்தைக் குறித்த சரிதை பர்மியரால் பெரிதும் பாராட்டப்

பட்டு வருகிறது. பர்மியாது சரிதையைத் தொடர்ச்சியாகப் படிக்கும் அன்பர்களுக்குப் பண்டைக் காலத்திய பர்மியர் எத்தனை வீரத்தையும், தியாக புத்தியையும் கொண்டிருந்தார்களென்பது செவ்வியில் புலனாகும்.

அரசிளங் குமாரனின் தந்தையார், பிறிதொரு நாட்டிற்கு அரசனாக விருந்தார். ஆளுகையின் போது, நாட்டில் பிரஜைகளிடை ராஜ்ய—தேசிய சம்பந்தமாகக் கிளர்ச்சி மிகுந் திருந்தமையால், அன்னார் குடிகளுக்குப் பயந்து மலை என்னுமோரிடத்தில் தலை மறைவாகவும், சாமான்யக் குடியானவர்களைப் போல் எளிய வாழ்க்கையை மேற்கொண்டு தோட்ட வேலைகளைச் செய்வதின் மூலமாகவும் ஜீவனோபாயம் நடத்தி வந்தார். இவர் வதிந்து வந்த இடத்தில் வசித்த மற்றக் குடியானவர்கள் நாக சர்ப்பங்களை வணங்கி வந்தார்கள். இத்தகைய மூடக் கொள்கையைக் கையாண்டு வந்தபோதிலும், அதை அன்னார் பொருட் படுத்தவில்லை. அரச தம்பதிகள் மனம் ஒடிந்தவர்களா யிருந்தும், உழுது பயிரிடும் தொழிலை மிகச் சிறப்புடன் செய்து வந்தார்கள். இவ் வெளிய வாழ்க்கையை நடத்திவரும் காலையில் பட்ட மகிஷிக்குக் கருத்தரிக்கும் பாக்கியமும் கிட்டியது. பத்தாவது மாதத்தில் மகாராணியார்க்கு அரசிளங் குமாரன் ஜனித்தான். குழந்தையின் வடிவமானது பால சூரியனைப் போன்று பிரகாசித்தது. சகல வித அம்சங்களும் ஒருங்கே அமைந்து குழந்தையின் முகத் தோற்றம் பொலிவுற்றது. அரசனும், அரசியும் அக் குழந்தையால் அடைந்த சந்தோஷத்திற்கு எல்லையு முண்டோ! குழந்தைக்கு "லோட்டீ" என்ற நாமகரண மிடப்பெற்றது. ஏழு வயதில் அரசிளங் குமாரன் வில் வித்தையில் மிகத் தேர்ச்சி பெற்று ஆஜானு பாகுவாய் விளங்கி

ஞன். இவன் ஆற்றலைக் கண்டு பாராட்டி மகிழ்ந்த பெற்றோர், இவனை ஓர் மகரிஷி வசம் ஒப்புவித்தனர். பாலனைக் கண்ட ரிஷியானவர் திகைத்து, குழந்தையானவன் ராஜ பரம்பரையைச் சேர்ந்தவ னென்றறிந்து, அக் குழந்தைக்கு மன்னர்களுக்குரிய சகலவித கலைகளையும் பயிற்றுவித்து, எதிர் காலத்தில் இவன் ஓர் மன்னனாக பர்மாவின் தென் பாகத்தை யரசாளுவா னென்ற நம்பிக்கை கொண்டு, அவன் பெயரை "மீன்-ட்டீ" எனவும் மாற்றி யழைத்தார். சில் லாண்டுகளுக்குப் பின்னர் மீன்-ட்டீ, ரிஷியினிடத்தில் நல்லாசிப் பெற்று பெற்றோர்களிடம் போய்ச் சேர்ந் தான். பாலப் பருவமும் கடந்தது; யுக்த வயதில் பெற்றோர்களைப் பார்த்து, மீன்-ட்டீ "பெற்றோர் களே! நான் தென் திசை நோக்கி—அதாவது பகான் போன்ற நகரங்களைச் சுற்றி தேச சஞ்சாரம் செய்துவர விரும்புகிறேன்; ஆதலால் நீங்கள் நல் வாழ்த்துக் கூறி, வழி யனுப்புவீர்களாக" வென்று தலை வணங்கிக் கேட்டான். ரிஷி திருவாய் மலர்ந் தருளிய மொழியின் உண்மையை ராஜ தம்பதிகள் ஓர்ந்து, மீன்-ட்டீயைப் சந்தோஷத்துடன் வழி கூட்டி யனுப்பி வைத்தார்கள். அதுபோது அரச னும், தமது குமாரனுக்கு இரத்தினக் கற்கள் பதிப் பித்த வில், அம்பு முதலியவற்றை யளித்து உற்சாகத் தோடு அனுப்பி வைத்தான். யௌவனப் பருவத் தில் தன்னந் தனியே பல்நெடு நாட்களாகக் காடு மலைகளைக் கடந்து பகா னென்ற ஊருக் கருகாமையி லுள்ள, ஓர் குக்கிராமத்தில், புத்திர பாக்கியமற்று அதனால் மனச சோர்வடைந் திருந்த தம்பதிகளி னுடைய குடிசையில், மீன்-ட்டீ சிறிதுகாலம் வசித்து வந்தான். தம்பதிகளோ வெனில் அரசிளங் குமா ரனை ஆசா பாசத்துடன் நேசித்து வந்தனர். இவ்வ வாறாக நாளைப் போக்கி வந்தார்களாயினும் இதற் கிடையில் யுவராஜன், பிதா கொடுத் துதவிய ஆயுதங்

களைப் பரீட்சித்துப் பார்க்க வெண்ணி, தம்பதிகளி டம் தான் காடேறி வேட்டையாடப் போவதாக விளம்பினன். இவன் செப்பிய மொழிகள் தம்பதிக ளிருவரையும் நடுக்குறச் செய்தது. இல்லாளும் இல் லாளும் இவன் மீது வைத்த பாசத்தால் பீதி யடைந் தவர்களாய்ப் பின்வருமாறு கூறினர்கள் :—

"சிறுவ! இப் பகான் பிரதேசத்திற்குக் கீழ்த் திசையில் ஒரு பன்றியானது, 500 ஜதையுள்ள இனங் களுடன் காட்டில் அமர்க்களம் புரிந்து வருகிறது. மேற்றிசையில் ஒரு இராட்சஸப் பறவையோ வெ ளில், 500 ஜதையுள்ள தனது இனங்களுடன் பயிர் பச்சைகளை நாசம் செய்து வருகிறது. தென் திசை யில் ஒரு புலியானது மற்றும் 1000 புலிகளுடன் சேர்ந்துகொண்டு குடியானவர்களின் மாடு கன்றுகளை யடித்துக் கொன்று வேட்டையாடி வருகின்றது. வட திசையில் மிருகங்களின் ஆட்சியே சிறந்திருக்கிறது. இம் மிருகங்களில் பன்றியின் அட்டகாசம் செப்பத் தரமன்று. நாடு நகரங்களில் பன்றியின் ஆர்ப்பாட் டமும், விளை நிலங்களின் சிதைவும் எளியவர்களான குடி மக்களின் மனதைப் புண்படுத்தி வருகிறது. இக் கொடிய விலங்கின் அயர்க்களம் நாளுக்கு நாள் வலுத்து வருகிறது. அத் தேசத்து மன்னனும் மிரு கத்தை யெதிர்த்து ஹதம் செய்வதற் கில்லாது திகைத்து, அம் மிருகத்திற்குப் பிரதி தினமும் அறு பது உண்டைச் சோறும், ஒன்பது வண்டி பூசனிக் காய்களையும், ஒன்பது வண்டி நிறைய தவிட்டையும் கொடுத்து, அதன் ஆபத்தி னின்றும் குடிகளைப் பாது காத்து வருகிறன். இது மட்டுமல்ல; மற்றுமோர் இராக்கதப் பட்சியானது வாயுவேகம், மனோ வேக மாகப் பறந்து சென்று பகான் வாசிகளைத் துன் புறுத்தி தூக்கிச் செல்கிறது. அப் பட்சியையும் அரசன் எதிர்த்துப் போராடுவதற்கில்லை. இதன்

ஆகாரத்திற்காக தினமொன்றுக்கு ஒவ்வொரு கன்னிப் பெண்ணை யளித்து போஷிப்பதாக வாக்களித்து, பிரஜைகளைக் காப்பாற்றி வருகிறான். இதற்கிடையில் ஓர் நாள் அக் கோர சொரூபமுள்ள பறவையானது அரசனிடம் சென்று, 'தனக்கு நாளொன்றுக்கு ஒரு பெண் வீதம் கொடுப்பதால் பசி தாங்க முடியவில்லையென்றும், ஆதலால், ஏழு தினங்களுக்கொருமுறை ஏழு பெண்களை ஏக காலத்தில் புசிப்பதாயின், அதனால் ஒருவாறு பசியடங்கக் கூடு'மென்றும் சொல்லிற்று. அரசனும் அதன் அபிப்பிராயத்திற்கிசைந்தான். இதன் மேல் பறவையும் கடற்கரையணுகி, ஆங்கு ஓடித் திரியும் நத்தை, நண்டு, மீன் முதலியவற்றைப் பிடித்து வயிறு புடைக்கத் தின்ன ஆரம்பித்தது. ஏழு நாட்களுக்கொருமுறை ஏழு பெண்களையும் சாப்பிட்டு வரும். இத் தொல்லைகளுக்கிடையில் புலியும் ஊருக்குள் பிரவேசித்து மனிதர்களை யடித்துக் கொன்று செல்வது முண்டு. பறவையாலும் விலங்கினங்களாலும் பக்களுக்கும், மக்களினுடைய தளவாடச் சாமான்களுக்கும் பெருத்த கஷ்டமும் சேதங்களும் ஏற்பட்டு வருகின்றன. அந் நாட்டில் விலங்கினங்களின் ஆட்சி தோன்றி இற்றைக்குச் சுமார் பனிரெண்டாண்டுகளாகும். ஆதலால் பையா! நீ மிகவும் உஷாராகப் போய் வருவாயாக" வென்று ஆசீர்வதித்து அனுப்பி வைத்தார்கள். இராஜகுமாரன் வைத்திருக்கும் வில்லின் நீளம் மட்டும் ஐந்தடியென்றால், அதன் சுற்றளவையும், அம்பின் நீளத்தையும் நாம் குறிப்பிடாமலேயே அன்பர்கள் நிதானித்துக் கொள்ளக் கூடுமென்று விட்டு விடுகிறோம். "இளங் கன்று பய மறியாது" என்பதை யொக்க பொதுவாக இளைஞர்களுக்கே அச்சமென்பது தோன்றாதெனினும், அரச வம்சத்தைச் சேர்ந்த இவ் விளைஞனுக்கு பயமென்பது ஒரு சிறிதும் தோன்றா திருந்ததைப் பற்றி வியக்கவும்

வேண்டுமோ! எனவே, வில்லாயுதத்தைத் தனது தோளில சுமந்து கொண்டு இளவரசன் கனவேகமாகக் காடு நோக்கிச் சென்றான்.

இருளடர்ந்த காட்டை இராஜகுமாரன் துணிவுடன் கடந்து சென்றானாயினும், அவன முதன் முதலாக பன்றிக் கூட்டங்கள் கூடியிருந்த ஓர் மலையடிவாரத்தைக் கடந்து செல்ல வேண்டியதாயிற்று. அதுகாலை அரசிளங் குமாரனைக் கண்டதும் தலைமையான பன்றி உடல் சிலிர்ப்புக் கொண்டு கோபாவேசத்தால் மலைப் பாறைகளையும, கற்களையும் சல்லி சல்லியாக உடைத் தெறிய ஆரம்பித்தது. தனக்கு முன்பாகக் காணப்பெறும் மா பெரும் மரம், செடி கொடிகளையும் நாசம் செய்தது. கடைசியாக யுவராஜனை நோக்கி விரைந்து சென்று கொல்ல முயற்சித்தது. இதன் செயலைக் கண்டு யுவராஜன் சிறிதும் அச்சங் கொள்ளாது, தன்னிடத்திலுள்ள வில்லாயுதத்தால் அதை வதை செய்வதென்று தீர்மானித்தான். சிறிது நேரத்திற்குள் பன்றியின் உடலை நோக்கி அம்பு எய்யப்பெற்றது கூரிய அம்பும் பன்றியின் குடலைத் துளைத்துச் சென்றது. அதன் பயனாகப் பன்றி உறுமிக் கொண்டே ஐராவதி நதியைக் கடந்து, அக்கரையில் தண்ணீர் குடிக்க இறங்கியது. சத்துருவின் தாக்குதலினின்று உயிர் தப்ப பன்றியானது மிகுந்த வேகம் வாயு வேகமாய் ஓடிய தன் காரணமாக, அதற்கு உஷ்ணம தலைக்கேறியிருந்தமையாலும், அத்துடன் தாகவிடாயை ஆத்திரத்துடன் தீர்த்துக் கொள்ளவேண்டி கொடிய உஷ்ணத்துடனிருந்த நீரைக் குடித்தமையாலும் உயிரை இழக்க வேண்டி நேர்ந்தது. இற்றைக்கும் பர்மியர் அக்கரையை 'உவெக்தேகான்' (பன்றி இறந்த கரை) என்றழைத்து வருகின்றனர். பன்றியின் உடல் அமைப்பாக கொண்ட அது எந்

தகைய பிரமாண்டமான மிருகமென்பதை யன்பர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு கீழே குறிப்பிட்டுள்ளோம். உடலின் நீளம் முப்பது முழமும், அகலம் பதினைந்து முழமுமாகும். பன்றி இறந்துபட்ட மூன்றாம் நாள் அரசிளங் குமாரன் மீண்டும் தனது பிரயாணத்தைக் காட்டினூடே ஆரம்பித்தான். மேற்றிசையில் இராக்கதப் பட்சிக் கென்று ஏழு பெண்கள் அந் நாட்டு அரசனால் வாரத்திற்கொரு தடவை வழக்கம்போல் அனுப்பப்பட்டு வருவதை யொட்டி, அன்றும் ஏழு கன்னிகைகள் அழைத்துச் செல்லப் படுவதைக் கண்டு, இளவரசன் யாது காரணமென வினவினான். விவரம் விளக்கமுற கூறப்பட்டது. உடனே யுவராஜனுக்குக் கோபம் கடலலைபோல் பொங்கிற்று. ஆங்காரத்துடன் "என் போன்றவர்க ளிருந்தும இக் கொடிய பறவைக்கு மானிட வர்க்கத்தை யிரையாக்கச் சம்மதியேன்" எனச் செப்பிக் கொண்டே பெண்களை விடுவித்தான். மாதர்களுக்கு உயிர்ப் பிச்சை யளிக்கப்பட்டதும் அவர்க ளடைந்த உற்சாகத்திற்கு எல்லையில்லை. ஏழு நங்கைகளும் யுவராஜனைப் பார்த்து சிரம் வணங்கி அவருக்காக விசேஷப் பிரார்த்தனையும் செய்தார்கள்.

இவ்வாறிருக்க, அக் கொடிய பறவையும் வயிறபுடைக்க இரை தேடிய பின்னர், வானுயர வளர்ந்திருந்த இரண்டு மரங்களுக் கிடையிலிருந்த ஓர் மரத்தில் இளைப்பாறிக்கொண்டும், பக்கத்து இரு மரங்களின் மீது தனது சிறகுகளை விரித்து வைத்துக் கொண்டும் நாலு பக்கங்களையும் சுற்றிப் பார்த்தது. அச் சமயத்தில், அரசிளங் குமாரன் விரைந்து வந்து கொண்டிருப்பதை உற்று நோக்கியது. உடனே பறவையானது தனக் கிருந்துவரும் விசேஷ சக்திகளனைத்தையும் சிறிதும் அச்சமில்லாது காண்பிக்கத்

தொடங்கி ஆத்திரத்துடன் யுவராஜனைக் கொத்தியது. இதன் செயலைக் கண்ட இளவரசன் திடீரென்று தனது அம்பின் ஆதரவைக் கொண்டு பின் புறமாகத் தாவி யோடினான். ஆனால் பறவையின் எண்ணம் தடைப்பட்டது. பூமியில் அதன் மூக்கு ஆழப் பதிந்துவிடவே நிறைந்திருந்த மண்ணை அது வெளியேற்றியபோது அது ஓர் மலைக் குன்றாகக் குவிந்து விட்டது. அக் குன்று இன்றும் பர்மாவிலிருப்பதைக் காணலாம். அதை பர்மியர் "நெ—ஆன்—டௌன்" என்றழைக்கின்றனர். பறவையின் கொடிய செயலைக் கண்டு இராஜ குமாரன் மனச் சோர்வு கொள்ளாது, தனது ஆயுத பலத்தைக் கொண்டு உடனே அதன் உயிரைப் போக்கினான்.

இராட்சதப் பறவையின் சிறகொன்றைப் பிடுங்கி அதை அந்த ஸ்திரீகளைத் தூக்கிச் செல்லுமாறு இராஜ குமாரன் செப்பினான். அரச குமாரன் கட்டளைக்கு அந் நங்கையர் பணிந்து சிறகை யந் நாட்டு அரசரிடம் எடுத்தேக முற்பட்டனர். சிறகின் பளு அதிகமாக இருந்தமையால் பெண்கள் எடுத்துச் செல்ல முடியாது இடை வழியில் போட்டுவிட்டு அரசனுக்கு நடந்த வரலாற்றை மட்டும்—சவிஸ்தாரமாகச் சொன்னார்கள். சென்ற பனிரண்டாண்டுகளாக தமது இராஜ்பதத்திற்கும், மற்றும் ஜீவராசிகளுக்குப் இடையூறாக விருந்து உண்டு வளர்ந்த விரோதிகள் வின்னால கெய்திய பேராச்சர்யமான பேரானந்தச் செய்திகளைக் கேட்டு அளவிலா சந்தோஷ சாகரத்தி லாழ்ந்தவராய், அம் மன்னர், அவ் விராஜ குமாரனைப் போய்ப் பார்க்கத் தீர்மானித்தார். தமது அரண்மனைப் பரிவாரங்களுடனும் சேனை சைன்யங்களுடனும் காட்டை நோக்கிப் புறப்பட்டார். ஓர் குன்றைப்போல் செத்துக் கிடந்த பறவையைக் கண்டு அரசன் சிறிது அப்புறமாகச் சென்று பார்க்கையில், ஆங்கு இளவரசன் உட்கார்ந்

திருப்பதைக் கண்டார். அவரின் பேரழகின் தோற்றத்தை யுன்னி ஆனந்த சாகரத்தி லாழ்ந்தவராய் நகை முகத்துடன் அன்னாரின் வெற்றிக்காக வாழ்த்துக் கூறி, மார்புறத் தழுவி மிகவும் பாராட்டினார். அதன்மேல் அரசனவர், இராஜகுமாரனைப் பார்த்து குலங் கோத்திரத்தையும், எத்தகைய ஆயுதத்தைக் கொண்டு ஹதம் செய்ய நேர்ந்த தென்பதையும் விசாரித்தார். அதற்கு அரசிளங் குமாரனும் உள்ளதை யுள்ளபடியே கூறினான். அதன் பின்னர், அவ் விளைஞர் ஓர் ராஜ குமார னென்பதை யுணர்ந்த மன்னர், தன் பட்ட மகிஷிக்குப் பிறந்த ஸ்ரீ சந்திர தேவி என்ற தமது புத்திரியை யுவராஜனுக்கு நாடெங்கும் முரசறைவித்துக் கல்யாணம் செய்து வைத்தார். மணவினை நிகழ்ந்த சிறிது காலத்திற்குப் பின் மீன்—ட்டீ இளவரசன் 727-ல் சிம்மாசன மேறினான்.

தமுடி அரசனது ஆளுகையில், கடந்த பனிரண்டு வருடத்தில், நாலாயிரத்து முன்னூற்றிருபது மனிதர்கள் அக் கொடிய விலங்கினங்களுக்கும் பறவைக்கும் இரையாகக் கொடுக்கப் பெற்று வந்ததாகவும் கணக்கிடப் பெற்றிருக்கிறது. இம் மன்னரது ஆளுகையில் விலங்கினங்கள் கொல்லப்பெற்று, அதன் பயனாய் மக்கள் அமைதியோடுங் கூடி வாழ்ந்து வந்ததற் கடையாளமாக ஒவ்வொரு மாதத்திலும் பறவைத் திருவிழா வென்றும், புலித் திருநாளென்றும் அரண்மனையில் சிறப்பாகக் கொண்டாடி வந்தனர். மீன்—ட்டீ அரசன் தமது நூற்றிப் பத்தாவது வயதில் தேக வியோகமானார். இன்னவர் உயரத்தில் ஐந்தடியும், பருமனில் மூன்றடி சற்றளவும் கொண்டிருந்தார். அத்துடன் பத்து யானைகளுக் குரிய பலத்தைக் கொண்ட பாலாட்டியாராகவுமிருந்துள்ளார். இவர் காலத்தில் இரத்த மழை பெய்ததாகவும் சொல்லப்படுகிறது.

# அதிகாரம்—5.

## புஜபல பராக்கிரம முள்ள

## மௌங்டின்டே

[illegible]

*சகோதர வாஞ்சையால் உயிர்துறந்த மாது*


கிறிஸ்து பிறந்த 904-ஆம் ஆண்டில் (அரிமதனுப்பூர்) பகான் என்ற புராதன நகரை அரசாண்டு வந்தவர் தேலி ஜவன்மீன் என்பவராவர். இவருடைய ஆட்சி காலத்தில் டகௌன் நாட்டில் மௌங்டின்டே என்பவர் கொல்லு வேலை செய்து வந்தார். இவர் இளமைப் பருவ முதற் கொண்டே புஜபல பராக்கிரமத்தில் நிகரற்றவராக சிறந்து எங்கும் புகழ் பெற்று வந்தார். இவ் வீர இளைஞர் பிரதி தினமும் படிப் படியாக உணவை அதிகரித்து வந்தமையால் பதினாறு வயதில் நான்கு படி அரிசிச் சாதத்தை யிலகுவில் உண்ணக் கூடியவராகிவிட்டார். ஜீரண சக்தியும் குறைந்துவிட வில்லை. எனவே, நாளடைவில் ஒரு யானையைத் தூக்கிவிடும் வலிமையை இவ் வாலிபர் பெற்றுவிட்டார். யானை தந்தங்களைக் கூட தம்மால் முறித்துவிடக் கூடுமென்று மார்தட்டி வாலிபக் குழாங்களிடை வீரம் பேசி வருவதுண்டு. நான்கு முழ நீளமுள்ள இரும்புக் கம்பி யொன்றை தலைமீது வைத்து, அதை இரு கைகளினாலும் பிடித்து வளைக்கும்போது வில்லைப் போன்று இரும்பு வளையுமென்றால் அப் பாலயருடைய தேக வலிமையைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ!

இத்துணை வீர பராக்கிரமம் பொருந்திய ஒருவரைப் பற்றி, நாட்டில் எங்கும் பேச்சாக இருந்தது. நாளேற ஏற மௌங்டின்டேயைப் பற்றிய வரலாறு

டகௌன் தேச அதிபதிக்கும் எட்டியது. அரசன் பயந்தான். எங்கே தன்னுடைய இராஜ்யத்தைக் கொல்லன் பிடுங்கிக்கொண்டு விடுவானோ என்ற பீதியால், அவனைக் கைது செய்து கொன்றுவிடும்படி மந்திரி பிரதானிகளிடம் மன்னன் கூறினான். அரண்மனையில் அந்தரங்கமாகப் பேசிக்கொண்ட இச் செய்தி எப்படியோ மௌங் டின்டேய்க்கு எட்டிவிட்டது. மரணத்திற்குப் பயந்துகொண்டு ராஜதானிக்குப் புறம்பான ஒரு காட்டிற்குள் தலை மறைவாக வசித்து வருவதெனத் தீர்மானித்து அரண்மனை ஏவலாளர்களிடம் அகப்படாமல் ஓடிவிட்டான்.

மௌங் டின்டே, அரசனுடைய கொடுமைக்குப் பயந்துகொண்டு காடேறி இருந்து வந்தானாயினும் மன்னனுக்குப் பிடித்த திகில் மட்டும் நீங்கியபாடில்லை. அவனைக் கொல்வதற்கான உபாயங்களை மட்டும் அரசன் ஆழ்ந்து சிந்தித்து வரலாயினான். ஓடிப்போன கொல்லனுக்கு ஸோமேயா என்ற உடன் பிறந்த சகோதரி ஒருவள் உண்டு. அம் மாது ராஜதானியில் வசித்து வந்தாள்.

இச் செய்தியும் அரசனுடைய செவிக்கு எப்படியோ எட்டிவிட்டது. உடனே அவன் மனதில் ஒரு யுக்தி தோன்றியது. சீக்கிரத்தில் ஸோமேயாவை அரண்மனைக் கழைத்து தன்னுடைய ராணியாக முடிசூட்டுவித்து அவளுக்கு ஸ்ரீ சந்திரா என்ற பட்டத்தையும் வழங்கினான். சில தினங்களுக்குப் பின் தன் ராணியாகிய ஸோமேயாவுடன் உறவாடிக் கொண்டிருக்கும்போது அரசனவள ‘‘உன்னுடைய சகோதரர் என்னுடைய ஊரை யழிக்கவேண்டுமென்று சதியாலோசனை செய்து வருகிறார். ஆதலால் நீ அவரை அரண்மனைக்கு வரும்படி செய்ய வேண்டும்’’ எனக் கூறினான்.



பர்மிய மன்னர் ஆளுகையிலிருந்த காலாட் படை வீரர்கள்.

அக் கள்ளங்கபட மற்ற பேதை, மன்னனின் நயவஞ்சக சொல்லினுண்மை யறியாது சகோதரனை வருமாறு அழைப்பனுப்பினாள். கொலைக்குப் பயந் தோடிய கொல்லன், உடன்பிறந்த வாஞ்சையாலும் சகோதரியே அரசனின் மனைவியாகி விட்டதால் தனக்கினி ஆபத்து நேராதென்ற தைரியத்தாலும் ஸோமேயாவின் அழைப்பிற்கிணங்க சில தினங்களுக் குள் அவன் வந்து சேர்ந்தான்.

வந்து சேர்ந்ததுதான் தாமதம், உடனே பயங் கொள்ளியான அரசன், ஏவலாளர்களைக் கொண்டு கொல்லனைக் கைது செய்தான்.

அரண்மனைக் கோட்டைக் குள்ளிருந்த ஒரு மரத்தில் மௌங் டின்டேயைக் கட்டிவிட்டு, கட்டை விறகுகளை நான்கு புறங்களிலும் சுற்றி யடுக்கி, அரச னுடைய கட்டளைக் கேற்ப ஏவலாளர்கள் தீ மூட்டி விட்டனர். அந்தப்புறத்தி லிருந்த அரிவைக்கு சகோதரன் கொல்லப்படும் செய்தி எப்படியோ எட்டி விட்டது. ஸோமேயா அழுதாள், புரண்டாள், மோதினாள், கீழே விழுந்து ஏங்கினாள், 'என்னா லன்றோ அண்ணன் ஆபத்திற்காளானார்' என்று தலை விரி கோலமாக ஓடோடி அலறிக்கொண்டே சகோ தரன் மாண்ட தீயில் பாய்ந்தாள்.

அப்போது மன்னன், ஸோமேயா தீயில் பாயும் போது அவளைக் காப்பாற்ற வெண்ணி தாவிப் பிடித் ததாகவும், அதனால் ஸோமேயாவின் கூந்தல் மட் டும் கைப்பிடிக்கு எட்டியதாகவும் சரிதையில் காணப் பெறுகிறது.

அவ்விரு சகோதர, சகோதரியும் மாண்டு சாம்ப லான போதிலும், அந்த இடத்தில் அவர்கள் ஆன்மா முனிகள் தன்மையில் வசித்து வந்ததாகவும், அவ்

விடத்திற்கு மிருகங்களாயினும் சரியே, மனிதராயினும் சரியே சென்றால் உடனே உயிருக்கு மோசம் விளைந்து வந்ததாகவும், அதன்மேல் அரசனானவன் மரத்தை அடியோடு வெட்டிச் சாய்த்து அதை ஐராவதி ஆற்றில் மிதக்கவிட்டதாகவும், அதைக் கண்ட பகான் நாட்டு அரசரான தேலி ஜவ்ன் மீன்ஜீ என்பவர், அம் மரத்தை யெடுத்து அதில் கொல்லனுடைய உருவத்தையும், அவனுடைய சகோதரியும் கட்டழகியுமான ஸோமேயாவின் உருவத் தோற்றத்தையும் செதுக்கச் செய்து அவ்விரு உருவச் சிலைகளையும் போப்பா மலையில் வைக்கும்படி கட்டளையிட்டதாகவும், அரசனுடைய ஆக்ஞையின்படி ராஜதானி அதிகாரிகள் அவற்றை யெடுத்தேகி மலையில் பிரதிஷ்டை செய்ததாகவும், அதன் பின்னர் ஆண்டுதோறும் குடிகளால் அங்கே திருவிழாக் கொண்டாடப் பெற்று பூஜிக்கப்பட்டு வந்ததாகவும் சொல்லப் பெறுகிறது. இந்திர தேவ (தஜாமின்) னுக்கு அடுத்த படியாக நடின்டேயும் ஸோமேயாவும் பூஜிக்கப் பெற்றனர். ஸோமேயாவுக்குப் பர்மிய பாஷையில் மற்றுமோர் திருப் பெயர் உண்டு. அது "ஷூவே மியென்ஞ" (பொன் முகம்) என்றழைக்கப்பெறுகிறது.

குறிப்பு:—போப்பா மலையானது அப்பர் பர்மாவைச் சேர்ந்த மீஞ்சான் ஜில்லாவி லிருக்கிறது.

# அதிகாரம்—6.

## சான்வலீத்தா

கி. பி. 1035-ஆம் ஆண்டில் பகானில் அரியாசனத்திலமர்ந்த அநோரட்டா மன்னர் காலத்தில் வீர புருஷர்கள் நால்வர் தோன்றினர்கள். அவர்களில் ஒருவராகிய சான்ஸீத்தாவைப் பற்றிக் கீழே விவரிப்போம்.

### சான்வலீத்தா

அநோரட்டா மன்னருக்கு முதல் மனையாளிருந்தும், தக்க விடத்துப் பெண்ணொருவளை மறு தாரமாய் மணக்கக் கருதினமையால், முற்காலத்தில் இந்தியாவின் ஓர் பகுதியாய்த் திகழ்ந்ததும், அரக்கானிலுள்ளதுமாகிய வேசாலி பட்டணத்தை ஆட்சிபுரிந்துவந்த மன்னரின் புதல்வி பஞ்சகல்யாணியை திருமண முடிக்க ஆவன செய்யப்பெற்றது. எனவே, பஞ்ச கல்யாணி, எண்பது சேடியருடன் பர்மியத் தலைநகருக்கு அவளது தந்தையால் அனுப்பி வைக்கப் பெற்றாள். அநோரட்டாவின் தூதுவன் பஞ்ச கல்யாணியின் ரூபலாவண்யத்தைக் கண்டு மோக மிகக் கொண்டு அவளோடு அளவளாவுவதில் ஆர்வங் கொண்டான். தன்னுடைய மனோ பீஷ்டத்தைப் பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு அநோரட்டா மன்னரிடம் பஞ்சகல்யாணியைப் பற்றி குறைப்பாடு கூறினன். அரசன் அத் தூதனின் வார்த்தைகளில் நம்பிக்கை கொண்டவனாய் அவளைப் புறக்கணித்து பயெய்ன்மா என்ற விடத்தில் வசித்து வந்தவரான பயெய்ன்மா மந்திரி என்பவரின் உபசாணையில் விட்டு வைத்திருந்தான். இச் சம்பவம் நிகழ்வதற்கு முன்னரேயே அநோரட்டாவின் சேர்க்கையால் பஞ்ச கல்யாணி கர்ப்பம் தரித்திருந்தாள். அவள் நிறை

கர்ப்பிணியானதும் பூமியும் கடுமையாய் குலுங்கிற்று. பூமியதிர்ச்சிக்குக் காரணம் யாதா யிருக்குமென்பதை அறிவதில் அவாவுற்ற அநோரட்டா மன்னர் அறிஞர் பெரு மக்களை அரச அவைக்குத் தருவித்தார்; அவர்களைப் பூமியதிர்ச்சிக்குக் காரணத்தைக் கூறு மாறு கேட்டதற்கு, அவர்கள் "எதிர்காலத்தில் இராஜீய பரிபாலனம் செய்யப்போகும் ஒருவர் வட பாகத்தில் கர்ப்பம் தரித்துள்ளதே இதற்குக் கார ணமாகு" மென்று கூறினர். அம் மொழிகளைக் கேட்ட மன்னர் பீதி மிகக் கொண்டவராய் வட பாகத்தில் அது சமயம் கர்ப்பிணிகளா யிருந்த மாதர் களைக் கொல்லுமாறு உத்தரவிட்டார். அவரின் ஆக் ஞையின் பிரகாரம் கர்ப்பிணிகளா யிருந்து வாளுக்கு இரையான பேதையர் ஏழாயிரத்துக்கு அதிகமாவ ரெனத் தெரிகிறது. ஆயினும், பஞ்சகல்யாணி அக் கோர வாளுக்கு இரையாகாமல் தப்பினாள்; இது மிக்காச்சர்யமே! இக் கோரக் கொலைகள் முடிவுற்ற பின்னர், அநோரட்டா மன்னர் அறிஞர்களை நோக்கி எதிர்கால மன்னனைக் கருவுற்றிருந்தவள் சிதைவுண் டாளா வெனக் கேட்டார். அதற்கு அறிஞர்கள், அவன் அழிவுறவில்லை யென்றும், அவன் சுகமே ஜனனமாகி விட்டானென்றும் கூறினர். அதைக் கேட்ட அரசன முன்னிலும் பன்மடங்கு பீதி கொண் டவனாகி தொட்டிலிற் கிடத்தியுள்ள குழந்தைகள் யாவற்றையும் கொல்லுமாறு ஆக்ஞைப் பிறப்பித் தான். இச் சிசு வதை நிகழ்ச்சியால் ஆறாயிரம் பா லர்கள் உயிர் நீத்தனரெனத் தெரிகிறது. எனினும், குறிப்பிட்ட குழந்தை அவ் வதையினின்றும் தப்பி யது. "தூக்கு மாத்திற்கென பிறந்தவன் தண்ணீ ரில் சாகான்" என்ற ஆங்கிலப் பழமொழிக் கேற்ப, பிற்காலத்தில் பேரரசனையும் பெரும் புகழெய்தி மா பெரும் வீரனையும் திகழ்வதற்கென பிறந்துள்ள சிசுவாகிய சான்ஸீத்தா அநோரட்டாவின் ஆக்ஞைக்

கும் கொலைஞரின் கூரிய வாளுக்கும் தப்பியதில் விந்தை யாதுளது? பின்னும், அநோரட்டா இது பற்றி அறிஞர்க் குழுவினரை வினவியதில் அவர்கள் “அவ் வருங்கால மன்னன் மாடு மேய்க்கும் சிறார் பிராயத்தை அடைந்திருக்கின்றான்” எனச் செப்பினர். உடனே அநோரட்டா அப் பிராயத்திய சிறார்களைக் கடு வதை புரியுமாறு உத்தரவிட்டான். இவ்வுத்திரவின் பயனாய் ஐயாயிரம் சிறார்கள் உயிர் துறந்தனர். எனினுமென்? குறிப்பிட்ட சிறுவனாகிய சான் ஸீத்தா எவ்விபத்திற்கும் இலக்காகாது உயிர் வாழ்ந்தே வந்தான். பௌத்த சமயக் கோட்பாட்டின்படி. பஞ்ச கல்யாணி தன் அருஞ் செல்வனை புத்தர் சங்கத்தில் சந்யாசம் பெற்றுக்கொள்ளச் செய்தாள். அநோரட்டா மன்னரின் அவைக் களத்தே அமர்ந்த அறிஞர்கள் அரசன் மீண்டும் கேட்ட கேள்விக்கு விடையிறுக்கு முகத்தான் வருங்கால மன்னன் தற்போது சந்யாச கோலம் பூண்டுள்ளதாய் குறிப்பிட்டனர். அதனால் பீதி கொண்டு அவனை அறிவது எங்ஙனமென அரசன் வினவ, அறிஞர்கள் அளித்த பதிலில் சந்யாஸத் திருக் கூட்டத்தார்க்கு உணவளிக்கும் வைபவம் நடத்தி அதுபோது தண்ணீர்ப் பருகச்செய்யவும் அவ்விதம் பருகுங்காலை எவர் நாவில் சக்கரம் திகழ்கிறதோ அவரே வருங்கால அரசரென அறிய ஏதுவுண் டெனவும் செப்பினர். அதைக் கேட்ட அரசன் மற்றும் ஓர் ஐயம் கொண்டவனாய், அறிஞர்க் குழுவினரை விளித்து அவ்விதம் அவ் வருங்கால மன்னனைக் கண்டு பிடித்துவிடுவதாகவே கொள்வோம். அவன் என் ஆட்சியை தன் வயமாக்கிக் கொள்வானா வென்பதை உரையுங்கள் எனக் கேட்டான். அதற்கு அறிஞர்கள் தங்கள் ஆட்சி முடிவுற்ற பின்னர் மற்றொருவர் இந் நாட்டை அரசாளுவாரெனவும், அதன் பிறகுதான் அவ் வருங்கால மன்னன் சிம்மாசன மேறி செங்கோ லோச்சுவா

ரெனவும் புகன்றார்கள். இவ் விபரத்தைக் கேட்ட அநோரட்டா மன்னன் மேனி சிலிர்த்தவனுனான்; சோகம் மிகக் கொண்டான். துயரம் நிறைந்த குரலில் இவ் விபரத்தை இப்பொழுதுதானே உரைக்கிறீர்கள்?. இதற்கு முன்னரேயே இவ்வளவு தெளிவாக விஷயத்தை உணர்த்தி யிருப்பீர்களே யாயின், அநியாயமாக பல்லாயிரக் கணக்கான ஜீவன்களை வதை செய்ய நேர்ந்திராதே! எனச் செப்பினன். அதன் பின்னர், அறிஞர்கள் உரைத்த உபாயத்தின்படி அரசர் அன்னமளிக்கும் வைபவம் நடத்தி சந்யாசக் கோலம் பூண்டிருந்த பிற்கால மன்னன்—சான் ஸீத்தாவைக் கண்டு பிடித்தார். அவரைத் துறவறத்தினின்று இல்லறத்திற்கு மாற்றி தமது அரண்மனையிலேயே தன்னுடன் வதியச் செய்தார்.

## ஙட்டுவேயூ

இவர் மிய்ன்மூ என்னும் ஊரில் பிறந்து வளர்ந்தவர். ஆயிரம் பனை மரங்களில் ஏறி சொற்ப நேரத்திலேயே அவற்றிலுள்ள காய்களைப் பறித்து வீழ்த்தும் திறமை வாய்ந்தவர். ஒன்றின் உச்சியிலிருந்தே மற்றொன்றின் உச்சியைத் தாவிப் பிடிக்கும் துணிபு கொண்டவர். இவ் வரிய துணிகரம் வாய்ந்தவரைப் பற்றி அநோரட்டா மன்னர் கேள்வியுற்றிருந்தாராதலின், அவரையும் தருவித்து தன் அரண்மனையிலேயே வைத்துக் கொண்டார்.

## ஞியவ்ன் வூப்பி.

இவர் ஞியவ்ன்வூ என்ற இடத்தில் பிறந்தவராவர். இவர் ஒரு சமயம் ஞியவ்ன்வூ என்ற ஆற்றங் கரைக்குச் சென்று அங்குள்ள செங்குத்தான பாறையொன்றின் மேலே ஏறி துணிகரமாக வெகு தூலவிலிருந்த தண்ணீரில் பாய்ந்து அவ்ந்தா என்ற அக்கரையை யடைந்தார். இவ் அவ்ந்தாக் கரைக்கும்

இவர் பாறையிலிருந்து வீழ்ந்து வந்த கரைக்கும் எவ்வளவோ தூரமிருந்தும், அவற்றைப் பொருட் படுத்தாதவராய், மீண்டும் அவ்ந்தாக் கரையிலிருந்து நீந்தியே அக் கரையை யடைந்தார், ஞியவ்னூ என்ற செங்குத்தான மேட்டிற்குக் களைப்பென்பதே இல்லாதவராய் கீழிருந்து மேலும் மேலிருந்து கீழுமாய் ஓடுவதும் வருவதுமாய் இருந்து வந்தார். இவ் வாச்சர்யமான செய்தியையும் செவியுற்ற அநோரட்டா, இவ் வீர இளைஞரையும் தனது அரண்மனைக்கு அழைத்துக் கொண்டார்.

## ஙல்லோவ்ன் லேப்பே.

இவர் போப்பா என்னுமிடத்தில் பிறந்தார். இள வயது அடைந்ததும் உழுவதில் புகழ் பெற்றார் முப்பது ஜதை மாடுகளை ஒரு கலப்பையில் பூட்டி ஏற்றம் இறக்கங்களிலும் திறம்பெற உழுவார். இவ் வபார நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற அநோரட்டா இவ் விளைஞரையும் தருவித்துத் தனது அரண்மனையில் வைத்துக்கொண்டார்.

## நால்வரின் வீரம்

ஒரு சமயத்தில் லேட்டொவ் என்ற இடத்தில் சேணம் கட்டிய குதிரைகள் நான்கு திரிந்து கொண்டிருந்தன. அவைகள் மனிதர்கள் வசமே அகப்படாது பயங்கரமான வகையில் எதேசசையாய் திரிந்தன. இக் குதிரைகளுக்கு உரியவர் எவரும் இல்லை யெனவும் தெரிந்தது. மூர்க்க மிக்க இவற்றைப் பற்றிய செய்தி அநோரட்டா மன்னர் செவிக்கும் எட்டியது. எனவே, அவர் தமது போஷணையில் உள்ள நான்கு வீரர்களையும் அனுப்பி அவற்றைப் பிடித்து வருமாறு ஆக்ஞாபித்தார். அரசர் உத்தரவிற்கிணங்கி அந் நான்கு வீரர்களும் பலவித உபாயங்களையும் அநுசரிதது முடியாமற் போகவே, முடி

வாக ஓர் சூழ்ச்சி செய்தனர். அச் சூழ்ச்சியின் பயனாய் அக் குதிரைகள் அவர்கள் வயப்பட்டன. வேலி போன்ற கரைகளையுடைய சிற்றோடை யொன்றினுள் அவற்றை விரட்டி யடித்து திக்கு முக்காடச் செய்து பின்னர் அவற்றின் மீது ஏறி உட்கார்ந்து வெளியேற்றிக் கொண்டு வந்தனர். தனது வீரர்களின் திறமையைப் பாராட்டிய மன்னர், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குதிரை வீதம் அவர்களுக்கே அளித்துவிட்டார். அவ் வீரர்களுக் களிக்கப் பெற்றவற்றில சான் ஸீத்தா அடைந்த குதிரையின் பெயர் மனோபலம் என்பதாகும். ஙல்லொவன் லெப்பே பெற்றதின் பெயர் ஆகாய சாரதி என்பதும் ஙட்டுவேயூக்குக் கிடைத்ததின் பெயர் மனோ வேகம் என்பதும் ஞியவ்ஹூப்பிய்க்கு அளிக்கப்பட்டதின் பெயர் இணையற்ற மனோவேகம் என்பதுவுமாகும்.

அநோரட்டா மன்னர் வீற்றுவந்த குதிரையின் பெயர் கண்டிகர லெல்லா என்பதாகும். அநோரட்டா தட்டோன் மீது மகா உக்கிரமமாகப் போர் செய்தபோது இந நான்கு வீரர்களும் திறம்பெற முன்னணியில் நின்று யுத்தம் நடாத்தினர். ஒரு காலத்தில் லாவ்ஷான் வீரர்க ளென்போர் உஸ்ஸா பெகு என்னும் நகரில் நுழைந்து யுத்தம் செய்ய முற்பட்டனர். எனவே, உஸ்ஸா பெகு மன்னர் அநோரட்டா அரசரின் உதவியை நாடினார். அநோரட்டா மன்னர் உஸ்ஸா பெகு மன்னருக்கு நான்கு இலட்சம் குதிரைப் படையினரை அனுப்பி உதவுவதாக செய்தி அனுப்பினார். பிறகு தமது வீரர்கள் நால்வரையும் உஸ்ஸா பெகுவுக்கு அனுப்பிவைத்தார். நான்கு இலட்சம் குதிரை வீரர்களடங்கிய சேனா சமுத்திரத்தை யெதிர் பார்த்திருந்த உஸ்ஸா பெகு மன்னர், குதிரை வீரர்கள் நால்வரே வருவதைக் கண்டு மனக்கிலேச மடைந்தார். அநோரட்டா

மன்னர் ஏய்த்துவிட்டாரோ என்றும் சோகித்தார். வந்த வீரர்களோ, தங்களைப் பற்றி உஸ்ஸா பெகு மன்னர் கொண்டுள்ள நோக்கத்தை யறிந்தவர்களாய் சாதாரண வீரர்களைப் போல் தங்களையும் எண்ணி விட்டதைக் கருதி ஆக்ரோஷம் மிகக் கொண்டவர்களானார்கள். பெரிதான வெள்ளரித் தோட்டமொன்றினுள் புகுந்து அங்கிருந்த காய்களைப் பறித்துப் புசித்தனர். புசித்ததோடு, தோட்டத்தையே சின்னா பின்னப் படுத்திவிட்டனர். இவர்களின் உத்வேகத்தைக் கண்ட அரசனும் குடிமக்களும் பேராச்சர்யத்தின் வயப்பட்டவர்களாய், இவர்களின் அதிவீர பராக்கிரமச் செயலை மனதாரப் பாராட்டினர். அரசனும் அவர்களுக்கு தக்க சன்மானம் அனுப்பி வைத்தார். இதற்கிடையில் யானைப் படை, குதிரைப் படை, காலாட் படை முதலியவற்றை அபரிமிதமாய்க் கொண்டு உஸ்ஸா பெகுவை யெதிர்த்த லாவ்ஷான் சேனையை இந் நான்கு வீர மணிகளும் சந்திக்கலாயினர். தங்களின் இணையற்ற வீர வலிமையால் பெருமிதமான அப் படையினூடே இந் நான்கு வீரர்களும் புகுந்து எதிரிப் படைகளை திணறுமாறு எதிர்த்து நான்கு பகுதிகளாகப் பிரிந்து போகுமாறு செய்தனர். தங்கள் திறமையால் ஒரு சேனையை நான்கு சேனைகளாகப் பிரிந்து போகுமாறு செய்த இவ் வீர மணிகள் இலகுவிலேயே அப் படைத் தலைவர்கள் நால்வரையும் உயிருடன் பிடித்தனர். தலைவர்கள் எதிரிகள் வசம் சிக்கிவிட்டமையால் படை வீரர்கள் எதிர்த்து நிற்க இயலாதவர்களாய் தங்கள் வசமிருந்த ஆயுதங்களை ஆங்காங்கு வீசி எறிந்துவிட்டு தலை தப்பியது தம்பிரான் புண்ணியமென்று ஓடி மறைந்தனர். ஒப்பற்ற வீர வலிமையால் எதிரிகளைச் சிதறவடித்து வெற்றி மாலையைச் சூடியவர்களாய்த் திரும்பிய நான்கு வீரர்களின் மகிமையை உஸ்ஸா பெகு மன்னர் வாயாறப் புகழ்ந்தார். இவ்

வெற்றிப் பிரதாபத்திற்கு உரியவர் அநோரட்டா மன்னரே ஆவர் என்ற கருத்துடையவராய், தக்க சன்மானத்தை இவ் வீரர்கள் மூலமே அவருக்கு அனுப்பி வைக்க முடிவு கொண்டார். தன்னரும் புதல்வி மணிச் சந்திரா வென்னும் நங்கை கின் ஊவே இதற்குத் தக்க பரிசு ஆவள் எனத் தீர்மானித்தார். இதனிலும் சிறந்த பரிசு வேறொன்றுள்ளதாய் இவர் மனதில் தோன்றவில்லை.

கண்டோர் வியக்கும் கட்டழகும் தங்கத்தையொத்த நிறங்கொண்ட மேனி யழகும் கார்மேகத்தை யொத்த கூந்தல் அழகும் சேல்களை யொத்த விழிகளழகும் மான் கலையை நிகர்த்த புருவத்தின் அழகும் இரு சிறு குன்றுகளை நிகர்த்த ஸ்தன பாரங்களின் அழகும் ஒடிந்து விழுவதைப் போன்று சிறுத்து கைப்பிடியில் அடங்கி விடுமாப்போல் விளங்கிய இடையழகும் அன்ன நடை யழகும் கன்னல் மொழி யழகும என்னும் பல சாமுத்திரிகா லட்சணங்களில் குறிப்பிட்ட சகல அழகுகளையும் நிறையப் பெற்றவளாய்ச் சோபித்த சுந்தரி மணிச் சந்திராவே மன்னர் அநோரட்டாவின் அரச பீடத்தை அணி செய்யவல்லாள் என உஸ்ஸா பெகு மன்னன் ஆராய்ந்தறிந்து முடிவு கொண்டான் போலும்!

## வழியில் வந்த வினை

அநோரட்டாவின் வீரர்கள் நால்வர் வசமும் தன்னருஞ் செல்வி மணிச்சந்திராவை ஒப்புவித்து, அநோரட்டா மன்னரிடம் சேர்ப்பிக்குமாறு உஸ்ஸா பெகு மன்னர் திட்டம் செய்து அனுப்பிவைத்தார்.

வீர திலகங்கள் நால்வரின் பாதுகாவலில் பிரயாணம் செய்துவரும் கட்டழகி மணிச் சந்திரா அந்நால்வரில் ஒருவராகிய சான்ஸீதாவின் மேல் பெருமோகம் கொண்டவளானாள். சான்ஸீதாவின் சத

திய நெறிகளையும் சன்மார்க்க முறைகளையும் அன்னவரின் அதி வீர பராக்கிரமச் செயல்களையும் பற்றி மணிச்சந்திரா முன்னரே அறிந்திருந்தாளானதால், சான்ஸீத்தா தன் அழகில் வலிய சிக்கி, தன் மனோபீஷ்டத்தை பூர்த்தி செய்யான் என்பதை யுணர்ந்தவளாய், தன் சாகஸத்தால் அவனை வயப்படுத்த முயன்றாள். அநோரட்டாவின் அரண்மனையைத் தான் அடைவதற்கு முன்னதாகவே சான்ஸீத்தாவோடு சல்லாபித்துவிட வேண்டுமென்னும் முடிவு கொண்டவளானாள். வீர சிகாமணிகளான இந் நால்வரும் பிரயாணத்தின்போது குறிப்பிட்ட ஓர் காலவரையறையை யேற்படுத்தி ஒவ்வொருவராக அந் நங்கையைப் பாதுகாத்து வந்தனர். இந் நிலையில் மணிச்சந்திராவின் சாகஸ வலையிற் சிக்கி, சான்ஸீத்தா அன்னவளின் மனோபீஷ்டத்திற் கிலக்காகிவிட்டார். சத்திய நெறிகளையும் சன்மார்க்க முறைகளையும் நித்தியமென வெண்ணி, புனித வாழ்க்கை நடத்திவந்த சான்ஸீத்தா இவ்வாறு ஒழுக்கங் கெட்டது முறையாகுமா வென சிலர்க்கு ஐயம் தோன்றலாம். நமது பண்டைக்கால நிகழ்ச்சிகளை அறிவுறுத்தி வரும புராண காப்பியங்களில் இத்தகைய சம்பவங்கள் காணப்படாமலில்லை. வைராக்கிய மிக்க கௌதம (விஸ்வாமித்திர) முனிவரும் மேனகையின் மாய வலையில சிக்கி தமது மா பெரும தபோ வலிமையை யிழந்தார். இந்திரனும் பெண்ணாசையால் பெரு மோசம போனார். விவரிக்கின் பெருகும். ஆகவே, பெண் மாய்கையிற் சிக்கி நெறி முறையில் வழுக்களேற்படுத்திக் கொண்டது பற்றி சான்ஸீத்தாவைக் குறை கூற ஏதுவில்லை. மணிச்சந்திரா சான்ஸீத்தாவோடு சல்லாபித்ததன் உண்மையை யறிந்த இதர மூன்று வீரர்களும் சான்ஸீத்தாவைக் கயிற்றால் பிணித்துக் கட்டி அரச சமூகம் கொண்டு போயினர். சான்ஸீத்தாவைப் பற்றிய குறைப்பாட்டையும் மூவரும் அரசரிடம்

53920

கூறவே, அதனால் கடுஞ் சினமடைந்த அநோராட்டா அயெய்ண்டமா என்னும் எறி கத்தியை எடுத்து சான்ஸீத்தாவை நோக்கி வீசி எறிந்தார். அது தெய்வாதீனமாய் பிணித்துக் கட்டப்பட்டிருந்த கயிற்றில் இலக்குத் தவறாது பாய்ந்தமையால் கட்டு சிதறுண்டது. உடனே சான்ஸீத்தா அவ்வெறி வாளுடன் தப்பியோடிவிட்டார். மன்னவன் கோபத்திற் கிலக்காகாது வீர புருஷனாகிய சான்ஸீத்தா தப்பியோடி மேல் (அப்பர்) பாமாவைச சேர்ந்த சௌம்பியு (சகாயிங் ஜில்லா)வில் தலை மறைவாக வாழலானார். மணிச் சந்திராவின் பிற்கால சரித்திர உண்மைகளை விவரித்துக் காலத்தைத் தாழ்த்ததாது அப் பகுதியை விடுத்து சரித்திரத் தொடர்பில் செல்வோமாக.

சான்ஸீத்தா தலைமறைவாக இருந்த காலத்தில் ஓர் நாள் சூரிய வெப்பம் தாளாதவராய் தோட்டம் ஒன்றினுள் புகுந்து தருக்களின் நிழலில் இளைப்பாறிய சமயம் எலுமிச்சம் பழ வகைகளைக் கொய்தெடுத்தார். அதே சமயம் அங்கு வந்த அத் தோட்டத்திற்கு உரியவரான சந்யாஸியின் உறவினள் தம்புல என்னும் இள நங்கை, சான்ஸீத்தாவைக் கண்டதுமே காதல் கொண்டவளானாள். பிறகு இருவரும் சதிபதிகளாய் வாழ்க்கை நடாத்தி வரலாயினர். இதற்கிடையில் சான்ஸீத்தாவின் பிதா அநோராட்டா காலவியோகமாகிவிட்டார். அநோராட்டா மன்னர், ஆட்சி செலுத்திவந்த காலத்தில் சிலோனை ஆட்சி புரிந்துவந்த முதலாவது விஜயபாகு மன்னன் தமிழ் நாட்டுச் சோழ மன்னர்களின் எதிர்ப்பைத் தாள முடியாதவனாய் பர்மியர் கோனின் உதவியை நாடினான். பின்னர், யுத்தம் ஒருவாறு பர்மியர்கோன் உதவி ஏற்படாமலேயே முடிவுபெற்றது. சிலோன் அரசரின் பௌத்த சமயப் பற்று, நட்புரிமை முதலியவற்றைப் பாராட்டிய பர்மியர்கோன் சிலோன் அரசர்க்கு

வெள்ளை யானைகள், மறை நூல்கள், சங்பாசக் குழு முதலியவற்றை அனுப்பிவைத்தார், அவற்றிற்குப் பதிலாக புத்தபிரான் பல்லை அனுப்பி வைக்குமாறு வேண்டினார். ஆனால் தந்திர சாலியான சிலோன் அரசர் புத்தர் பிரானின் பல்போன்ற பொய்ப் பல்லை தங்கப் பேழையில் வைத்துப் பெரிதான மரக்கலத்தில் ஆடம்பரமாக அனுப்பிவைத்தார். அந்த பல்லை வந்து சேர்ந்த பின் ஆடம்பரத்தோடு அடக்கம் செய்யப்பெற்று அவ்விடத்தில கோபுரமும் அமைக்கப் பெற்றது.

## ஸோலுவின் ஆட்சி.

எனவே, அன்னாரின் மற்றொரு புதல்வராகிய ஸோலு கி. பி. 1042-ல் அரியாசனத்தில் அமர்ந்தார். மணிச் சந்திரா வென்னும வனிதாமணி தந்தைக்குப் பரிசாக அனுப்பப் பெற்றபோது அன்னவளின் சாகஸத்தால் சான்ஸீததா நெறிதவற நேர்ந்ததென முன்னர் விவரித்தோம். பிறகு இவள், அநோரட்டா மன்னருக்கு அரசியாய் அமர்ந்தாள். அதன் பின்னர், ஸோலு, முடி மன்னனான பின் பர்மிய அரசமுறைப்படி தந்தைக்கு மனைவியாளும் தனக்கு மாற்றாந் தாயுமான மணிச் சந்திராவையே தனக்குப் பட்டமகிஷியாக்கிக் கொண்டார். இதனால் பர்மிய அரசமுறை இந்திய முறைக்கு முற்றும் புறம்பான தென்பது தெள்ளிதில விளங்குகிற தன்றோ! புதிய அரசனான ஸோலு, சான்ஸீததாவின் உடன் பிறந்தவனன்று; மாற்றாந தாயின் புதல்வராவர். அமைச்சர் முதல் காவலாளர் ஈறாக யாவருமே ஸோலுவினிடம் விண்ணப்பித்துக் கொண்டதில், ஸோலுவைப் போலவே சான்ஸீத்தாவும் குணக் குன்றானதால் அவரையும் தருவித்து அரண்மனையில் வைத்துக்கொள்ள வேண்டுமென பிரஸ்தாபித்தனர். அதற் கிணங்கி ஸோலுவும் சகோதரராகிய சான்ஸீத்தாவைத் தரு

வித்து அரண்மனையில் வைத்துக்கொண்டார். இஃது இவ்வாறிருக்க, குழந்தைப் பருவத்தில் ஒரு தாயிடத்தில் முலைப் பாலுண்டு பின் தனக்கு ஊழியனாகவும இருந்துவந்த யமன்கானுக்கு, ஸோலு உஸ்லா பெகு என்ற ஊரை இனாமளித்தார்.

"எந் நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம் [உய்வில்லை
செய் நன்றி கொன்ற மகர்க்கு"

என்பதற் கேற்ப, செய்நன்றி மறந்தவனாகிய யமன்கான் சிறிது காலத்திற் குள்ளாகவே ஸோலுவின் மீது படை திரட்டி போரிடலானான். அச் சந்தர்ப்பத்தில் ஸோலுவும் சான்ஸீத்தாவும அச் சண்டாளனுடன் எதிர்த்துப் போரிடலாயினர். துரதிருஷ்டவசத்தால் ஸோலு போர் முனையில் யமன்கானின் கைதியாக பிடிபட நோநதது பின்பு யமன்கான் தண்ணீர்ப் படையின் திறமையாலும் காலாட் படையின் வலிமையாலும் மிய்ன்கயா என்றவிடம் போய்ச் சேர்ந்தனர். யமன்கான் அங்கு படை வீடமைத்துத் தங்கினான். போரில் தோல்வியுற்ற விசனத்தால் மனச் சோர்வடைந்த தமையனின் ராஜதானி தலைநகராகிய பகானுக்கு ஓரிரவு முழுதும் குதிரைச் சவாரி செய்து வநது சேர்ந்தான். அப்போது பகான் நாட்டில் அமைச்சர் குழுவினர் ஸோலு இல்லாவிடினும் சான்ஸீத்தாவாகிய தாங்களே இந் நாட்டை ஆள தகுதியுடையவராவீர். பிறிதெவரும் அருக ராகார் எனச் செப்பிக் கொண்டே சான்ஸீத்தாவை வரவேற்கு முகத்தான் அரண்மனை வாயிலைத் திறந்துவிட்டார்கள். அதோடு அரசர்க் குரிய ஐந்து வித ஆடை அணிகளையும் அவரிடம் சமர்ப்பிததனர். சத்தியமே நித்தியமென்னும கொள்கையைக் கொண்டவரான சான்ஸீத்தா தன்னுடைய தமையன உயிருடன் இருக்கின்றாரா இறந்துபட்டாரா வென்பதை அறிய

முயற்சிப்பதாயும், அதிர்ஷ்டவசமாக உயிரோடிருந்தால் அவரைச் சிம்ஹாசனத்தில் வீற்றிருக்கச் செய்ய தாம் முயற்சிக்கப் போவதாயும் அமைச்சர் கூட்டத்தவர்க்கு பதிலளித்தார். பின்னர், தமக்குச் சமர்ப்பித்திருந்த இராஜ உடைகளையும் அணிகளையும் அரண்மனையிலேயே அலுமாரி யொன்றில் பத்திரப் படுத்திவிட்டு ஸோலுவை மீட்பதற்கு பிரயத்தனம் செய்யலானார். சிறைப்பட்டிருந்த ஸோலுவை வெளியேற்றுவதற்குப் பலவித உபாயங்களைச் செய்த சான்ஸீத்தா ஓரிரவு படை வீட்டிற்குள் தலைமறைவாய் நுழைந்து ஸோலுவைத் தூக்கிக் கொண்டு வெளியேறி ஓடி வரலானார். துரதிர்ஷ்ட சாலியான ஸோலு சான்ஸீத்தாவின் தோளின் மீதிருந்தபடியே தமது பிதாவின் கடுங் கோபத்திற் காளான சான்ஸீத்தா தன்னைப் பழி வாங்கவே அவ்விதம் தூக்கிச் செல்கிறான் என்னும் விபரீத எண்ணம் கொண்டவனாகி கூக்குரலிட்டான். அவ்விதம் அவன் கூக்குரலிட்டதற்கு மற்றுமோர் காரணமும் அவன் மனதில் தோன்றாமல் போகவில்லை. அதாவது யமன்கான் தன்னுடன் ஒரு முலைப்பாலருந்தியவனாதலும், தனக்கு ஊழியனாய் இருந்தவனாதலும் தன்னைக் கொல்லான் என்ற கெடு மதியே யாகும். "ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டொன்றாகும்" என்னுமாப்போல் எதிர்பாரா விதமாய்த் தன்னைக் காட்டிக் கொடுக்கும் ஸோலுவின் செயலை வெறுத்தவனாகிச் சான்ஸீத்தா, "தல்லாய்க்காரன் கையால் நாய் பன்றி சாவதைப் போல் சா" வென்னக் கோபத்துடன் கூறி அவனைக் கீழே வீசி எறிந்துவிட்டு, தப்பி ஓட யத்தனித்தார். அப்போது யமன்கானின் படைகள் தன்னைச் சூழ்ந்து வருவதைக் கண்ட சான்ஸீத்தா மறு கரைப் போய்ச் சேர ஆற்றில் விழுந்து நீந்தினார். இஃது இங்ஙனமிருக்க, ஸோலு அனுமானித்த வண்ணம் இடத்தில் யமன்கானால் படுகொலை செய்யப்பட்டார்.

## யமன்கானின் யமலோக யாத்திரை.

சான்ஸீத்காவின் அபாரத் துணிகரச் செயலைக்
கண்டு மனம் பொறாத யமன்கான் அவனை எவ்வித
மும் ஒழித்து விடுவ தென்ற உறுதிப் பாட்டைக்
கொண்டவனானான். அவன் உயிருடனிருந்தால் தங்
களின் இரத்தம் அவனின் வாளில் தோயுமென்ற
பீதியின் வயப்பட்டவனானான் எனவே, படை
திரட்டி சான்ஸீத்காவை விரட்டிச் செல்வதில் ஆர்
வங் கொண்டான். தண்ணீர்ப் படையை ஐராவதி
நதியில் தன் தலைமையின் கீழேயே நடத்திச் செல்ல
லானான். பிஞ்சான் ஜில்லாவிலுள்ள புவாத்தா கரை
யருகே தண்ணீர்ப்படைகள் படகின் மூலம் சென்று
கொண்டிருந்த போது யமன்கான் வீற்றிருந்த அர
சப் படகு ஓர் மரத்தருகே செல்லலாகியது.
அங்கே சான்ஸீத்காவின் அபிமான மிக்க வில் வீரன்
நசிங்கு என்பவன் யமன்கானை உயிர் வதை செய்ய
சமயம் பார்த்தவனாய் யேத்தமான ஒரு மரத்தின்
கிளைகளி லொன்றில் மறைவாக உட்கார்ந்திருந்தான்.
யமன்கான் வீற்றிருந்த படகு, தான் மறைந்திருக்கும்
மரத்தருகே வந்த சமயம் ஓர் வகைப் பறவை சப்த
மிடுவதைப் போல் தன் குரலால் தொனியுண்டாக்கி
னான் அப் பறவையின் தொனி யமன்கான் உள்
ளத்திற்குப் பரவசம் பயப்பதானதால் அப் பறவை
யைக் காண வேண்டுமென்ற ஆவலால் தலையை வெ
ளிப் புறம் நீட்டி மரத்தை அண்ணார்ந்து பார்த்
தான். அத்தகைய சமயத்தையே எதிர் பார்த்தவ
னான நசிங்கு கணமும் தாமதியாது திறமை வாய்ந்த
தனது வில்லின் மூலம் அவன் கண்ணுக்கு அம்பைக்
குறி வைத்து எய்தான். அதன் பயனாய் யமன்
கான் படகிலேயே உயிர் நீத்தான்.

இந்த யமன்கான் யார் என்பதையும் அவன்

பர்மிய அரச குடும்பத்துடன் எவ்விதம் சம்பந்தம் வைத்துக் கொள்ள நேர்ந்த தென்பதையும் வாசகர்கள் அறிய அவாவுவர். எனவே, அவற்றைக் குறித்தும் ஈண்டு சிறிது வரைவோம். யமன்கான் மகமதியன் ஒருவனின் அபிமான ஸ்திரீ வயிற்றில் உதித்தவனுவன். இவனுடைய தாயார் ஸோலுவைச் சீராக வளர்க்க நியமிக்கப் பெற்றிருந்த பெண்களில் தலைமை வாய்ந்தவளாய் இருந்தாள். எனவே, யமன்கானும் ஸோலுவும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளைப் போலவே இச் சேடியால் சீராட்டிப் பாராட்டி போஷிக்கப் பெற்று வந்தனர். வாலிப பிராயத்திலும் ஸோலு யமன்கானை தன் உடன் பிறந்த சகோதரனைப் போலவே பாவித்து வந்தான். யமன்கானின் கண் ஒன்று பார்வை மங்கியதாய் இருந்த காரணத்தால் யமன்கான் என்று அழைக்கப்பெற்றானென்றும் அவனின் பெயர் ரஹ்மான்கான் என்பதே சரியாகுமென்றும் ஆங்கில சரித்திராசிரியர் ஒருவர் கூறுகிறார். இந்நிலையில் யமன்கான் வசம் கைதியாய் சிக்கியிருந்த ஸோலு சான்ஸீத்தாவினுல் தூக்கிக் கொண்டோடப்பட்ட சமயத்தில் சான்ஸீத்தாவின் மீது அவ நம்பிக்கை கொண்டு கூச்ச லிட்டதினுல் ஸோலு, யமன்கானை எத்தகைய பாந்தத்துவத்தில் நினைத்திருக்க வேண்டுமென்பதை வாசகர்களே ஊகித்துணருமாறு விட்டு விடுகிறோம்.

•

இந் நிலையில் சான்ஸீத்தா பகா நாட்டு அரசுரிமையை யேற்றுக்கொள்ள நேர்ந்தது. தனக்கு அரசுரிமை இதற்கு முன்னரேயே மந்திரி குழுவினரால் வலிய அளிக்கப்பட்டும் தன் தமையனின்பால் கொண்டிருந்த உண்மை அபிமானத்தின் பெருக்கால் அவ்வாறு செய்ய இணங்காதவராய், தன் தமையனையே அவ்வரச பீடத்தி லமர்த்த தன் உயிரையும் திரணமாய் எண்ணி எதிரிகளின் படை வீட்டில் துணிந்து

புகுந்து அவரை மீட்டுவார் முனைந்தா ரெனின் சான் ஸீத்தாவின் சத்திய ஒழுக்கங்களைப் பற்றி எவரே சம் சயிக்க வல்லார்!

கிராமாதிகாரி நட்டீலாய்ன்-

எதிரிகளால் நேர்ந்த ஆபத்தினின்றும் தப்பு விக்க சான்ஸீத்தா ஆற்றில் வீழ்ந்து நீந்தினு ரென்று முன்னமேயே விவரித்திருந்தோம். அன்னவர் ஆற் றைக் கடந்ததும் நட்டீலாய்ன் என்னு மிடத்திற்கு வந்து சேர்ந்தார். அக் கிராமத் தலைவனுக்குச் சொந் தமான வெள்ளரிக்காய் தோட்டத்தைக் கண்ட சான் ஸீத்தா வெள்ளரிக்காய் வேண்டுமென்று கிராமாதி காரியைக் கேட்டார், அதற்கு அக கிராமாதிகாரி சான்ஸீத்தாவைப் பார்த்து, எம்மைப்போல் நீவிர் வழியில்லாத இத் தோட்டத்திற்குள் நுழைந்து வெளி வரக் கூடுமானுல் தாராளமாகச் சென்று உமக் குத் தேவையான காய்களைப் பறித்துப் புசிக்கலாம் என்றார். அத் தோட்டமோ ஒரு யானை உயா முள்ள வேலி யமைக்கப் பெற்றதாயும் சுற்றிலும் வழி அமைத்து விடாது அடைக்கப் பெற்றதாயுமிருந்தது. உள் நுழைய வேண்டுமேயாயின் அவ் வேலியைத் தாண்டியே ஆக வேண்டும். சாதாரண மனிதர்க்கு இது ஓர் அசாத்தியமான காரியமாகும். எனவே, பாலாட்டியாராய் விளங்கிய சான்ஸீத்தாவைக் கண்ட கிராமாதிகாரி தம்மைப் போல் சான்ஸீத்தாவும் வலிமை சாலியாகவே இருப்பா னென்று ஊகித்து அவ்விதம் விடை யிறுத்தார். கிராமாதிகாரி யானை யின் உயரத்திலுள்ள வேலியை அநாதரவாகத் தாண்டி உள் நுழைவது வழக்கம். இதனுல் அன்ன வனின் திறமையும் விளங்குகிறது. கிராமாதிகாரி மொழிந்தவற்றைக் கேட்ட சான்ஸீத்தா தனது வாளாயுதத்தைத் தரையில் ஊன்றி மேல் எழும்பி உள்ளே தாவிக் குதித்தார். பின்னர், தனக்குத் தே

வையான வெள்ளரிக் காய்களைப் பறித்துப் புசித்து விட்டு சிலவற்றைக் கையிலு மெடுத்துக் கொண்டு முன்போலவே வாளாயுதத்தின் உதவியால் வெளி வந்து சேர்ந்தார். இன்னவரின் அபார திறமையைக் கண்ணெதிரே கண்ட கிராமாதிகாரி பிரமிப் படைந் தவராய், இவர் மனித சக்திக்கு மிகைப்பட்டதான ஓர் தனி சக்தியைப் பெற்றவராகவே இருக்கிறரென் னும் திடமான நம்பிக்கை கொண்டவராய் அவரைத் தக்கவாறு உபசரித்துத் தமது புதல்வியை அடிமை யாக அளித்தார். (இதனால் பர்மாவில் பூர்வ காலந் தொட்டே அடிமைப் பழக்கம் அனுஷ்டானத்தில் இருந்து வந்திருக்கிறதென்பது தெள்ளிதில் விளங்கு கிறது.)

இவை நிற்க, நாம் முன்னர் விவரித்தவாறு அநோரட்டாவின் கோபா வேசத்திற் கிலக்காகிய சான்ஸீத்தா எறிவாளுக்குத் தப்பி ஓடி தலைமறைவாக வாழ்ந்த காலத்தில் தம்புலா என்னும் பெண்மணி யுடன் இல்லற இன்பங்கள் அனுபவித்ததின் பயனாய் கர்ப்ப முற்றிருந்தா ளென்பது ஈண்டு குறிப்பிடத் தக்கது.

இச் சந்தர்ப்பத்திலேயேதான் ஸோலு, அநோ ரட்டா இறந்த பின் முடி மன்னனானன்; சான்ஸீத் தாவும் அரண்மனைக்குத் திருப்பி யழைக்கப்பட்டார். ஸோலுவின் அழைப்பிற்கு இணங்கி சான்ஸீத்தா தம்புலாவை விட்டுப் பிரிய நேர்ந்தபோது கர்ப்பிணி யாகிய அவளை நோக்கி, நீ ஆண் மகவைப் பெற்றெ டுத்தால் அக் குழந்தையுடன், தான் முன்னால் அளித் துள்ள மோதிரத்தை அடையாளமாகக் கொண்டு (பகான்) தன்னிடம் வந்து சேர வேண்டுமென்றும் பெண் மகவைப் பெற்றெடுத்தால் விலையுயர்ந்த அம் மோதிரத்தை விற்று ஜீவனம் நடத்திக்கொள்ள

வேண்டுமென்றும் திட்டம் செய்து வைத்துவிட்டுப் புறப்பட்டார்.

பல சம்பவங்களுக்குப் பின்னர், சான்ஸீத்தா பகான் நாட்டு அரசராக வர நேர்ந்தது. அதிர்ஷ்டவசமாக ஆண் குழந்தையை யீன்றெடுத்த தம்புலா குழந்தையோடு சான்ஸீத்தாவின் சமுகம் நோக்கிப் புறப்பட்டாள். அம் மங்கை அரண்மனையை யடைந்த சமயம் சான்ஸீத்தா தர்பார் நடத்திக் கொண்டிருந்தாராதலால் தம்புலா தன் மகனை அரண்மனைக்கு வெளிப்புறத்திலேயே நடக்க விட்டு தானும் அங்கு மிங்குமாக உலாவிக்கொண்டிருந்தாள்.

அதைக் கண்ட அரண்மனைச் சேவகர்கள், ஓ! மாதே அரசர் வரும் நேரமாயிற்று. இங்கே இருத்தலாகாது. அகன்று அப்பால் போவென விரட்டினர் அதற்கு தம்புலா, யான் இப்போது இதை விட்டுப் போவதற் கில்லை. அரசரிடம் நேரில் பலவற்றைப் பற்றி பேசியாக வேண்டியிருக்கிறது. என் காரியம் முடிந்த பின்னையின், செல்லக்கூடும் எனப் பகர்ந்தாள். இதைக் கேட்ட சேவகர்கள் அரசரிடத்தில் இதைப் பற்றி அறிக்கை செய்தனர். அரசர் அம் மாதை அழைத்து வருமாறு ஆக்ஞையிட்டார். தம்புலா தன் புதல்வனுடன் வருவதை மனங்குளிரக் கண்ட மன்னன் நன்றியறிதலோடு அவர்களை வரவேற்றான். புத்திரனை மார்புறத் தழுவி இன்பம் நுகர்ந்தான். அமைச்சர்களின் முன் தம்புலாவைப் பற்றிய விருத்தாந்தங்களை விவரித்து மூவுலக அலங்காரம் என்னும் பொருள் தரும் ஊஸவ்ரான் என்ற சிறப்புப் பெயருடன் அவளை இராணியாக ஏற்றுக்கொள்ளச் செய்தான். புத்திரனுக்கு ஸேயா கேஷத்திரா என்ற திருநாமகரணம சூட்டி, ஏழு மலைப் பிரதேசங்களடங்கிய வட அரக்கானுக்கு அவனை அதிபதியாக்கியும் மகிழ்ந்தார்.

## இந்திய சந்யாசிகள்.

சான்ஸீத்தாவின் காலத்திலேதான் பௌத்த சமயம் இந்தியா பூராவும் பரவியிருந்தது. சையாம் பிரதேசம் வரை பௌத்த சமயப் பற்று மிகைத்திருந்த தெனலாம். பகான் நகரமே பௌத்த சமயத்திற்கு ஓர் மத்திய பாகமாக விளங்கியது. எட்டு இந்திய சந்யாஸிகள் பர்மாவிற்கு விஜயம் செய்திருந்த போது சான்ஸீத்தாவின் விருந்தினர்களாக அவர்கள் மூன்று மாதங்கள்வரை தங்கியிருந்தனர். அதுகாலை அவர்களுக்கு சான்ஸீத்தா விருந்துணவுகளை தன் கையாலேயே பரிமாறினனெனின் அவரின் பெருந்தகைமையை நாம் விவரிக்கவும் வேண்டுமோ! இதனால் அன்னார் மதப் பெரியார்களிடத்தில் கொண்டிருந்த பக்தி பெருக்கும் தெள்ளிதிற் விளங்காமற் போகவில்லை. ஒரிஸ்ஸாவைச் சேர்ந்த உதயகிரி மலை மீதினில் உள்ள பிரசித்தி பெற்ற ஆனந்தா குகைக் கோயிலை நிகர்த்ததும் அதன் ஞாபகத்தை வருவிக்க வல்லதுமாகிய ஆலய மொன்றை ஆனந்தா ஆலயமென்ற பெயருடனேயே பகானில் நிர்மாணித்தார். இதனால் ஆலய நிர்மாணிப்பில் இவர்க்குள்ள அளவு கடந்த ஆர்வம் தெள்ளெனத் தெரிகிறது. ஏறத்தாழ எழுபது வருடங்கள் வரை ஜீவித்திருந்தாரெனத் தெரியவருகிறது. அவர் அநோரட்டாவின் கோபத்திற்கு இலக்காகி தலை மறைவாக வஸிந்தகாலை உற்பவித்த தன் அருமந்தப் புதல்வனைத் தனக்குப் பின் உரிமையாளனாய் ஆக்கிச் சென்றார். பகான நகரில் உள்ள மியாஸேடி பொற் கோயிலில் நிர்மாணிக்கப் பெற்று, இன்றும் திகழும் சிலா சாஸனத்தில் இவ்விபரம் காணப் பெறுகிறது.

# அதிகாரம்—7.

## மாபெரும் அறிஞர்


## மஹா பீஞாச்சேசா

ஏறக்குறைய கி. பி. 1555–ல் இந்திய முஸ்லீம் அரசன் ஒருவன், அரக்கான் அரசன் பலவன் என்பவன் சகல நன்மைகளையும் பெற்றவனும் அபார யுக்தி யனுபவ மிக்க அமைச்சர் குழுவினைப் பெற்றவனும் இருக்கிறானெனக் கேள்வியுற்றான். தான் கேள்வியுற்றதின் உண்மையை அறிந்துகொள்ளும் பொருட்டு நற்குண சீலனை தன் மந்திரி டாகூஸி என்பானை மரக்கலத்தின் மூலம் அரக்கானுக்கு அனுப்பினான். அவ்வமைச்சன் அரக்கான் அரசனிடம் சென்றதும் தான் ஏழு விலையுயர்ந்த கற்களைக் கொண்டு வந்திருப்பதாய் முடிப்பு ஒன்றை யெடுத்துக் காட்டினான். சகல கலா நிபுணரும், மா பெரும் அறிஞருமான மஹா பீஞாச்சேசா என்னும் அரக்கான் அரசரின் அமைச்சர் முஸ்லீம் மந்திரியை நோக்கி சகல தேசங்களிலுமிருந்து அளிக்கப் பெறும் சன்மானங்களைச் சரேலென அரசரிடம் சேர்த்துவிடுவதில்லை யென்றும் தர்பார் ஒன்றைக் கூட்டி ஆங்கு வீற்றிருக்கும் பெருமக்களின் முன்னிலையில் வழங்கப் பெறுவதே முறையென்றும் கூறி, ஸ்தானிகர் விடுதி யொன்றில் அம்முடிப்பை வைத்து தக்க பாதுகாப்பும் ஏற்படுத்தினார். அதன்பின் மஹா பீஞாச்சேசா அரசரிடம் சென்று கூறியதில் முஸ்லீம்கள் என்போர் அதி தந்திரசாலிகளாகையால் எந்தெந்த விதமாகப் பரிசீலனை செய்ய வேண்டுமோ அவ்வாறெல்லாம செய்த பின்பே அம்முடிப்பை சமர்ப்பிக்கச் செய்கிறேன் எனக் குறிப்பிட்டார். அமைச்சரின் நோக்கத்திற்கு அரசரும்

இணங்கினார். பின்பு அமைச்சரானவர் யாரும் அறியாமல் ஸ்தானிகர் விடுதிக்குச் சென்று அம் முடிப்பை சோதிக்க முற்பட்டார். முதலில் அம் முடிப்பை கூர்ந்து கவனித்ததில் தங்க ஜரிகை நூலால் தைப்புவாய் பாகம் தோன்றா விதமாய் அம் முடிப்பு அமைந்திருக்கவே, இதில் காணும் வேலைப்பாட்டால் இதில் ஏதேனும் விசித்திர பொருள் இருக்கவேண்டுமென ஐயுற்றார். உடனே பருத்தி நூலால் தயாரிக்கப்பட்ட நீண்ட துணி மடிப்பு ஒன்றைப் புதிதாக வாங்கி, வண்ணான் ஒருவனிடம் பிரித்துக் காண்பித்தார். அது புதியதும் கிழிவு இல்லாதது மானதென அவன் அறிந்து கொள்ளவே அவ்வாறு பிரித்துக் காட்டினார். அப்போது சாமர்த்தியமாக வண்ணான் பார்க்க இயலாதபடி கத்தரிக்கோல் ஒன்றால் ஒரு ரூபா அளவில் துணியைக் கத்தரித்து விட்டார். அவர் காண்பித்தவாறு அத் துணி எவ்வித குறைப்பாடு மற்றதென நம்பிய வண்ணான் அதை யெடுத்தேகினான். வண்ணான் சலவை செய்த போது வட்டமான கத்தரிப்பு ஒன்று அதில் காணப்பட்டதால் பீதி மிகக் கொண்டான். அரச தண்டனைக்குப் பயந்து தைப்புவாய் தெரியாமல் தைக்கக் கூடிய திறமை வாய்ந்த தையற்காரர்கள் அகப்படுவார்களா வெனத் தேட முற்பட்டான். அவன் நகரின் பல பாகங்களிலும் அலைந்து பின் துறைமுகத்தை யடைந்தான். அங்கு விசாரித்ததில் அவன் நோக்கத்தைப் பூர்த்தி செய்யத்தக்க தையற்காரன் ஒருவன் அகப்பட்டதால் அவன் மூலம் கத்தரிப்பு பாகத்தை தைப்புவாய் தெரியாமல் தைத்து மந்திரியிடம் சேர்த்தான். அதைக் கண்ட மந்திரி வியப்படைந்து அவனிடம் உண்மையைத் தெரிவித்து அவன் மூலம அத் தையற்காரனையும் அறிமுகப்படுத்திக் கொண்டார். அமைச்சர் இந்தியாவிலிருந்து வந்துள்ள சன்மான முடிப்பைப் பற்றி அத்

தையற்காரனிடம் விவரித்தார். அதற்கு அவன், அம் முடிப்பை தைத்தவன் தானே என்றும், அதற் குள்ளடங்கியுள்ள கற்கள் விலை பெறாத வெறுங் கற்க ளென்றும் கூறினான். அவ் வுண்மையை அறிந்த அமைச்சர், இவ் வுண்மையைப் பற்றி வெளியில் பேசலாகாதென அத் தையற்காரன் வாய்க்குப் பணத் தின் மூலம் பூட்டிட்டார்.

மேலும், அமைச்சர் அப் பரிசு முடிப்பை இர கஸ்யமாகவே அரசரிடம் கொண்டுபோய் பிரித்துக் காண்பித்தார் தையற்காரன் கூறியபடியே அம் முடிப்புக்குள் விலை பெறாத ஏழு கற்கள் இருப்பதைக் கண்டனர். ஆகவே ஏழாயிரம் ரூபா பெறுமான முள்ளதான ஏழு கற்களை அம் முடிப்பிற்குள் வைத்து முன்னிருந்தது போலவே அத் தையற்காரன் மூலம் தைத்து ஸ்தானிகர் விடுதியில் இரகஸ்யமாக முன் போலவே வைத்துவிட்டார். முன் குறிப்பிட்டவாறு மஹா பிஞாச்சோ அம் முடிப்பை முஸ்லீம் அமைச்ச ரிடம் சேர்ப்பித்து அவரையே பிரிக்கச் செய்து அரசரிடம் சமர்ப்பிக்குமாறு செய்தார். அதைப் பிரித்து அரசரிடம் சமர்ப்பிக்க முற்பட்டபோது அவற்றி லடக்கபபட்டிருந்த விலை பெறாத கற்கள் காணப்படாது, மதிககத் தக்கதான கற்கள் இருப் பதைக் கண்டு முஸ்லீம் மந்திரி பெருத்த வியப்பிற் குள்ளானார். இதனால் இவ் வரசர் தெய்வீக சக்தி வாய்ந்தவரே என திண்ணமாகவும எண்ணிவிட்டார். கடவுள் ஒருவர் இருப்பது உண்மை. அதை நாம் அறியாது இவ்விதம் செய்ய முற்பட்டுவிட்டோம் என சுய பாஷையில் உச்சரித்து பல முறை மதாச் சாரப்படி மண்டியிட்டு துவா செய்தார், அவர் திரும்புகாலையில் அமைச்சர் மஹா பிஞாச்சோ நாங் கள் கொடுக்கும் இவ் வேழு கற்களடங்கிய சன்மான முடிப்பை தங்கள் அரசரிடம சமர்ப்பியுங்க ளெனச்



ஒரிஸாவைச் சேர்ந்த உதயகிரி மலையிலுள்ள ஆனந்தா குகைக் கோயிலைப் போன்று பகானில் அமைக்கப்பட்டுள்ள ஆனந்தா கோவில்.

சொல்லி விலை பெறுமான மிக்க ஏழு மாணிக்கங்களை அவருக்கு எதிரே வைத்து அடக்கம் செய்தார். முஸ்லீம் மந்திரி பாராக்கா யிருந்த சமயம் பார்த்து அம் மந்திரி கொண்டுவந்ததான பெறுமானமற்ற ஏழு கற்களையும் வைத்தமைத்த மற்றொரு பையைக் கொடுத்தனுப்பினர்.

முஸ்லீம் அமைச்சர் இந்தியா போய்ச் சேர்ந்ததும் அரசரிடம் அச் சன்மான முடிப்பை அளித்தார். அப்போது அரக்கானில் நடந்த சம்பவங்களையும் அரசரிடம் சொல்லியவரன்று. அரசர் அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தபோது, தான் அனுப்பிய பெறுமானமற்ற கற்கள் அதிலிருப்பதைக் கண்டு அரசர் விபரத்தை விசாரித்தார். அப்போது அமைச்சர் அரக்கானில் நடந்த சம்பவங்களைச் சவிஸ்தாரமாகக் கூறினர். இவற்றைக் கேட்ட முஸ்லீம் மன்னர் திக் பிரேமை கொண்டவராகி அத்தகைய தெய்வீகம் பொருந்திய அரசரை நேரில் காண ஆவல் கொண்டு நூறு மரக்கலங்களுடனும் எண்ணறிய சன்மானங்களுடனும் அரக்கான் வந்து சேர்ந்தார். அரக்கான் அரசரின் விருந்தாளியாக விருந்து முஸ்லீம் அரசர் பர்மிய பாஷையையும் கற்றுச் சென்றார்.

## மஹறா பீஞாச்சோவின் மரணம்.

மதி நுட்பம் வாய்ந்தவரும் சிட்டகாங் அதிபதியுமாகிய மஹறா பீஞாச்சோ அவர்கள் 1599–ஆம் ஆண்டில் மோட்டின என்னும் இடத்தில் உயிர் நீத்தார். அன்னவரின் பூத உடம்பை வெகு ஆடம்பரமாக அரசாங்கத்தில் தகனம் செய்யப்பெற்றது. தகனம் செய்யப்பெற்ற அவ் விடத்தில் அன்னாரின் ஞாபகார்த்தமாக பொற் கோயிலொன்றும் நிர்மாணிக்கப் பெற்றது. இளமைப் பருவ முதற்கொண்டு உயிர் துறக்கும் வரை மன்னர்களிடத்தில் அவ் வமைச்சர் சேவை செய்து வந்திருக்கிறார். அரசாங்கத்தில்

சேவை செய்து வருங்காலத்தில் சட்ட சம்பந்தமான பழைய நீதிகளை யெல்லாம் தம் பெயரால் தொகுத்து ஒன்று சேர்த்து வைத்திருந்தார். பௌத்த மதத்தை அடிப்படையாகக் கொண்டு அவா மனு தர்மச் சட்டத்திற்கு வியாக்கியானம் செய்து முடித்தார். அதன் பின்னர் பர்மா முழுமையும் அச் சட்டம் ஒரு உயர்ந்த ஸ்தானம் வகிக்க நேர்ந்தது.

# அதிகாரம் 8.

# தல்லாய்ங் மந்திரி.

மர்மம் நிறைந்த கொலை வழக்கில்
மதி நுட்பம் வாய்ந்த தீர்ப்பு.

கி. பி. 1358-ல் பெகுவில் முடி சூட்டுவிக்கப் பெற்ற ராஜாதிரி மன்னா ஆளுகையில் ஒரு பர்மியனுக்கு இரண்டு மனைவிகள் வாழ்க்கைப்பட்டிருந்தனர். இரண்டு பெண்டாட்டிக்காரன் பாடு திண்டாட்டம் என்று இன்றும் சொல்லிக்கொள்ளப் பெறுகிறது. என்றாலும் அப் பர்மியனின் மனைவிமார் அதிர்ஷ்டவசமாக மனமொத்து வாழ்க்கை நடாத்தி வந்தனர். சில்லாண்டுகளுக்குப் பின்னர் இளைய தாரத்திற்கு ஆண் குழந்தை யொன்று பிறந்தது. இதனால் மகப்பேறு இல்லாத மூத்த மனைவியிடம் பர்மியன் அதிக நேசங் கொண்டு இல்லற சுகத்தை யனுபவித்து வந்தான். இதைப் பொறாத இளைய மனைவி, தன் குழந்தையைக் கொன்றுவிட்டு அக் குழந்தையை மூத்தாள்தான் கொன்றுவிட்டதாக அவள் மீது தான் பழி சுமத்தி கணவன் அவள் மீது வெறுப்புக் கொள்ளவும் தன்னை நேசிக்கவும் அதன் பயனாய் இன்ப நுகர்ச்சியைத் தான் பெறவும் படு சூழ்ச்சி செய்தாள். சின்னாட்களுக்குப் பின் ஓர்

தினத்தில் ஜலம் கொண்டுவர குழந்தையுடன் சென்ற அவள் கிணற்றுக்குச் சென்று அற்ப சுகத்தை யுன்னி தன் அருமந்தக் குழந்தையைக் கிணற்றுக்குள் ஈவிரக்க மின்றி தூக்கி எறிந்து உயிரைப் போக்கினாள். அப் படு கொலைக்காரி உடனே மன்னன் சபை யணுகி தன் குழந்தையை மூத்தாள் கொலை செய்து விட்டதாக முறையிடு செய்தாள். ஆகவே, வழக்கை விசாரணை புரிந்து தீர்ப்புச் சொல்லுமாறு தனது மந்திரிகள் நால்வரிடம் ராஜாதரி மன்னன் கூறினான். அரசன் உத்திரவுக் கிணங்கி அமைச்சர்கள் வழக்கை விசாரணை செய்தனர். ஆயினும், சூழ்ச்சி நிறம்பிய அவ் வழக்கின் உண்மையை யறிய முடியாது தீர்ப்புச் செய்ய வகையின்றி திகைத்தனர். இதுகேட்ட அரசன் அமைச்சர்கள் மீது பெருமகோபங்கொண்டு அவர்களைச் சிறையிலடைத்து வைததான். மேலும் மிக நுட்ப புத்தியும் விசாலமான கல்வி யறிவும் உடையவராகிய டெய்ன் என்னும் அமைச்சரிடம் மன்னர் அவ் வழக்கை ஒப்புவித்தார். அவ் வழக்கின் வாதியையும் எதிரியையும் வழக்கம போல் அவ்வறிஞர் விசாரணை செய்தார். மூத்தாள், குழந்தையைக் கொலை செய்யவில்லை யென்றே பல காரணங்கள் காட்டி ஸ்திரப்படுத்தினாள். பின்பு பல வாறாக அமைச்சர் ஆழ்ந்து ஆலோசனை செய்துவிட்டு, பர்மியனின் மூத்த மனைவியைப் பிரதகியேகமான இடத்திற்கு அழைத்துச் சென்று அவளை நோக்கி, நீ பலர் முன்னிலையில் உடையைக் களைந்துவிட்டு பிறந்த மேனியுடன் நிற்பாயா? அவ்விதம் நிர்வாணமாய் நின்றுவிட்டால் உன்மீது நான் குற்றம் சுமத்தமாட்டேன். இதற்கான மரண தண்டனையையும் விதிக்காமல் விட்டு வைப்பேன எனக் கூறினார். இவ் வார்த்தைகளைக் கேட்ட அம் மாது, இறைவனே! முன் ஜன்மத்தில் நான் செய்த புண்ணியம் கொஞ்சமாக இருந்துள்ளமையால் இப் பிறப்பில் பெண் பிறவி

பெற்றேன்; அதுவு மன்னியில் கணவனால் அடையக் கூடிய சுக துக்கங்களில் பாதிதான் அனுபவிக்கக்கூடிய பாக்கியத்தைப் பெற்றேன். இத்தகைய துரதிருஷ்டம வாய்ந்த பெண்ணைப் பிறந்தும்கூட பெண்களுக்கு அரண்போன்றிருக்கும மானத்தையும் உதறி விட்டு நான் உடையைக் களைந்துவிட வேண்டுமென்று நீங்கள் சொன்னால் அது தெய்வத்திற்கும் சம்மதமாகுமா. நீங்கள் என் உயிரை மாய்த்துவிட விரும்பினால் நான் தங்கு தடையின்றி சம்மதிப்பேன். மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே என் உயிரினும் சிறந்த என் மானத்தை மட்டும் கெடுத்துவிடாதீர்கள். நான தங்களைக் கேட்கும் வரம் அது ஒன்றேதான். நான் அவள் பிள்ளையைக கொலை செய்யவு மில்லை; அதை மறைக்கப் பொய் சொல்லவு மில்லை எனச் சோகமுடன் உரைத்தனள்.

மூத்தாள் கூறியவற்றைக கேட்ட அமைச்சர் டெய்ன் என்பார் அவளைப் போகச் சொல்லிவிட்டு மேலே விவரித்த விதமாக இளையாளை மறைவிடத்திற் கழைத்துச் சென்று மூத்தாளை வினவியது போலவே இளையாளையும் வினவினர். அதற்கு அக கண்ணெஞ் சக்காரி, தான் பலர் முன்னிலையில் பிறந்த கோலத்துடன் நிற்கக் கூடுமென்று பதிலளித்ததோ டிராமல் சிறிதும் நாணமின்றி செடலில் நிர்வாணமாகவே நின்று காட்டினள். அவள் செய்கையைப் பார்த்த அமைச்சர் திடுக்கிட்டு அவள் மானமற்றவளென்பதை அறிந்தவராய், அப் படுகொலையை அச் சண்டாளியே செய்திருக்கக் கூடுமென்ற உறுதியுடன் அவளைக் கூப்பிட்டு மீண்டும் ரஹஸ்யமாக உண்மைப் புலனாகுமாறு விசாரணை செய்தார். விசாரணையில் அவள் தன் புத்திரனை அற்ப சுகத்தைப் பெரிதாக எண்ணி காம வேட்கையால் அவ்விதம் கொலை செய்துவிட்டதாக ஒப்புக்கொண்டாள்.

சூழ்ச்சி நிறைந்த இப் படுகொலை வழக்கின் நியாயத்தை யறிந்து உண்மைக் குற்றவாளியைக் கண்டு பிடித்து நீதி வழங்கிய நிபுணர் டெய்ன் என்பாரின் செயலைக் கேட்டு, மன்னன் தர்பார் முன்னிலையில் அம் மந்திரிக்குப் பல சன்மானங்களளித்து கௌரவித்தார்.

# அதிகாரம் 9.

## தர்ம ஸேட்டீ மன்னர்

தர்மஸேட்டி மன்னர், அறிவிலும், ஆற்றலிலும், கல்வி கேள்விகளிலும் மிகச் சிறந்தவரெனப் பல்லோராலும புகழப் பெற்று வந்தார். மன்னரின் புகழ் இலங்கை போன்ற பிற நாடுகளிலும் எட்டியது. ஸெய்ன்க்கோ என்னும் இலங்கை கோனின் திருச் செவிக்கும் தர்மஸேட்டீ மன்னரின் பிரபாவ மெட்டவே, உண்மையிலேயே தர்மஸேட்டீ மன்னர் கல்வி கேள்விகளிற் சிறந்தவர்தானு வென்பதை அறிந்து கொள்ளும் ஆவல் மேலீட்டால் இலங்கை கோன் பல கேள்விகள் அடங்கிய நிருபமொன்றை அமட சிட்டனுதுலன், ஸிட்டராஜாதுலன் ஆகிய ராஜ தூதர்களிடம் கொடுத்து, அதை தர்மஸேட்டீ மன்னரிடம் சமர்ப்பிக்குமாறு ஆக்ஞாபித்து அனுப்பி வைத்தார். அவ்விரு தூதுவரும ஹம்சாவதி சென்று தர்மஸேட்டீ மன்னரிடம் அந் நிருபத்தைச் சமர்ப்பித்தனர். நிருபத்தில் கண்ட கேள்விகள் பின் வருமாறு:—

அன்பார்ந்த தர்மஸேட்டி மன்னரே!

(1) எலும்பையே சிறகாகவும் வாலாகவும் கொண்ட பறவை யெது?

(2) தலையையே சிறகாகவும் வாலாகவும் பெற்றுள்ள பறவை யெது?

(3) ரோமத்தையே சிறகாகவும் வாலாகவும் கொண்டுள்ள பட்சி எது?

(4) வலைக்குள் நின்று வலைக்குள்ளேயே மரிக்கும் பறவை யாது?

(5) வெளிப்புறத்தில் நின்று வெளிப்புறத்திலேயே மடியும் பட்சி எது?

(6) வலைக்குள் நின்று வலைக்கு வெளியிலேயே சாகும் பறவை எது?

(7) வலைக்கு வெளிப்புறத்தில் நின்று வலைக்குள் சென்று மரிக்கும் பறவை யாது?

(8) தலையைப் பெரிதாகப் பெற்றுள்ள பட்சி எது?

(9) ஒரு பெரியார், வெளிச்சத்தினின்று வெளிப் போந்து இருட்டிற்குள் செல்லுகிறார்.

(10) ஒரு பெரியார், இருட்டிற்குள்ளிருந்து வெளிப்பட்டு வெளிச்சத்திற்குப் போகிறார்.

(11) வெளிச்சத்திலிருந்து வந்து வெளிச்சத்திற்கே செல்லுகிறார்.

(12) இருட்டினின்று வந்து இருட்டிற்கே செல்லுவது.

(13) ஸ்ரீ புத்தர், எங்ஙனம் (யஹான்டா) ரிஷிகளுக்கு உபதேசம் செய்தார்?

(14) நன்மை செய்ய பிரயத்தனப்படாமலிருக்க வேண்டியவர் எவர்?

(15) கனமானது யாது?

(16) இலேசானது எது?

அன்பார்ந்த தர்மஸேஸட்டீ மன்னரே!

கல்வியிற் சிறந்திருக்கும் தாங்கள் நிருபத்தில் கண்ட பதினொறு கேள்விகட்கும் தக்க விடை யிறுப்பீர்களாக.

தர்மஸேஸட்டீ மன்னர், நிருபத்தைப் படித்து முடிந்ததும் கேள்விகட்கு முறையே தான் கூறும் பதில்களை எழுதிக் கொள்ளுமாறு விகிதரிடம் கூறினர்.

ஸெய்ன்க்கோ மன்னருக்கு அறிவித்துக் கொள்வதாவது—:

(1) ஒருவித தேனீ (carpenter bee)

(2) தாவும் அணில் (flying squirrel)

(3) மயில்.

(4) காம உலகில், கலவியை முன்னிட்டு இல்லறத்தை மேற்கொண்டு இல் வாழ்க்கையிலேயே மரிப்பவரைக் குறிப்பிடுகிறது.

(5) பால்ய முதல் துறவறத்தில் புகுந்து துறவறத்திலேயே மரிப்பவரைக் குறிப்பிடுகிறது.

(6) இல்லற வாழ்க்கையில் உழன்றுவந்த ஒருவர், முதிர்ந்த வயதில் துறவறம் பூண்டு மரிப்பதைக் குறிப்பிடுகிறது.

(7) பால்யத்தில் துறவறம் பூண்டு பின் முதிர்ந்த வயதில் இல்லறம் புகுந்து இறந்தவரைக் குறிப்பிடுகிறது.

(8) தலையைப் பெரிதாகப் பெற்றுள்ள பறவைகள் பல எனினும், அவை தலையைத் தூக்கிச் செல்ல முடிகின்றன. வௌவால் என்ற பட்சி மட்டும்தான் அதன் தலையைத் தூக்கிச் செல்ல முடிவதில்லை.

(9) (தேவ உலகம்) பிரஹ்ம உலகத்தில் மரித்த ஒருவர், மானிட லோகத்திற்கு வந்ததும அதர்ம வழிகளைப் பின்பற்றி இறகது போது நரகத் திற்குச் செல்லும் தன்மை யடைந்ததைக் குறிப்பிடு கிறது.


(10) நரக லோகத்திலிருந்து மானிட லோகத் தில் பிறக்க நேர்ந்தாலும்கூட, அறநெறிகளை யனுஷ் டித்து பிரஹ்ம லோகத்திற்குச செல்லுபவர்களைக் குறிப்பிடுகிறது.

(11) (தேவ லோகம்) பிரஹ்ம லோகத்திலிருந்து திரும்பவும் நரலோகத்தில் ஜனிப்பினும் நன்மை யையே செய்து மீண்டும் பிரஹ்ம உலகத்தை யடைப வர்களைக் குறிப்பிடுகிறது.

[12] நரகத்திலிருந்து மானிட உலகத்திற்கு வரினும், தீமைகளையே செய்து திரும்பவும் நரகத்திற் குச் செல்பவர்களைக் குறிப்பிடுகிறது.

(13) புத்திரர்களுக்குப் பெற்றோர் புத்திமதி கூறுவதைப்போல, ஸ்ரீ புத்த பகவான் துறவிகளுக்கு உபதேசம் செய்ததைக் குறிப்பிடுகிறது.

(14) துறவி, இராஜ்ய பரிபாலனம் செய்யும் மன்னன், இல்லற வாழ்க்கையி லீடுபட்ட ஸ்திரீ ஆகிய இம் மூவரும் நற் காரியங்களை விசேஷமாகச் செய்ய பிரயத்தனிக்க வேண்டியதில்லை. துறவு பூண்டோர் தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்து முடித்தல் அவசியமாகும். இராஜ்ய பரிபால னம் செய்யும் மன்னர்களென்போர் மன்னர்க்குரிய பத்து வித சன்மார்க்கக் கடமைகளைக் கடைப்பிடித் தொழுகுவதே நேர்மையாகும். புதிதாக ஒருவித நன்மையும் செய்யத் தேவையில்லை. இல்லறத்தி லீடுபட்ட பெண்ணென்பாள் கணவனை வீட்டு முனி வனுகப் பாவித்து இல் வாழ்க்கையை நடத்திவந்தால் நற்கதியை யடைவாள்.



“கி. பி. 1025–1027-ம் ஆண்டுகளுக்கிடையில் இராஜேந்திரச் சோழன் முதலாமவன் தென்னிந்தியாவி லிருந்து கேதாரணிய மென்னும் இப்பெருகையை கைப்பற்றினான். அதன் ஞாபகார்த்தமாக இந்த ஜெயக கம்பம் இங்கே நாட்டப்பட்டது” என்று இக்கற்றூணில் ஆங்கிலத்தில் வரையப்பட்டிருக்கின்றது.

(15) மானிட வர்க்கத்தினர்க்கு மலையானது கனமாக இருக்கும். மானிட வர்க்கத்திலேயே மகத்துவம் வாய்ந்தவர்கள் மலையைத் தாங்கினால் அது அவர்களுக்கு இலேசாக இருக்கும். பாபிகள் எண்ணம்தான் உண்மையில் கனமாக இருக்கும்.

(16) இலவம் பஞ்சுதான் இலேசான வஸ்து. எனினும் மனிதனுடைய எண்ணத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இலவம் பஞ்சு இலேசாக மாட்டாது. ஆகவே, மனிதர்களுடைய மனம்தான் இலேசானதாகும்.

கண நேரத்தில் கேள்விகட்கு விடையிறுத்த தர்மஸேட்ட மன்னரின் அறிவின் நுட்பத்தைக் கண்டு தூதுவர்கள் திகைப் படைந்தனர்; பாராட்டினர். பின்னர் விடை பெற்றுக்கொண்டு இலங்கை நோக்கிப் பிரயாணமாகினர்.

தர்மஸேட்ட மன்னர் கல்வி கேள்விகளில் சிறந்திருந்தது போலவே, ஈகையிலும் ஆலய நிர்மாணிப்பிலும் பின்வாங்கா திருந்தார். ஓர் சமயம் ஷுவேதகான் பொற்கோயிலுக்கு நேரிட்ட நஷ்டமொன்றை ஈடு செய்ய, தாமும் தமது பட்ட மகிஷியும் உள்ள அளவில் தங்கத்தை நிறை கண்டு அவ்விதமே நான்கு முறை யளித்துள்ளார். வங்க தேசத்தைச் சேர்ந்த புத்த கயா புண்ணிய க்ஷேத்திரத்திற்குத் தாமே மதத் தூது கோஷ்டி யொன்றை அனுப்பிவைத்தார். இவர் செய்த இதர விசேஷ காரியங்களைப் பார்க்கினும், சிலோன் தேசத்திற்கு மதப் பிரசாரகர்களான 22 பிக்ஷுக்களை யனுப்பி வைத்ததை அதி விசேஷமாகப் பாராட்டப்படுகிறது. அவர் சிலோன் அரசருக்கு சன்மானமாக ஓர் முறை சிகப்பு நீலம், சீனப் பட்டு, மிருதுவான பாய்கள், தங்கத் தகட்டின் பேரில் எழுதப் பெற்ற நிருபம முதலியவற்றை

அனுப்பிவைத்தார். இவற்றால் அன்னவரின் ஈகை, தயாளம், நேயபாவம் முதலியவை தெள்ளெனத் தெரிகிறதன்றோ!

அரச லட்சணங்களிலும் கல்வி கேள்விகளிலும் சிறந்து விளங்கிய தர்மசேட்டீ மன்னரின் பூர்வ நிலையைப் பற்றி விவரித்தல் அவசியமாகும். எனவே, சுருக்கமாகவும் விளக்கமாகவும் ஈண்டு சிறிது தருகிறோம். ஷின் ஸோபு என்பவள் அவா என்னும் தலைநகருக்கு அதிபதியான ஒருவரின் மனைவியாக வதுவை செய்யப் பெற்றாள். தல்லாய்ங் மறைபைச் சேர்ந்த இரண்டு மத போதகர்களின் போதனை அவளுக்கு ஏற்படலாகியது. எனவே, பர்மிய அரண்மனை வாழ்க்கையில் வெறுப்புக் கொண்ட அவள் ஐராவதி நதி தீரத்தின் வழியாக பெகு நகரை நோக்கி ஓடினாள். அவளின் பல வெற்றிகளுக்கு முன்னர் விவரித்த இரு சந்யாசிகளே காரணஸ்தர்களாயிருந்தார்கள். சொற்ப காலத்திற்குள்ளாகவே அவள் பெகு நகருக்கு அதிபதியாய் ஆகக்கூடிய அதிருஷ்டம் பெற்றாள். ஏழு வருடங்கள் வரை பெகு அதிபதி வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த அவள், அப் பதவியினின்றும் விலகி தனித்து வாழ்வதில் ஆர்வம் கொண்டாள். எனவே, அவளுக்குப் பதிலாக வேறொருவர் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய அவசியம் நேர்ந்தது. ஆனால், இன்னாரைத்தான் தேர்ந்தெடுப்பதென்ற நியதியற்றவளாய் திகைத்தாள்.

இந் நிலையில் அரண்மனைக்கு வந்து பிச்சையேற்றுச் செல்லும் சந்யாசக் குழுவினர் வழக்கம் போன்று ஓர் தினம் அரண்மனைக் கேகினர். அவர்களுக்கு முறையாக அளிக்கும் அரச போஜனத்தை ஒவ்வொருவர் பிட்சா பாத்திரத்திலும் வைக்கப் பெற்றது; ஆயினும், ஒருவரின் பாத்திரத்தில் போஜனத்திற்குப் பதிலாக இராஜ உடைகள் மறைவாக வைக்கப் பெற்றன. அவற்றில் அரசர்க்குரிய ஐந்து வித

முக்கிய அணிகலன்களும் ஆயுதங்களும் வைக்கப் பெற்றன. வழக்கம்போல் சந்யாசக் குழுவின ரால் பிட்சா பாத்திரங்கள் தங்கள் ஆச்ரமங்களுக் கெடுத்தேகப் பெற்றன. இராஜ உடை வைக்கப் பெற்ற பிக்ஷுவிற்கு அபிமான மிக்கவராயிருந்த தர்ம ஸேட்ட என்ற நமது கதாநாயகருக்கு அவை அளிக்கப் பெறலாயிற்று. இதன் மூலம் ஷின் ஸோபு, தனக் குப் பின்னர், தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர் அகப்பட்டுக் கொண்டதை யறிந்து ஆண் மனைக்கு அவரைத் தருவித்து அவருக்குத் தனது புதல்வியைத் திருமணம் செய்வித்தாள். இவையே தர்மஸேட்ட யின் பூர்வ விபரமாகும். இதனால் இவர் பிறவியில் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் அல்லர் என்பது விசதமாகிறது. அரச சமூகத்தைச் சேராத ஒருவர் அரசராக்கப் பெற்றதினால் மனம் பொறாத பலர், முணுமுணுக்கலாயினர். அதிருப்தியான வாக்கியங் களும ஷின் ஸோபு காதில் எட்டலாயிற்று. பலர் அன்னாரிடம் இது குறித்து விவரித்தபோது அவ்வம் மையார் செப்பியது வருமாறு:—

"அவர் சாதாரண மனிதரென்று சொல்லுகிறீர் கள். அதனால் அவர் உங்களுக்கு அரசராக இருக்க வும் தகுதியற்றவர் என்கிறீர்கள். இங்கே பாருங் கள்! இது ஓர் சாதாரண மரத் துண்டு நேற்று உங்கள் பாதத்தில் தூசு படியாதவாறு அணியப்பட் டிருந்த மிதியடியாய் இருந்தது. ஆனால், இன்றோ அது உங்களுக்கு வணங்கத்தக்க விக்ரகமாக இருக்க வில்லையா! அதன்முன் நீங்கள் விழுந்து விழுந்து நமஸ்கரிக்க வில்லையா?"

இப் புத்தி சாதுர்யமான மறுமொழியால், மனம் பொறாது வாய்ப் பறை சாற்றினோர் வாய் அடங்கி யோராய் வந்த வழித் திரும்பினர். இதனாலும் இவ் வம்மையாரின் அதி ஆச்சரிய மதி நுட்பம் தெள்ளெனத் தெரிகிறதன்றோ!

# அதிகாரம் 10.

## டபின்ஷா வேட்ட மன்னர்.

ஒரு காலத்தில் பர்மிய நாடு பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டு எதேச்சாதிகாரம் படைத்த சிற்றரசர்களால் ஆளப்பெற்று வந்தது. அதன் பயனாக அத்தேசத்தில் குழப்பமும், வறுமையும், துன்பமும் மிகுந்தது. பஞ்சம் தலை காட்டியது; மக்கள் பசிப் பிணியால் மாண்டனர். "பசி வந்திடில் பத்தும் பறந்துபோம்" என்பதை யொக்க எங்கும் அந்தகாரம் சூழ்ந்து கொண்டது. எங்கணும் களவு, கொலை கொள்ளை! அமைதிக் குறைவு. இத்துணை அபாயகரமான நிலைமையில் பர்மிய நாடு தத்தளித்துக் கொண்டிருந்தது. தேசமும் அதன் மக்களும் பிற்போக்கடைந்து செல்வதைக் கண்டு எந்த தேசாபிமானியும் கண்ணைப் போர்த்திக் கொண்டிருக்க இஷ்டப்பட மாட்டான். உண்மை தேச பக்தர்கள் தேச முன்னேற்றமே தன்னேற்றமெனக் கொண்டு அதன் உயர்வுக்கென உயிரையும் திரணமாகக் கருதுவார்கள். அமைதிக் குறைவை யொழித்து சமாதானத்தை யேற்படுத்த முயலுவார்கள். தான் பிறந்து வளர்ந்த தேசத்திற்கு இத்தகைய பணியை விட வேறு துறையில் தொண்டு செய்ய ஓர் உண்மை தேச பக்தனோ, அல்லது வேந்தனோ முயற்சிக்கமாட்டான். பிரான்சு தேசத்தில் உண்டான மகா உக்கிரமான கலகம்போன்று பர்மிய தேசாதிபதிகளுக்குள் சண்டை மூண்டது. எதேச்சாதிகாரம் பெற்ற கோனாட்சியில் நினைப்புக ளெல்லாம் சட்டமாயின. ஒருவரை யொருவர் அடக்கி ஆள வேண்டுமென்ற எண்ணம் தேசாதிபதிகளிடை வலுத்தது; உள் நாட்டுக் கலகங்களுக்கும், கொள்ளைகளுக்கும் எல்லை யில்லை. பர்மிய

நாட்டிற்கு இது ஓர் பெரும் சோதனை காலமாகவே இருந்தது. தர்மம குன்றி அதர்மம தலைத் தோங்கும் காலத்தில் அவதார புருடர்கள் தோன்றி உலகின் பிற்போக்கை மாற்றுவது சகஜம். அதேபோல பர்மிய நாடு தலை கீழாய்ப் போய்க்கொண்டிருந்த சமயத்தில், அந் நாட்டின் மூலை முடுக்குகளிலிருந்து ஒரு சில முக்கியஸ்தர்கள் தோன்றினார்கள். அவர்கள் சாமான்யக் குடியில் பிறந்தவர்களா ? அன்று. அவர்கள் அரச வமிசத்தைச் சார்ந்தவர்கள். பிரஜைகளுடைய சுக துக்கங்களைத் தங்களுடையதாகப் பாவிக்கும் குணமுடைய உத்தம சீலர்கள். சின்னபின்னமாகக் கிடந்த பர்மிய நாட்டை சீர்தூக்கி விட்ட வீரர்கள். குடிகளுக்காகவும், குருக்களுக்காகவும் வேண்டுவனவற்றைச் செய்வதில் அவர்கள் பின் வாங்கியவர்களல்லர்.

இற்றைக்குச் சுமார் தொளாயிரத்துப் பத்தாண்டுகளுக்கு முன் பர்மாவில் பெரும் குழப்பங்களும், கலகங்களும நிகழ்ந்து கொண்டிருந்தன. அவற்றால் தேசம் மிகவும் பாதிக்கப் பெற்றது. மக்கள் க்ஷீண தசை யடைய ஆரம்பித்தனர். அந் நெருக்கடியான வேளையில் அநோரட்டா அரசர் என்பவர் தோன்றி எங்கும் அமைதியை நிலை நாட்டி பர்மாவைக் காப்பாற்றினர்.

இச் சோதனைக் காலத்தினின்றும் காப்பாற்றப் பட்ட பர்மிய நாடு கி பி. 1521—ல் பின்னும் தத்தளிக்க ஆரம்பித்தது. அதுபோது டபின்ஷ-வேட்டீயும், அன்னவர் மைத்துனரான பய்யீனவ்ன் ச்சோடின்—நோரட்டா என்பவரும் தேசத்தின் நன் மதிப்பைக் காப்பாற்றும் நோக்கத்துடன் எங்கும் சமாதானத்தை யேற்படுத்தி மக்கள் கவலையின்றி வாழும்படிச் செய்தார்கள்.

கடைசியாக இற்றைக்குச் சுமார் இருநூற்றுப்

பத்தாண்டுகட்கு முன்னர் பர்மாவில் எங்கும் புரட்சி இயக்கம் பரவியது. அவ்வியக்கத்தால் நாட்டிற்கும் அதன் பிரஜைகளுக்கும் நேர்ந்த இடுக்கண்கள் பல. விரிக்கிற் பெருகுமென்று அஞ்சி விடுத்தனம். சுருக்கமாகக் கூறுமிடத்து பர்மா இரத்தக் களமாக இருந்ததென்று சொல்லி விடலாம். அச் சோதனை காலத்தில் அல்லவ்ன் பயா ஊ அவ்ன்ஸேயா என்பவர், முன் வந்து தேசாதிபதிகளுக்குள் ஒற்றுமையை வளர்த்து சமாதானமான ஆட்சி முறையை நிலவச் செய்தார். இம் மூவரில் சிறந்தவர் டபின்ஷாவேட்டி. இன்னவர் சரிதையை அறியாத பர்மியர்களில்லை, பர்மிய சினிமா படக் காட்சியிலும் காணலாம். பர்மாவின வீர சிவாஜி என்று டபின்ஷாவேட்டியை அழைக்கலாம். பர்மிய சரித்திரத்தில் என்றும் கேட்டிராத வண்ணம் பர்மிய நாடு சிதறுண்டதும், அக் காலத்தில் பல குறுநில மன்னர்கள் முடி மன்னர்களாய் விளங்கப் போராடியதும, நாட்டில் அளவு கடந்த துன்பத்தையும் வறுமையையும் கொண்டுவந்து சேர்த்ததும் அப் பெரும் சோதனை காலத்திலேயேதான். ஈன்வா நாட்டை ஷான் மீதா ஹான் புவா என்ற சிற்றரசனும், ஹம்சாவதி (ஹந்தாவாடி)யை ஷின்டகா யுவெப்பி என்ற மன்னனும், ஸ்ரீ க்ஷேத்திரா (புரோம்)வை நரபதி என்ற வேந்தனுமாக ஆட்சி புரிந்து வந்தார்கள். கோனாட்சியின கொடுமையான சட்டங்களால் பிரஜைகள் மிகவும் பாதிக்கப்பட்டனர். இச் சோதனை காலத்தைப் பற்றிக் கூறும்போது பர்மிய சரித்திர ஆராய்ச்சிக் காரர்கள் மனம குழைகின்றனர். அத்துணை அபாயகாமான நிலைமையில் தவித்துக் கிடந்த நாட்டையும், அதன் மக்களையும் காப்பாற்றிய வேந்தனைக் குறித்த வரலாற்றைப் பற்றி அறிந்து கொள்ள இந்நாளைய தேச வீரர்களும், தேசாபிமானிகளும், தேச பொதுஜனங்களும் விழைவார்களென்பது உண்மை.

கேதுமதி அல்லது டவுஙூ என்றும், தமிழர்களால் பெரிதும் இதுபோது டாங்கோ என்றும் அழைக்கப்பெறும் பழமையான அந் நகரை மகா ஸ்ரீ ஸேயா என்ற மன்னர் அரசாட்சி செய்து வந்தார். இப் பொன் நகரம் இரங்கூனுக்கும் மாந்தலேய்க்கும் மத்தியில் முக்கிய புகை வண்டி நிலையமாக இன்று திகழ்கிறது. புராதன பர்மியர்களால் தோண்டப்பட்ட அகழ், நகரைச் சூழ்ந்துகொண்டிருப்பதை இன்றும் காணலாம். சுற்றுப் பக்கங்கள் செழிப்பாகவும், இயற்கை வளம் செறிந்ததாகவும் காணப் பெறுகின்றன. தற்போது தமிழ் பேசும் மக்கள் ஆங்கு வாணிபத் துறையிலும் லேவாதேவித் தொழிலிலும் சிறந்து விளங்குகின்றனர். தென் இந்தியாவில் வசித்துவரும் மலைக் குறவர், குறத்திகள் போன்று அந் நகரிலும் அதன் சுற்று வட்டகைகளிலும் பர்மிய சமூகத்தவரில் ஒரு பிரிவினரான கச்சின் ஜாதியார் அதிகமாக வசித்து வருகின்றனர். அக் காலத்திய நகர நிர்மாண அமைப்புகள் மெச்சத்தக்கவைகளாகும்.

அக் காலத்தில் இத்துணை சீரும் சிறப்பும் வாய்க்கப்பெற்ற நந்நகரைப் பொன் நகரமாகக் கொண்டு மகா ஸ்ரீ ஸேயா அரசாட்சி புரிந்து வந்தது அவனுடைய பாக்கியமே யாகும். ஆயினும் அவன் தமது அரச வமிசத்திற்கு உகந்த வழியில் அரசிளங் குமரியை மணந்து கொண்டானில்லை. நனுவேக் கோவ்ன் என்னும் குக்கிராம அதிகாரியின் புத்திரியை மகா ஸ்ரீ ஸேயா விவாகம் செய்துகொள்ள நிச்சயித்து அதன்படி நல்ல சுபயோக சுப தினத்தில் கலியாணம் செய்துகொண்டான்.

இப்படி யிருக்க, ஓர் தினத்தில் மகா ஸ்ரீ ஸேயா பள்ளி அறையில் படுத்திருக்கும்போது அதிகாரியின் மகள் விசிறி கொண்டு வீசினாள். சில நாழிகைகள்

செல்லவே அவள் துயில்கொள்ள வெண்ணி, அரசன் காலடியில் அவன் பாதத்தைப் பிடித்துக்கொண்டே அயர்ந்து நித்திரை செய்தாள். நித்திரையில் ஆழ்ந்திருந்த அவள், எதிர் பாரா விதமாக திடீரென்று திடுக்கிட் டலறிக் கொண்டெழுந்தாள். அரசன் காரணம் யாதென வினவினான். அதற்கு அவள் அளித்த மறு மொழியில், ஆகாயத்திலிருந்து சூரிய பகவான் பூ மண்டலம் நோக்கி வந்ததாகவும், வந்தவர் தன் வயிற்றைக் கீறி உட் பிரவேசித்ததாகத் தான் கனவு கண்டதாகவும், அதனால் தனக் கேற்பட்ட பயத்தால் அலறியதாகவும் குறிப்பிட்டாள். கனவின் விருத்தாந்தத்தைக் கேட்ட வேந்தன் பெரு மகிழ்ச்சியுற்றுக் கூறியதாவது.— "இப்போது நீ கர்ப்பவதியாக இருந்து வருகிறாய். ஒருகால் உன் வயிற்றில் கர்ப்பமாக இருந்து வருபவன் ஆதித்தனைப் போன்று எங்கும் கீர்த்தியோடும், வீரப் பிரதாபத்தோடும் சிறந்து விளங்குவான். நான் சொலலியவாறு நீ ஆண் குழந்தை பிறசவித்தால் உன்னை நான் பட்ட மகிஷியாக்கிக் கொள்கிறேன்."

அரசன் கூறிய உறுதி மொழிகள் சின்னாளில் உறுதிப்பட்டது. டபின்ஷுவேட்டீ பிறந்தான். அவன் பிறக்கும்போது தலை உச்சியில் ஒரு நீண்ட உரோமம் இருந்ததாகவும், பிறக்கும் சமயத்தில் நாடெங்கும் கனத்த மழை பொழிந்ததாகவும், மழைத் துளிகள் பனிக் கட்டி அளவிலும், எலுமிச்சங் காய் பருமனிலும் இருந்ததாகவும், காடு மலை செடி கொடிகள் அடர்ந்த இடங்கள் யாவும் அக்கினி மயமாகக் காணப்பட்டதென்பதாகவும் பர்மிய அறிஞர்கள் வியந்து பாராட்டி எழுதி யுள்ளார்கள். இவ் வதிசயங்களைக் கண்ணுற்ற மன்னரின் மத குருவானவர், மன்னரைக் கண்டு, "தாம் கண்ட அதிசயங்கள் அனைத்தும் விசேஷ அறிகுறிக ளென்றும் ஆதலால்



பர்மிய இளவரசி, இளவரசர்

அரண்மனையில் ஏதாவதொரு சம்பவம் நிகழ்ந்திருத்தல் வேண்டு" மென்றும் கேட்டார். அரசன் புன்முறுவல் கொண்டு தமக்கு ஆண் குழந்தை பிறந்திருப்பதாகச் சொன்னார். அதன்மேல் குருவானவர் குழந்தைக்குப் பெயர் சூட்டி யாயிற்றா வென்று வினவினார். அதற்கு மன்னர்கோன், குழந்தைக்கு டபின்ஷ-வேட்டீ என்னும் திருப் பெயரிட்டிருப்பதாகவும், தமது பத்தினிக்கு ராஜதேவி என்ற பெயரிட்டு, பட்டத்து ராணியாக முடி சூட்டிக்கொண்டதாகவும் பிரஸ்தாபித்தார். இதைச் செவியுற்றதும் சமய குரு மிக்க வருத்தமுற்று, " அப்படியானால் பிற்காலத்தில் உங்கள் அரச வமிச வழிக் கொடி தழைத்தோங்குவதற் கில்லை" யெனக் கூறிவிட்டு ஆச்சிரமம் நோக்கிச் சென்றார். அரண்மனை குருவின் எதிர்காக் ஜோஸியத்தைக் குறித்து மகா ஸ்ரீ ஸேயா சிறிதும் சிந்தித்தாரில்லை. இவ்வாறிருக்க டபின்ஷ-வேட்டீயின் முன் ஜென்ம வரலாற்றைக் குறித்து ரசமான கதை யொன்று சொல்லிக் கொள்ளப் பெறுகிறது. அக் கதை வருமாறு :—

" ஒரு காலத்தில் (ஹம்சாவதி) ஹந்தாவர்டி என்ற நாட்டை தர்மஸேட்டீ என்பார் ஆட்சி புரிந்து வந்தார். அவர் காலத்திற்குப் பிறகு அவர் மகன் மின்யேச் சோஸ-வா பட்டத்திற்கு வரவேண்டியவனாக இருந்தான். இதைப் பொறாது இந்திரசித்து என்பான், இளவரசனை சமயம் பார்த்துக் கொன்றான். யுவராஜன் உயிர் பிரியப் போகும் தறுவாயில் பின் வருமாறு பிரார்த்தனை செய்து இவ்வுலகை நீத்தான்.

" நான் குற்றமற்றவன் ; நிரபராதி. அவ்வாறிருந்தும் இந்த நிலைமையில் மரணத்தை எதிர் பார்க்க வேண்டிய கதிக்கு ஆளாகி விட்டேன். நான் நிரபராதியாக இருந்து வந்தது உண்மையானால், நான்

அடுத்த பிறப்பில் பர்மிய மன்னர்கள் வழித் தோன்ற விரும்புகிறேன். அப் பிறப்பில் நான் தகக பிராய மடைந்ததும் முத் தொகுதிகளாக இருந்துவரும் தல் லாய்ங் நாட்டை முற்றுகை யிட்டு, பலாத்காரத்தால் அடக்கி ஆளும் சகதியைப் பெற விழைகிறேன். நான் பதிலுக்குப் பதில் என்னுடைய பகைமையைத் தீர்த் துக்கொள்ள எண்ணுகிறேன். ஏ! இறைவா!! இது வே என்னுடைய தாழ்மையான பிரார்த்தனையின் முடிவு."

பிரார்த்தனை முடிந்ததும் இளவரசர் தன்னுடை களையும், பொருள்களையும் "ஷுவேமோடோ" என் னும் பொற் கோயிலுக்கு தர்மம் செய்தார். இத் திருக்கோயில் பெகு என்னும் ஊரில் கட்டப் பெற் றிருக்கிறது. பர்மாவின் புண்ணிய ஸ்தலங்களுள் இது வும் ஒன்று. இக் கோயில் 1930-ஆம் வருஷம் மே மாதத்தில் ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தால் சின்ன பின்னமாகியது. இக் கோயிலுக்கும், இரங் கூனுக்கும் ஐம்பது மைல் தூரமே உள்ளது. ஆண்டு தோறும் பல்லாயிரக் கணக்கான பர்மிய யாத்ரீகர்கள் இத் தலத்தை தரிசித்துச் செல்கின்றனர்.

டபின்ஷுவேட்டீ பதொ காலமானார். 1513-ம் ஆண்டில் டபின்ஷுவேட்டீ சிம்மாசன மேறினார். இவன் இராஜ்யபார மேற்ற இரண்டாம் ஆண்டில் காது குத்திக்கொள்ள வேணுமென்று மந்திரி பிரதா னிகளால் வற்புறுத்தப் பட்டான். டபின்ஷு வேட்டீ ஒப்புகொண்டானாயினும், அவ் வைபவம் ஷுவேமோடோ திருக் கோயிலில்தான் நடைபெற வேண்டு மென்று தெரிவித்தான். மந்திரி சபையார் திகைத்து விழித்தனர். "ஹம்சாவதி நாடு தங்களுக் குப் பகைமையான நாடாகு மாதலால் அந் நாடு சென்று அச் சடங்கை நடத்துவது ஆபத்தாகும்" என மந்திரி கூட்டத்தார் ஆலோசனை கூறினார்கள்.

அதைக் கேட்ட டபின்ஷுவேட்டியக்குக் கோபம்
பொங்கியது. மீசை துடித்தது. கையைப் பிசைந்து
கொண்டே "நாம் தல்லாய்ங்காரர்களுக்குத் தாழ்மை
யானவர்களல்ல" வென்று துடுக்காகக் கூறினான்.
உடனே அரண்மனை லாயத்தில் நிற்கும் சப்தரு
ஸேயா என்ற அசுவத்தைக் கொண்டு வர உத்தரவு
பிறப்பித்தான் டபின்ஷுவேட்டி சப்தருஸேயா
மீதாரோ கணித்துக் கொண்டு ஆயிரம குதிரைப்
படைகளையும், மந்திரி பிரதானிகளையும் அழைத்துச்
செல்வதென்று தீர்மானித்தான். படைகள் அணி
வகுக்கப்பட்டன. ஷுவேபோடோ புத்தாலயத்
திற்கு ஹம்சாவதி நாட்டை நோக்கி டபின்ஷு
வேட்டி படைகளை நடத்திச் சென்றான். எவ்வித
இடையூறுமின்றி டபின்ஷுவேட்டி பொற்கோயில்
போய்ச் சேர்ந்தான். டபின்ஷுவேட்டி இளம் பிரா
யதினனாக விருந்தும், சிறிதும் அச்சமின்றி அந்
நாட்டிற்குள் பிரவேசித்தது அவனிடத்தில் ததும்பிக
கிடந்த வீரத்தையும், அஞ்சாமையையும் வெளிப்படுத்
துகிற தன்றோ! டபின்ஷுவேட்டி பொற் கோயிலைச்
சுற்றி குதிரைப் படைகளை வரிசை வரிசையாக
நிறுத்தி காவலிருக்கச் செய்தான். அதன் பின்னர்
அவன் அமைச்சர்களுடன் திருக் கோயில பிராகாரத்
திற்குப் படி ஏறிச் சென்று, அங்கே சிர முடி களைதல்
காது குத்தல் முதலிய சடங்குகளைச் சரிவர முடித்
துக் கொண்டு திரும்பிச் செல்ல முயற்சித்தான்.
அதற்கிடையில் அவன் ஜென்ம விரோதியாகிய தல்
லாய்ங் தேசத்து மன்னனுக்கு, அவன் பொற்கோயில்
பிரார்த்தனைக்கு விஜயம் செய்திருக்கும் செய்தி எப்
படியோ எட்டி விட்டது. மன்னன ஆத்திரமடைந்
தான். உடனே டபின்ஷுவேட்டியைச் சிறைப்
படுத்தி விடவேண்டு மென்று ஆகாயக் கோட்டை
கட்டினான். தம்முடைய மெய் காப்பாளர்கள் தலை
மையில் யானைப் படை, குதிரைப் படைகளை அணி

வருக்கச் செய்து விரைந்தேகுமாறு கட்டளை யிட்டான். டபின்ஷுவேட்டீ கோயிலை விட்டு திரும்புவதற்குள் விரோதிகள் படை சூழ்ந்து கொண்டது. பகைவர்கள் வட்டமிட்டுச் சூழ்ந்து கொண்டிருந்ததை மந்திரிமார் பரபரப்புடன் டபின்ஷுவேட்டீ யிடம் தெரிவித்தார்கள். அக் கணமே டபின்ஷுவேட்டீ தமது ஜோலிகளை முடித்து விட்டு சரேலென்று கீழிறங்கி சப்தருஸேயா குதிரை மீதேறிக் கொண்டு பின் வருமாறு வீர கர்ஜனை செய்துகொண்டே எதிரிகளை விட்டேகினன்.

"நான் ஓர் அரசன். என் "பெயர் ஷுவேட்டீ உங்களுக்குப் பயந்தவ னல்லன்"

இவ் வாக்கியங்கள் கூறி முடிப்பதற்குள் அவன் படைகள் யாவும் பகைவர்கள் எதிர்ப்பி னின்றும் தப்பிய சாமர்த்தியம் மெச்சத் தக்கதாகும். அவன் கூறிய மொழிகளைக் கேட்டே பகைவர்கள் திக்கு முக்காடிப் பின் தொடர்ந்து செல்ல முடியாது தயங்கினர். எதிரிகளின் கோழைத் தனத்தைக் கண்ட டபின்ஷுவேட்டீ சாவதானமாகக் கேதுமதி போய்ச் சேர்ந்தான்.

பொற்கோயில் தரிசனத்திற்குப் பின் டபின் ஷுவேட்டீய்க்கும், ஹம்சாவதி நாட்டரசனுக்கும விரோதம் வளர்ந்துகொண்டே வந்தது. நாளேற ஏற டபின்ஷுவேட்டீய்க்கு ஹம்சாவதி நாட்டைக் கைப்பற்ற வேண்டுமென்ற பேராசை அதிகரித்தது. அச் சமயம் அவனுக்கு வயது பத்தொன்பது. அச் சின்னஞ் சிறு வயதில் எதிரியை மடக்கிவிட அவன் கையாடிய சூழ்ச்சிகள் பல சதியாலோசனைகள் செய்து பார்த்தான். அதற்கெல்லாம், ஹம்சாவதி மன்னன் அசைந்தானில்லை. ஆதலால், அவன் மீது படை யெடுப்பதே சாலுமென்று படைகளைத் திரட்

டிச் சென்றான். நோக்கம் ஈடேற வில்லை, அது கண்டு வேறு உபாயத்தை நாடினான்.

ஹம்சாவதி மன்னனை ஷின்டகாயுவெப்பி பெயரளவில் மன்னனாக இருந்தான். இராஜ தந்திரமோ, யுத்த சாகஸமோ அவனிடத்தில் இல்லை. எனினும், அவனுக்குப் பதிலாக அவனுடைய மெய் காப்பாளனும், அந்தரங்கக் காரியதரிசியும் நரித் தந்திரம் படைத்தவர்களாக இருந்தனர். படை அமைப்பதிலும், படை திரட்டுவதிலும், படை அணி வகுத்து நடத்துவதிலும் புத்தி கூர்மை உடையவர்கள். இவர்கள் அயல் நாட்டரசர்கள் படை யெடுத்து வந்தபோதிலும், இலேசாக நாட்டிற்குள் பிரவேசிக்க முடியாதபடி அத்தனை பந்தோபஸ்துகளை எல்லைப் புறத்தில் அமைத்திருந்தனர். அரசனுக்கு இவ் விருவரும் வலது புஜம், இடது புஜம் போன்றிருந்தனர். இவர்கள் போடும் திட்டம் அனைத்தும் நாட்டிற்கு அரணாக கருதப் பெற்று வந்தன. இவர்களுடைய சேவையைக் கண்டு அரசன் கவலை யற்றிருந்து வந்தான். பெரிதும் தமாஷாவிலேயே தமது கால முழுவதையும் போக்கினான்.

எதிரியின் இராஜ்யம் பிஞாலோ என்னும் அந்தரங்கக் காரியதரிசியாலும் பிஞாஜான் என்னும் மெய்க் காப்பாளராலும் பாது காக்கப்பெற்று வருவதை ஒற்றர்கள் மூலம் டபின்ஷுவேட்டி அறிந்து கொண்டான். உடனே அதற்கான உபாயத்தைத் தேடுவதில் கவலைப்பட்டான். ஹம்சாவதி நாட்டைப் பிடிக்க வேண்டுமென்ற பேராவா இவனைச் சதா காலமும் தூண்டிக்கொண்டே யிருந்தது. அதனால் அவன் எப்பொழுதும் அதைப் பற்றியே சிந்தித்து வந்தான். இதற்கிடையில் ஷின்டகாயுவெப்பிக்குக் கெட்ட காலம சமீபித்து விட்டது. அதற்கறிகுறியாக அவன் எக் காரணமுமின்றி வலிய டபின்ஷுவேட்டி யிடம்

சமாதானம் செய்துகொள்ள விரும்பினான். சீக்கிரத்தில் தூதுக் கூட்ட மொன்றை அனுப்புவிக்க ஏற்பாடு செய்தான்.

அவனுடைய ஏற்பாட்டைக்கண்டு மெச்சிய மெய்காப்பாளனும், அந்தரங்கக் காரியதரிசியும் சேர்ந்து தங்களுடைய பிரதிநிதியாகச் சிலரைத் தேர்ந்தெடுத்து அனுப்ப விருப்பங் கொண்டார்கள். அதற்கு ஷின்டகாயுவெப்பி சம்மதித்தான். தூதுக் கூட்டம் இரு பிரிவாகச் சென்றன. டபின்ஷ்வேட்டீ இரு கூட்டத்தையும் வரவேற்று உபசரித்தான். எனினும் பிஞாஜான், பிஞாலோ ஆகியவர்களின் சார்பாக அனுப்பப்பெற்ற பிரதிநிதிகளை மட்டும் விசேஷமாகக் கவனித்தான். இவன் இம்மாதிரி நடந்து கொண்டதற்குக் காரணம் வேறொன்று மல்ல; ஹம்சாவதி நாட்டின் அதிபதிக்கும் பிஞாஜான், பிஞாலோ ஆகியோருக்கும் பரஸ்பரமாக இருந்துவரும் நல்லபிப்பிராயத்தைக் கெடுத்து அன்னவர்களுக்கிடையில் தப்பபிப்பிராயத்தை உண்டுபண்ண வேண்டுமென்ற சூழ்ச்சியுடன் இரு தூதுக் கூட்டத்திற்கும் வேற்றுமையைக் கற்பித்தான். தன்னுடைய சூழ்ச்சி பலித்துவிட்டதாக பெருமை கொண்டான். ஒரு பக்கம் வேற்றுமைத் தீயை மூட்டினான். போதாக் குறைக்கு மற்றோர் பக்கம் தனனுடைய ஞாபகார்த்தமாக சில புஷ்பங்களைப் பறித்து அவற்றைப் பிஞாலோ, பிஞாஜான் ஆகியோரிடம் சமர்ப்பிக்குமாறு அவ் விருவர் சார்பில் வந்த பிரதிநிதிகளிடம் கொடுத்தனுப்பினான். கள்ளங் கபடமற்ற ஹம்சாவதி மன்னன் டபின்ஷ்வேட்டீயால் அவமதிக்கப் பெற்றான்.

டபின்ஷ்வேட்டீ அரண்மனையில் தூது கோஷ்டியார் இரு தொகுதியாகப் பிரிக்கப்பெற்று உபசரிக்கப் பட்டதாகவும், அரசன் சார்பில் சென்ற தூதுவர்களால் சொல்லப்பட்டது. ஷின்டகாபுவெப்பி தம்

மூடைய செயலுக்காக வருந்தி ஒரு பக்கம் வெட்க மும், மற்ளுெரு பக்கம் துக்கமும் கொண்டான். இரு நேத்திரங்களை யொத்த பிஞலோ, பிஞஜான் ஆகி யோர் மீது அவன் வைத்திருந்த நம்பிக்கையை நாளடைவில் இழந்து வந்தான். டபின்ஷ-வேட்டீ மூட்டிவிட்ட வேற்றுமைப் புண் ஆறுவதற்கு முன் மீண்டும் டபின்ஷ-வேட்டீயால் பிஞஜான், பிஞலோ ஆகியோருக்குப் புதை குழி வெட்டத் தீர்மானித்து அதற்கேற்ப சதியாலோசனைகள் கையாளப் பெற்றன. டபின்ஷ-வேட்டீ பொன்னேட்டில் விஷயத்தை யெழுதி அதை பிஞலோ, பிஞஜான் அனுப்பும் முறையில் தயாரித்தான். அப் பொன் னேட்டுக் கடிதத்தின் சாரமாவது:—

"கேதுமதி மாநகரத்தை அரசாளும் அரசனு கிய யான் எழுதுவதாவது. நீங்களிருவர் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடி ஏற்பாடு நடை பெற்று முடிவுறின், ஹம்சாவதியை பிஞலோவுக்கும், மார்ட்டபனை (மொவ்ட்டமா) பிஞஜானுக்கும் கொடுத்துவிடுகிறேன். ஏற்பாட்டைப் பூரணமாக முடித்துவிட முயற்சியுங்கள். நன்றி உடையவனுக இருப்பேன்."

இக் கடிதம் உரோமத்தாலாய பைக்குள் போடப்பெற்று பலமாகக் கட்டி கயிற்றின்மீது அரக்கு முத்திரை யிடப்பெற்றது. அதன் மேல் உறையாக வெல்வெட்டுப் (உயர்தரப் பட்டு) பையை உபயோ கிக்கப் பெற்றது. இக் கடிதப் பை இரண்டு புஜபல பராக்கிரமசாலிகளிடம் கொடுக்கப் பெற்றது. அவ் விருவர்க்குத் துணையாகப் பலர் உடன் சென்ருர்கள். டபின்ஷ-வேட்டீ செப்பிய பிறகாரம் இக் குழுவினர் அந் நாட்டில் மூன்றிடங்களில் தங்கிச் சென்றனர். நான்காவதாகத் தாங்கள் தங்கவேண்டிய இடத்தில் வலியக் கலகம் விளைவித்தனர். அதன் பயனுகக்

கிராம வாசிகளுக்கும், இக் கூட்டத்தார்களுக்கும் பலமான சண்டை மூண்டது. சமயம் பார்த்து கடிதப் பையைக் கீழே எறிந்துவிட்டு கேதுமதியை நோக்கி திரும்பி யோடினார்கள், கலகமும் ஒடுங்கியது. கீழே கிடந்த பையை தல்லாய்ங்காரர்கள் எடுத்துக் கொண்டு போய் ஷின்டகாயுவெப்பியிடம் சமர்ப்பித்தார்கள். அரசன் ஆவலுடன் பிரித்துப் பார்த்தான். விஷயத்தைப் படித்தவுடன் அவனுக்கு ஆத்திரம் மூண்டது. ஏற்கனவே பிஞாலோ, பிஞாஜான் ஆகியோர் மீது அரசன் அதிருப்தி கொண்டிருந்தமையால் சிறிதும் முன் பின் யோசியாது அவர்களைக் கொலை செய்துவிட்டான். இவ் விருவரும் சூது வாதற்ற நிரபராதிக ளென்பதை வாசகர்கள் அறிந்திருக்கலாம். இவர்கள் கொலையுண்டது ஹம்சாவதி மன்னனுக்கும், அந் நாட்டிற்கும் கேட்டை விளைவித்தது. சில நாட்களில் அந் நாட்டிற் கிருந்த செல்வாக்கும், பாதுகாப்பும் குறைய ஆரம்பித்தது. அத் திக்கு முக்கான சமயத்தில் டபின்ஷுவேட்டீ படை யெடுத்து வந்தான். போர் முனையில் எதிர்த்து நிற்க வலிமை யற்ற ஷின்டகாயுவெப்பி உயிரைப் பெரிதாக வெண்ணி, புரோம் நகரை ஆட்சி புரிந்து வந்த நரபதி என்பவரிடம் அடைக்கலம் புகுந்தார். இவருடைய பயங் கொள்ளித் தனத்தைக் கண்ட டபின்ஷுவேட்டீ எளிதில் ஹம்சாவதி நாட்டை முற்றுகையிட்டான்.

ஷின்டகாயுவெப்பி புரோமில் அடைக்கலம் புகுந்தாரென்று முன்னரே குறிப்பிட்டுள்ளோம். இம் மன்னர் அடைக்கலம் புகுந்த நாடு, அன்னாரின் மைத்துனர்க்குச் சொந்தமான நாடாகும். சிம்மாசனத்தைத் துறந்து வெளிநாட்டிற் கேகி தனி வாசம செய்ய விழைவு கொண்ட ஷின்டகாயுவெப்பி, அடைக்கலம் புகுந்த செய்தி காட்டுத் தீ போல் பரவியது. டபின்ஷுவேட்டீ புரோம் மீது படையெடுக்க அந் நாட்டை நோக்கி விரைந்து சென்றான். மந்தி

யில் நௌன்யோ என்ற காட்டாறு குறுக்கிட்டது. அதுகாலை ச்சோடின்—நோரட்டா என்பவர், டபின்ஷ்வேட்டீயக்கு ஒத்தாசை புரிய வந்தார். காட்டாற்றைக் கடக்க மூங்கிற் றெப்பம் (மிதப்பு) துரிதமாக தயாரிக்கப் பெற்றது, எல்லா சேனைகளும் மிதப்பின் உதவியால அக்கரை சேர்ந்தன. எதிரியை முறியடிப்பதற்குப் போதிய படைகள் ச்சோடின்—நோரட்டா தலைமையில் அமைக்கப்பட வில்லை. படைவலிமை இன்றியமையாததென்பதை அறிந்திருந்தும் தன் கீழ் குறைந்த சேனைகள் ஒப்புவிக்கப் பெற்றிருப்பதற்காக அவர் தயங்கினாரில்லை இதன் காரணமாக மூங்கிற் றெப்பம அவரால் சின்ன பின்ன மாக்கப் பெற்றது. சைன்யக குறைவால் ஒருகால் தம்முடைய படை வீரர்கள் போர முகத்தில் வெருண்டு மூங்கிற் றெப்ப உதவியால் புற முதுகுக் காட்டி ஓட முயற்சித்தாலும் முயற்சிப்பரென்ற எண்ணத்தால் மூங்கில் மிதப்பை அழித்துவிட உத்தரவு செய்தார். யுத்தரங்கத்தில் இன்னவருக ஏற்பட்ட சமயோசித புத்தியை எவர்தான் வியந்து கூறும விருப்பர்! இது ஒருபுற மிருகக, மூங்கிற் றெப்பம அழிககப் பெற்ற செய்தியைக கேட்ட வீரர்களும், படைத் தலைவர்களும் "நமக்கு சைன்யஙகள் மிகக் குறைவு; நம்மைவிட அவாகளுக்குப் பத்து மடங்கு அதிகமான படைகளுண்டு. அவாகளுடன போராடி வெற்றி பெற்றால் மட்டும் நமக்கு நன்மை யுண்டு. சண்டை முகத்தில் எதிரிகளுடன் தீவிரமாகப் போராட முடியாமல் தவிக்க வேண்டி நேரிட்டால் சிற்றாற்றைத் தாண்டுவதற்கு மிதபபன்றோ வேண்டும. அம் மிதப்பும் அழிக்கப் பெறறு விட்டதே. ஆதலினா நமக்குப் பின்னால் சங்கட மன்றோ நேரும்" என்று பயங் கொள்ளிதனமாக ச்சோடின—நோரட்டாவிடம் கூறினர். அதற்கு அவர் அளித்த பதிலில் "சகோதரர்களே! பயப்படாதேயுங்கள். நாம்

அருட் கடாட்சத்தால் வெற்றி யுறுவோம். இருந்த போதிலும் ஆற்றைக் கடப்பதற்கு மிதப்பென்ற சாதனம் இல்லாம லிருந்தால், நாம் அனைவரும் சபல சித்தமின்றி உயிரைத் திரணமாகக் கருதி வலிந்து போர் செய்யத் துணிபு கொள்வோம். எதிரியின் படை வலிமையைக கண்டு அதனால் கிலியும் சோர்வும் கொண்டு ஒருகால் நாம் பின் வாங்கலாம். வரப் போகும் நிலைமையை நான் ஒருவாறு நிதானித்தே அம் மாதிரி மூங்கிற் றெப்பத்தை அழித்து விட ஆக்ஞாபித்தேன்'' என்று கூறினார்.

சத்துருவைக் கண்டவுடன் சண்டையிடக் கூடாதென்றும், தான் வந்ததன் மேல் யுத்தம செய்ய வேண்டு மென்றும் ச்சோடின்—நோரட்டாவுக்கு டபின்ஷ—வெட்டீ அறிவித்தான். போர் தொடுப்பதற்கு முன் தெய்வ அருளால் யுத்தத்தில் ஜெயம் பெற்று விட்டதாக வீரா வேசத்துடன் ச்சோடின்—நோரட்டா என்பவர் டபின்ஷ—வெட்டீயக்கு தகவல் கொடுத்தார்.

இச் செயல் அவரின் துணிபு எத்தன்மைத் தென்பதை உணர்த்துகிறது. அது சமயம் மைய்ன்யே என்ற அமைச்சர் குறுக்கிட்டு ''நாம் இன்னும் வெற்றி அடைய வில்லை ஆரம்பமாக எதிரியை நாம் பார்க்கவு மில்லை. அப்படி இருந்தும் நீங்கள் போர் முகத்தில் ஜெயம் பெற்று விட்டதாக சமாச்சாரம் சொல்லி அனுப்பி விட்டீர்களே ! ஒருகால் அபஜெயமானால் நாம் என் செய்வது ?'' என்று திகைப்புடன் கேட்டார். ச்சோடின்—நோரட்டா, அதற்கு சமாதானம் கூறுகையில், ''நாம் யுத்தத்தில் வெற்றி பெற்றால் மட்டும் உயிர் வாழ்வோம். வெற்றி ஏற்படாமற் போனால் நாம் இறந்துபோக நேரிடும். இறந்து போனவர் மாட்டு சாட்டப் பெறும் குற்றத்திற்காக யார்தான் வருந்துவர் !'' என மிகத் தெளிவாகக்

குறிப்பிட்டார். இவருடைய ஒப்பற்ற தியாகமும், மன உறுதிப்பாடும் இறுதியில் வெற்றி ஏற்படச் செய்தது. இன்னவருடைய சமயோசித புத்தி மிக வும் மெச்சத் தக்கது, இவ் வீர புருஷனின் சரிதை யைப் பற்றி "யங் பர்மா" பத்திரிகையில் சில ருசி கரமான தகவல்கள் திரட்டப் பெற்று வெளியிடப் பெற்றிருந்தன. அவை சயாம் பாஷையி னின்றும் மொழி பெயர்க்கப் பெற்றவை யாகும். அவற்றின் சாரமாவது:— ச்சோடின்-நோரட்டா என்பவர், "ஹந்தாவாடி நகர்புறத்துக் கதவை பலவந்தமாக உடைத்து உள்ளே பிரவேசித்த சமயம் குதிரை மீதேறி யிருந்தமையால் அவர், படைகளுக்கு வழி காட்டியாக ஊருக்குள் வேகமாகச் சென்றார். அந் நெருக்கடியான போராட்டத்தில் பகைவர்கள் இவர் மீது சூலாயுதத்தை யெறிந்தனர். சூலாயுதம் அன்னவர் தொடைக்குள் பாய்ந்து கொண்டது. சூலாயுதத்தின் பிடியை மட்டும் தம்முடைய கத்தி யால் சிதையுண்டு போகுமாறு வெட்டினார். சம்ப வம் நிகழ்ந்த சிறிது நேரத்திற்குள் அரண்மனை சேர்ந் தார். அரண்மனையைக் கைப்பற்றிய பின்னரே, அன் னவர் தொடையில் பாய்ந்து கிடக்கும் சூலாயுதம் வெளியேற்றப் பட்டது. ஹந்தாவாடி நாட்டை முற்றுகை யிட்டதன் பயனாக ச்சோடின்—நோரட்டா என்ற மகா பட்டம் அவருக்கு வழங்கப் பெற்றது.

புரோம் நகரை முற்றுகையிட்ட பின்னர், டபின் ஷ்வேட்டீ சயாம் மேல் படை யெடுத்தான். சயாம் தேசம் சுதந்தரம் பெற்ற நாடாக இந் நாளில் திகழ் கிறது. இத் தேசம் பர்மாவிற்கு தென் கிழக்கி லிருக்கிறது. சயாம் மன்னரும், குடிகளும் பௌத்த மதத்தினர்க ளாவர். சீரும் சிறப்பும் வாய்ந்த டபின் ஷ்வேட்டீ போர் தொடுக்க முற்பட்டது அவனின் முன் ஜென்ம கூற்றே யெனக் கொள்ளலாம். சயாம்

மேல் படை யெடுத்துச் சென்றபோது ச்சோடின் நோரட்டா தலைமை வகித்தார். சயாம் பிரஜைகளுக்கும், பர்மியருக்கும் பல நாட்கள் வரை பலமான யுத்தம் நடைபெற்று வந்தது. ஆயினும் அப் போராட்டத்தில் சயாம மன்னருக் குதவியாக ஓயா லகூன் எய்ண் மா என்பவர், ஏழடி உயர முள்ள ஸேயானுப்பா என்ற யானை மீதமர்ந்து போர்க்களம் நோக்கி விரைந்து சென்றார். இவர் சயாம் மன்னரின் மருகராவர். இவர் வந்து கொண்டிருப்பதைக கண்ணுற்ற ச்சோடின் நோரட்டா யானை மீதேறி பீரங்கி குண்டை கிளப்பி விட்டார். அதன் பயனாக அவ்விளவரசர் கீழே மூர்ச்சித்து விழுந்தார். அதே சமயத்தில் ஸேபா பல்லீன் என்ற யானை மீதேறிக் கொண்டு ச்சோடின் நோரட்டா முன்னைவிட துரிதமாக ஏனையோர்களுடன் போராட முற்பட்டார் அச்சந்தர்ப்பத்தில் இளவரசன் யானை பலமாகத் தாக்கப்பட்டது. அதனால் அதன் கடை வாயில் கனதத காயமேற்பட்டது. அக் கடும் போர் நடநது கொண்டிருக்கையில் ச்சோடின் நோரட்டாவின் பதின்மூன்று வயது பாலகன் ஸேபா ஸீகா என்பவன் யேஹூலின என்ற யானையின் உதவி கொண்டு எதிரிகளைத் துரத்தி துரத்தி யடித்த சாமர்த்தியம் மிகவும் மெச்சத் தககது. கடைசியாக எதிரிகளின் யானைகளைப் பார்த்து சூலாயுதங்கள் எறியப்பட்டன. முடிவில் ஒரு யானைககு மாத்திரம் இரு காதுகளில் சூலாயுதங்கள ஊடுருவிப் பாய்ந்து கொண்டன. சயாம் இளவரசர் தலைமையில் போர் தொடுதத வீரர்களும் படைகளும சரண் புக நேரிட்டது. பர்மியர் வெற்றி மாலை சூடினர். ஸேயாஸீகாவின் சமயோசித புத்தியையும, உதவியையும் புகழ்நது. டபின்ஷ்வேட்டீ அரச சிறுவனுககு "மீன்யேச்சோஸ்வா" என்ற பட்டத்தையும் கொடுத்து தங்க வெற்றிலைப் பெட்டி, தேத் தண்ணீர் சட்டி, ஐம்பொன் எச்சிற் பணிக்கம், தங்கச்

செம்பு ஆகியவற்றைப் பரிசாக அளித்து கௌர வித்தார்,

டபின்ஷாவேட்டீ, யுத்தம் முடிந்ததன் பின்னர், போர்க் களத்திற்கு வந்து சேர்ந்தான். அதுகாலை படை வீரர்கள் யுத்தத்தில் ஜெயித்துவிட்டோமென்று கர கம்பம் சிர கம்பம் செய்தனர். டபின்ஷாவேட்டீ தமக் கேற்பட்ட வெற்றியைக் குறித்து வெளிப்படை யாக ஒன்றும் சொல்லாது கீழ்க் கண்டவாறு மொழிந் தான். "சத்துருவைக் கண்டவுடன் நீங்கள் யுத்தம் செய்யக் கூடாதென்றும், என் வரவை எதிர் பாருங்க ளென்றும், நான் வந்ததன் பின்னர் சண்டை செய் யலாமென்றும் கட்டளை யிட்டிருந்தேன். அவ்வா றிருந்தும் நீங்கள் உத்தரவைப் புறக்கணித்து விட் டீர்கள்?"

அதுபோது பய்யின்னவ்ன் சசோடின் நோ ரட்டா என்பவர், தாம் எதற்காக கட்டளையைத் தாங்கி நடந்துகொள்ள முடியவில்லை யென்பதற்குத் தக்க விடை பகர்ந்தார். அது வருமாறு:—

"யுத்தரங்கத்தில் உங்கள் வரவை நாங்கள் ஆவ லுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தோம். அது போது சத்துருக்கள் எங்களை மடக்கி விடும் நோக்கத் துடன் இரு புறங்களிலும் வந்து கொண்டிருந்தார் கள். அவ் வேளையில் அரசரின் உத்தரவிற்கு நாங் கள் பயந்து கொண்டிருக்கவில்லை யென்றும், பொது வாக நாங்கள் எதிர்த்துப் போராடும் சக்தி அற்றவர்க ளென்று பகைவர்களால் இழித்துரைக்கப் பெறுவோ மென்ற காரணத்தால் கட்டளையை மீறுவதால் எங் கள் சிரசுகள் துண்டிக்கப் பட்டாலும் பாதகமில்லை; பகைவர்களின் பட்டாக் கத்திக்கு மட்டும் இரையா கோம என்று யுத்தத்தைத் துவக்கினோம்" என கூறினார். டபின்ஷாவேட்டீ, ச்சோடின் நோரட்டா

கூறியவற்றைக் கூர்ந்து கேட்டானாயினும், தம்முடைய உத்தரவு புறக்கணிக்கப் பட்டது மட்டும் உண்மையே யென்றும், ஆயினும் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் சமயோசிதமாக யுத்தம் செய்ததைக் குற்றமாகக் கொள்வதற்கில்லை யென்றும், அச் சந்தர்ப்பத்தில் படை வீரர்களும் தளகர்த்தர்களும் அஞ்சா நெஞ்சத்துடன் எதிர்த்துப் போராடினமைக்காக தாம் பரிசுகள் வழங்கப் போவதாகவும் கூறி புன்னகை புரிந்தான்.

டபின்ஷாவேட்டியின் கீர்த்திப் பிரதாபம் ஒரு காலத்தில் ஓங்கி யிருந்தது; பிற்காலத்தில் பிரஜைகளால் அவன் வெறுக்கப்பட்டான். ஒருவனுடைய வாழ்வும் தாழ்வும் அவனுடைய செயலைக் கொண்டேற்படுகிறது. அவன் குடியால் கெட்டடைந்த வரலாறும், அவன் செய்துகொண்ட தீய சகவாசமும் விசித்திரமாக இருக்கிறது. பிஸ்ஸராஜ் என்ற பெரிங்கி மன்னரொருவர், தம்முடைய மருமகன் ஒருவர் தலைமையில் ஆஸீ என்னும் ஊர்மேல படை யெடுக்குமாறு படைகளை யனுப்பி யிருந்ததாகவும், கடல் யாத்திரையின் போது ஏற்பட்ட அசம்பாவிதங்களின் பயனாக பாய்க் கட்டிக் கப்பல்கள் மூலைக்கொன்றாக மறைந்ததாகவும், எப்படியோ அதில் பிஸ்ஸராஜ் மன்னரின் மருமகனான இளவரசன் மட்டும் மார்ட்டபான துறைமுகம் வந்து சேர்ந்ததாகவும், அது சமயம் மார்ட்டபான் கோமகனால் அவன் கைது செய்யப் பெற்று டபின்ஷாவேட்டி அரண்மனையில் ஒப்புவிக்கப் பெற்றதாகவும் தெரிகிறது. நாளேற ஏற அவ் விளவரசரின் குணாதிசயங்களைக் கண்டு டபின்ஷாவேட்டி இரக்கம் காட்டினான். உடுக்க உடையும், இருக்க இடமும் தந்தான். இவ்வாறிருக்க, டபின்ஷாவேட்டி ஒரு நாள் மான வேட்டையாட காட்டுக்குப் புறப்பட்டான. அதுபோது யுவராஜ

னும் உடன் சென்றான். இளவரசனைச் சோதிக்க எண்ணி, டபின்ஷ-வேட்டி ஓரிடத்தில் புஷ்ப மொன்றை வைத்து, அதைப் பார்த்து சுடுமாறு கூறினான். இளவரசன் குறி தப்பாது சுட்டான். டபின்ஷ-வேட்டி, யுவராஜனின் திறமையைக் குறித்து மிகவும் சந்தோஷங் கொண்டு அதிக நேசம் பாராட்டி வந்தான். நாளடைவில் இருவரும் பிரியாச் சிநேகிதர்களானார்கள். இளவரசன், சொந்த முறையில் உணவுகள் தயாரிப்பதும், அவற்றை டபின்ஷ-வேட்டியை உட்கொள்ளச் செய்வதுமாக காட்டில் உல்லாசமாய் காலம் கழித்து வந்தான். ஆயினும் புத்தியைக் கெடுத்து, மயக்கத்தை வளர்த்து மக்களை அடிமை படுத்தும் மயக்க வஸ்துக்களிலொன்றாகிய ஒருவகை பழ ரசத்தைச் செய்து டபின்ஷ-வேட்டியை உட்கொள்ளுமாறு பன்முறை நயந்து கேட்டு பருகச் செய்தான். பழ ரசத்தின் இனிமைக்கும், அதனால் ஏற்படும் மயக்கத்திற்கும் டபின்ஷ-வேட்டி அடிமையானான். இவ்விதமாக இவர்கள் வனத்தில் வேட்டை யாடிக்கொண்டு வருகையில், பெரிங்கி இளவரசனால் மற்றுமோர் வகையில் தேனைக் கொண்டு லாகிரி பானம் தயாரிக்கப்பட்டது. டபின்ஷ-வேட்டி அம் மதுபானத்தையும தினந்தோறும் குடித்து வந்தான். சுருங்கச் சொல்லுமிடத்து டபின்ஷ-வேட்டி குடியில் மூழ்கி விட்டதாகவே கூற வேண்டும். அதன் பயனாக அவனுடைய அறிவு மழுங்கி புத்தி கெட்டு வந்தது. இவன் மனைவியை அவனுக்கென்றும், அவன் மனைவியை இவனுக்கென்றும் முன்னுக்குப் பின் முரணாக விசாரித்து வழக்குகளில் தீர்ப்புச் சொல்லி வந்தான். அரசாங்கத்திற்கு விரோதமாக சதியாலோசனைகள் புரிந்து வந்ததாகக் குற்றஞ் சாட்டப்பெறும் மக்களின் விவாதங்களுக்கு அவன் சிறிதும் செவி சாய்ப்பதில்லை. டபின்ஷ-வேட்டி நீதி வழி நின்று பரிபாலனம் செய்யாமல்

வேசி தாசிகளின் மையலில் மயங்கி வருவதைக் கண்டு ச்சோடின் நோரட்டா சோகமுற்று பின் வருமாறு அவனிடம் கூறினர்.

" அரசரே! தங்களுடைய பழக்க வாசனையும், ஒழுக்க முறையும் நாட்டிற்குக் கேடு சூழ்வதாக இருக்கிறது. இவை தங்கள் போன்றோர்க்கு அழகல்ல. மதுபானக் கடலில வீழ்ந்து அதுவே உயர் பதமென எண்ணி இறுமாந்துள்ள தங்களைக் கரை சேர்ப்பது என்பது இயலாத காரியமாகும்."

இவற்றைக் கேட்ட டபின்ஷுவேட்டீ பதிலளிக்கையில், தம்மிடத்தில் முறையிடு செய்து கொள்வதால் பயனில்லை யென்பதாகவும் இனி தாம் தமாஷாவிலேயே பொழுது போக்க விருப்பங் கொண்டிருப்பதாகவும், ஆதலால் தேசீயம், ராஜீயம் சம்பந்தமாக கவனித்து வரவேண்டிய சகல வித பொறுப்புகளையும் பய்யின்னவன் ச்சோடின் நோரட்டாவே இனி ஏற்றுக் கொண்டு பரிபாலனம் செய்ய வேண்டு மென்பதாகவும் சொன்னன், இவனுடைய குடிவெறி தர்பார் ஆர்ப்பாட்டங்களைக் கண்டும், கேட்டும் பிரஜைகள் ஒரு பக்கம் ஆத்திர மடைநதார்கள். பொதுவாக ஒரு தேசத்து வேந்தன் குடிகளுக்கு விரோதமான காரியங்களைச் செய்தேனும், அக் குடிகளுக்கு இம்சை புரிந்தேனும் எதேச்சாதிகாரம் செலுத்தி வருவானாயின், அவனையும், அவனுக் காதரவாக இருந்து வரும தேசத் துரோகிகளையும தொலைத்துவிட குடி மக்கள் கிளர்ச்சிசெய்வது வழக்கு. டபின்ஷுவேட்டீ அரண்மனையில் ஆடிய திருவிளையாடல்க ளெல்லாம் பிரஜைகளிடை மனக் கசப்பை யதிகரிக்கச் செய்தது. இதன் பயனுல் அவனுக்குத் தக்க பாதுகாப்பு ஏற்படுத்தப் பட்டது. மந்திரி பிரதானிகளை மெய் காப்பாளர்களாக நியமனம் செய்யப்பட்டார்கள். அறவழி நின்று மறவழி சென்ற டபின்ஷுவேட்டீ மீது ச்சோடின்

நோரட்டா சிறிதும் கெட்ட அபிப்பிராயம் கொள்ளவில்லை. டபின்ஷூவேட்டிக்கு எவ்வித ஆபத்தும் நேரா வண்ணம் ச்சோடின் நோரட்டா, அவனுடைய சயன அறையில் பிரதி தினமும் விடியற் காலம் வரை தூங்காமல் பாதுகாத்து வந்தார். அவன் படுக்கையை விட் டெழுவதற்கு முன் ச்சோடின் நோரட்டா தர்பார் மண்டபத்திற் கேகி தேச விசாரணை செய்து வருவார். அதன் பயனாக நிரபராதிகள் பலர் விடுதலை பெற்று வந்தார்கள். அத்துணை மாறுதலில் டபின்ஷூவேட்டியின் அரசாங்கம் நடந்து வருகையில், தல்லாய்ங், பர்மியர், ஷான் முதலிய வகுப்பைச் சேர்ந்த அமைச்சர்கள் கலந்தாலோசித்து கீழ் வருமாறு ச்சோடின் நோரட்டாவிடம் முறையிட்டுக் கொண்டார்கள். "இனி நாட்டில் அமைதி நிலவுவதற் கில்லை. டபின்ஷூவேட்டியை சிம்மாசனத்தினின்றும் அப்புறப் படுத்த வேண்டும். நீங்கள் மன்னராக முடி சூட்டிக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்தால் வழக்கம் போல் எங்களுடைய கடமைகளைத் தவறாது செய்து வருவோம்."

ச்சோடின் நோரட்டா ஆழ்ந்து யோசித்த பின் கூறியதாவது:—

"அன்பார்ந்த சகோதரர்களே! நமக்குள் டபின்ஷூவேட்டியின் அறம், நன்றி ஆகிய நன்மைகள் பொதிந்து கிடக்கின்றன. உங்களின் முறையீடு என் காதிற் கேட்டியதோடு நிற்கட்டும். பிறருக்குத் தெரியப் படுத்தாதேயுங்கள். ஒழுக்க நிலை தவறியவன் நூற்றாண்டு மட்டும் ஜீவித்திருப்பதைப் பார்க்கிலும், அறவழி நின்று அரசாங்கம் புரியு மொருவன் ஒரு நாளைக் கிருப்பதே மிகவும் சால்புடைத்து என்பதாக நான் நீதி நூற்களில் படித்திருக்கிறேன். இன்னும என்னாலாய மட்டும் அரசனுக்கு நல்லுபதேசம் செய்து பார்க்கிறேன், அதன் பயனாக ஒன்றும் முடியா விட்

டால் நான் அரசனுக்கு துரோகம் செய்யமாட்டேன். நண்பர்களே! நாம் ஒற்றுமையுடன் தேச பரிபாலனம் செய்து வர வேண்டும். நீங்கள் எதற்கும் அஞ்ச வேண்டாம். அமைதியாக இருங்கள்"

அமைச்சர் குழாங்களிடம் ச்சோடின் கோரட்டா கொடுத்த வாக்குறுதியின்படி நடந்துகொள்ள முன்னை விட அரசாங்க விஷயத்தில் கண்ணும் கருத்துமாக இருந்து நடவடிக்கைகளை கவனித்து வந்தார். டபின்ஷுவேட்டீயின் பிரிய சிநேகிதனாக இருந்து வந்த பெரிங்கி இளைஞனுக்கு தக்க பொருளுதவி செய்து அவனைச் சுய தேசத்திற்குச் செல்லுமாறு ச்சோடின் கோரட்டா மரக்கல மொன்றில் பிரயாணப் படுத்தி வைத்தார்.

டபின்ஷுவேட்டீ கொலை செய்யப்படுதல்.

கி. பி. 1551-ல் இராங்கூனுக் கடுத்த சீரியம் என்னும் ஊரில பிரஜைகள் குழப்பம் செய்ய ஆரம்பித்தனர். இக் குழப்பத்தை அடக்கி நாட்டில் அமைதியை யேற்படுத்தும் விஷயத்தில் பய்யீனவ்ன இராஜதானியை விட்டுச் சொல்லுமபோது டாங்கோ இளவரசராகிய தீகா என்பவர் டபின்ஷுவேட்டீ அரண்மனையில் வாசம் செய்து வந்தார். தனக்கு வெள்ளையானை கிடைத்துவிடு மென்று தாம நம்புவதாகவும்; ஆதலால் மார்ட்டபானில் படைகளைத் திரட்டிக் கொண்டு வர வேண்டு மென்பதாகவும் டபின்ஷுவேட்டீ உயிர்த் தோழராகிய ச்சோடின் கோரட்டாவுக்குக் கட்டளை யிட்டான். அரசனுடைய வார்த்தையைக் கேட்ட ச்சோடின் கோரட்டா பதிலளிக்கையில், தமக்கு அரண்மனையை விட்டு வெளியே போக விருப்ப மில்லை யென்றும் அரசரை விட்டுக் கண நேரமும் பிரிந்து நிற்க இஷ்ட மில்லை யென்றும் அவருக்கு மெய் பாதுகாப்பு இன்றி யமையாத தென்

றும் கூறினர். டபின்ஷ்வேட்டீ ச்சோடின் நோரட்டாவின் அபிப்பிராயத்தைப் புறக்கணித்தான். மதியூகி மந்திரி கூறியவற்றை மன்னன் புறக்கணித்தது அவனுடைய கெட்ட காலத்தின் அறிகுறியேயாகும். அரசனுக்கு அரண்மனையில் விசுவாசமுள்ளவர்களாகப் பலர் இருந்து வந்த போதிலும், அவர்கள் அந்தரங்கத்தில் டபின்ஷ்வேட்டீயைச் சமயம் பார்த்துக் கொல்லுவதற்கே பெரிதும் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ச்சோடின் நோரட்டா அரண்மனையில் இல்லாமலிருந்ததால் சிட்டாங் இளவரசனாகிய மெய்ன் ஸோட்டூ என்பவன், தம்முடைய சகோதரர்களின் உதவி கொண்டு டபின்ஷ்வேட்டீயைப் படுக்கை அறையில் கொலை செய்துவிட சதியாலோசனை செய்து, தக்க எச்சரிக்கையுடனிருந்து வந்தான். தக்க சமயம் வாய்த்தமையால் கன்னெஞ்சம் படைத்த இளவரசன் டபின்ஷ்வேட்டீயை ஒரு வெட்டில் தலை வேறாகவும் உடல் வேறாகவும் ஆகும்படி வெட்டி விடுமாறு ஆக்ஞாபித்தான்.

1517-ஆம் ஆண்டில் டபின்ஷ்வேட்டீ பிறந்தான். 1551-ல் விரோதியால் கொலை செய்யப்பட்டு உயிர் துறந்தான். அவனுடைய பிரேதம் ஒரு பௌத்த குருவால் தகனம் செய்யப் பெற்றது. அஸ்தியை மட்டும் ஒரு தங்கப் பானையில் போட்டு, பிரத்தியேகமான ஓர் இடத்தில் புதைத்து வைத்தனர்.

# அதிகாரம் 11.

## ச்சோடின் நோரட்டா

### அல்லது

## பர்மிய நெப்போலியன்

டபின்ஷ்வேட்டீ காலமாகிய பின்னர் பய்யினவன் சிம்மாசன மேறினார். இவர், டபின்ஷ்வேட்டீ ஆளுகையில் செய்து வந்திருக்கும் ஒவ்வொரு காரியங்களும் அன்னவருடைய வீரப் பிரதாபத்தையும், அஞ்சாமையையும், நேர்மையையும் விளக்குவதாக இருக்கின்றன.

1516-ஆம் ஆண்டில் இவர் பிறந்தார். குழந்தைப் பெயர் ஷின் யேட்டு. பிறக்கும்போது அரண்மனை படிக்கட்டுகளுக்குக் கீழ் பாகங்களில் தேனீக்கள் கூடுகள் கட்டினதாகவும் ஏழு தடவை பூமி குலுங்கியதாகவும் சொல்லிக் கொள்ளப்படுகிறது. ஷின் யேட்டு தக்க பிராயம் அடைந்திருந்த சமயம் அரண்மனை வட பாகத்தில் டபின்ஷ்வேட்டீ வாசம் செய்து வந்தான். டபின்ஷ்வேட்டீயக்கு உடன் பிறந்த சகோதரி உண்டு. அந்த இளவரசியின் பெயர் தக்கின்ஜீ. அந்நங்கை அந்தப் புறத்திலிருந்து சகோதரருக்காக அடிக்கடி தாம்பூலம் தயாரித்து அதை யெடுத்து தேகுவதும் வருவதுமாக இருந்தாள். இச் சந்தர்ப்பங்களில ஷின் யேட்டு, வெற்றிலை போட்டுக் கொள்வதற்காக டபின்ஷ்வேட்டீயின் வாசஸ்தலத்திற்குப் போய் வருவது வழக்கம். கொஞ்ச காலத்திற்குப் பின் தக்கின்ஜீய்க்கும் ஷின்யேட்டுக்கும் அந்தரங்க நட்பு ஏற்பட்டது. அது நாளடைவில் காதலாக மாறி கனிந்து நின்றது.

ஒரு தினத்தில் காதலர்கள் சந்தித்தனர். அது

சமயம் தக்கின்ஜி, நகை முகத்துடன் காதலனை விளித்து "யேட்டு! உங்களிடத்தில் அடியாளுடைய விசுவாசம் அதிக மிருக்கிறது உணவும் அடியாள் உணவு. உடையும் அடியாள் உடை. உயிர் பெற்று ஜீவிப்பதும் அடியாள் ஆதரவைக் கொண்டுதான்" எனச் செப்பினள். இம்மாதிரி இருவர் சந்தித்து உறவாடியதால் ஷின்யேட்டு தாராளமாய் பேச ஆரம்பித்ததோடல்லாமல், துறவிகளென்போர் சொந்தத்தில் ஆச்சிரமங்களைக் கட்டுகிறார்களில்லை யென்றும், உணவுகள் தயாரிப்பது கிடையா தென்றும் அங்ஙன மிருந்தும் அத் திருக்கூட்டத்தார் மற்றவர்களை விட வாழ்க்கையில் மேம்பா டடைந்திருக்க வில்லையா வென்றும் சாமர்த்தியமாக விடை பகர்ந்தார். ஷின்யேட்டுவின் வார்த்தைகளைக் கேட்ட இளவரசி, அவ்வவிதமாயின் நீங்கள் ஒரு துறவியா? என்று கேளிக்கையாக வினவினள். அதற்கு ஷின்யேட்டு அளித்த பதிலில் தாம் துறவி அல்ல வென்றும், ஆயினும் மகத்துவம் வாய்ந்த பெரியோர்களுக்கு ஆகாரம், ஆடை முதலியவைகள் தானாகவே வருவது இயல்பென்றும், மேலும் பெண்ணுலகு மகத்துவமுடைய தென்று சொல்லப்பட்டாலும் பெண்ணினங்கள் புருஷார்த்தம் பொருந்திய மன்னர்களின் வேலைக்காரிகள் தா மென்றும் தமாஷாகக் குறிப்பிட்டார். தக்கின்ஜி அதற்கு மறுமொழி பகர்ந்ததில் அரச ரென்போர் மேலான நோக்க முடையவர்கள்தா மென்பதை தான் ஒப்புக்கொள்வதாகப் பிரஸ்தாபித்தாள். தக்கின்ஜி தம் மீது எல்லை கடந்த காதல் கொண்டிருப்பதை அறிந்து இளவரசன் மிகச் சந்தோஷப் பட்டான். தம்மிடத்திலிருந்த மன்னருடையவும் டபின்ஷ்வேட்டீயினுடையவும் ஜாதகங்களோடு, தன்னுடைய ஜாதகத்தையும் கொடுத்து உண்மையைத் தெரிந்து கொள்ளும்படி இளவரசியிடம் சொன்னான்.

இளவரசி ஜாதகங்களைப் பெற்றுக் கொண்டு

அவற்றை ஒரு பௌத்த குருவிடம் சமர்ப்பித்தாள். அவற்றையெல்லாம் படித்துப் பார்த்த துறவி கூறியதாவது:—"மன்னரின் ஜாதகம் அதிசயிக்கத் தக்கது; இரண்டாவது ஜாதகத்திற்குப் பாத்திரமுடையவர் கீர்த்திப் பிரதாபம் உள்ளவராக இருக்கிறார். ஆயினும், அவர் ஆயுதத்தால் தாக்கப்படலாம். மூன்றாவது ஜாதகன் சர்வ ஜனங்களுக்குப் பெரியோனாகவும், ராஜாதி ராஜனாகவும் விளங்குவான். அவனுடைய சந்ததியார் வாழையடி வாழையாக செங்கோலோச்சும் இராஜாக்களாகவே திகழ்வா"

சில மாதங்களுக்குப் பின் தக்கின்ஜி கர்ப்பம் தாங்கியிருந்தாள். இச் சமாசாரம் அவளுடைய தாயாருக்கு பிற்காலத்தில்தான் தெரிய வந்தது. அதன் மேல் தாயானவள் தக்கின்ஜியை நோக்கி விவரம் யாதெனக் கேட்டாள். அதற்கு தக்கின்ஜி பதிலளிக்கையில், தான் ஷின்யேட்டுவுடன் நேசம் பாராட்டி வந்ததாகக் குறிப்பிட்டாள். இவ் விவரங்களைக் கேட்டறிந்த தக்கின்ஜி தாயார், புத்திரியைப் பார்த்து சொல்லுகையில், அவள் கர்ப்பமாக இருப்பதைப் பற்றி பிறருக்குத் தெரியப் படுத்தக் கூடாதென்றும், தானும் தன் கணவனும் உபவாசமிருந்து சமய குருக்களிடம் மத மார்க்கத்தைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் போது, அவள் வர வேண்டுமென்றும் விவரமாக குறிப்பிட்டாள். அன்னை சொற்படி தக்கின்ஜி பெற்றோர்கள் உபவாசம் அநுஷ்டித்த தினத்தில் அவர்கள் முன்னிலையில் போய் உட்கார்ந்தாள். அது சமயம் புத்திரியின் உடல் தோற்ற மாற்றத்தைக் கண்டு கர்ப்பவதியாய் இருப்பதற்குக் காரணமென்னவென்று இராணியிடம் மன்னர் உசாவினார். ஷின்யேட்டுவுடன் தக்கின்ஜி தேக சம்பந்தம் வைத்துக் கொண்டதாக இராணி மன்னருக்குத் தெரிவித்தாள். இதைக் கேட்ட அரசனுக்கு தாங்க முடியாக் கோபம் ஏற்பட்டது. உடனே ஷின்யேட்டுவை வெட்டி

கொன்று விடுமாறு உத்தரவு பிறப்பித்தார். இவருடைய கட்டளையை சேவகர்கள் நிறைவேற்றி வைப்பதற்கு முன் அங்கு குழுமியிருந்த சமய குருக்கள் அரசனைப் பார்த்து, "வேந்தராகிய நீவிர் எங்கள் முன்னிலையில் அஷ்டசீல தர்மத்தை சிறிது நேரத்திற்கு முன்பாகத்தான் பெற்றீர். அவ்வாறிருக்க, நீவிர் இக்குற்றத்தில் பொறுமை காட்ட முடியவில்லையே! ஆதலால், நீவிர் இறைவன் பிரார்த்தனையை பூர்த்தி செய்து கொள்வதற்கு தகுதி பெற்றிருக்க வில்லை யென்று இன்னோன்ன பிற வார்த்தைகளையும் கூறினார்கள். சமய குருக்களின் சமயோசித போதனையால் மன்னர் தன் கோபத்தை யொழித்து அமைதி யடைந்தார்.

அரசனுக்கும் அரசனது புத்திரி தக்கின்ஜிய்க்கும் மனக் கசப்பு ஏற்பட்டிருப்பதை ஷின்யேட்டு அறியான். அவன் புதிய உடைகளை உடுத்திக் கொண்டு, பூங் கொத்துகளை முன்னும் பின்னும் சரம் சரமாக தொங்க விட்டுக்கொண்டு சேவல்களின் போர் நடக்கும் அரச மரத்தடிக்குச் சென்று அங்கே நடைபெற்றுக் கொண்டிருந்த சேவல் சண்டையைப் பார்த்துக்கொண்டிருந்தான். அந்த சமயத்தில் மன்னனுடைய வேவுக் காரர்கள், அரண்மனையில் நடந்த வரலாற்றை அவனிடம் சொன்னார்கள். அவற்றைக் கேட்ட ஷின்யேட்டு கீழ் வருமாறு கூறினான்:—

"மனிதக் கூட்டத்திற்கு விதி ஒன்றே முக்கியமானது. வேவுககாரர்களே! நீங்கள் என் பொருட்டு கவலைப்பட வேண்டாம். நான் நாட்டை விட்டு காடேறி தலை மறைவாக வாசம் செய்து வந்த போதிலும், அதனால் எனக்கு விடுதலை யில்லை. என் ஜாதகத்தை அரசன் முன்னிலையில் சமர்ப்பிக்கிறேன்; அவர் என்னைக் கொன்றாலும் சரியே; உயிரைக் காத்தாலும் சரியே எல்லாவற்றிற்கும் அடிப்படையாக விருப்பது என் தலை விதியே யாகும்."

இவ்வாறு வீரத்தோடு பேசிய இளைஞர், செயலில் நடந்து காட்ட உடனே காதலியின் பிதாவை அணுகி அவரிடம் தன்னுடைய ஜாதகத்தைக் கொடுத்தார்.

ஜாதகத்தைத் திறந்து பார்த்த அரசர் பல விதமாக சிந்திக்கலானார். இளைஞனைக் கொன்றுவிட்டால், தனை மாட்டு சம்சார பந்த மென்னும் சுமை வலுக்கக் கூடு மெனவும் பல விதத்திலும் ஜாதகன் திறமை சாலியாய் இருப்பதால் தான் அவனை மன்னித்து உயிர்ப் பிச்சை அளிப்பதுதான் தர்மமாகு மெனவும் தமக்குள் தீர்மானித்துக் கொண்டார். அதன் பின்னர் ஷின்யேட்டு வின் குற்றத்தை மன்னித்து விடுதலை செய்திருப்பதாக விளம்பினார்.

டபின்ஷுவேட்டீ சிம்மாசனத்தில் அமர்ந்த போது ஷின்யேட்டுவுக்குப் பல குக்கிராமங்களையும் ஊர்களையும் கொடுத்து "ச்சோடின் நோரட்டா" என்ற பட்டத்தையும் வழங்கி கௌரவித்தார்.

## பெகுவின் சிறப்பு.

அக் காலத்தில் பெகுவிற்கு வந்து போன வெனிஸ் நகரத்து வர்த்தகர்கள் அதனைக் குறித்து வெகுவாகப் புகழ்ந்துள்ளார்கள்.

டபின்ஷுவேட்டீ காலமான பின்னர், நீண்ட அகழிகளும், அவற்றில் நிறைய முதலைகளும், உயர்ந்த மதில்களும், காவற் கூடங்களும் ஒருங்கே அமையப் பெற்ற சிறப்பான பெகு அரண்மனைக்கு, யானைகளும் பல்லக்குகளும் நிறைந்த ஊர்வலத்துடன், கெட்டி தங் கத்தாலும் ரத்நங்களாலும் செய்யப் பெற்ற விக்கிரகங் களும் கண் பார்வைக்கு எட்டாத அநதனை தூரம் வரையில் அணி வகுத்து ஆயுதம் தாங்கி நின்ற வீரர்க ளும் மஞ்சள் உடை தரித்த பௌத்த சந்யாஸிகளும் புடைசூழ, பய்யினவ்ன் ச்சோடின் நோரட்டா அழைத்



பர்மிய மன்னர் ஆளுகையில்
"மகா போக-ஸ்ரீ தன-ராஜா" பட்டம் பெற்ற
சுங்கத் தீர்வை மந்திரி Duke of Kyaukye
இஸ்மாயில் கான் பகதூர் லாவின் புத்திரி

**கின்லேஜீ.**

னுச் செல்லப் பெற்றார். பின்னர் பிரபுக்கள் சீமாட்டிகள் முன்னிலையில *"ஸின்பியூமியாஷின்" "ஐராவதப் பாகன்" என்னும் திருப் பெயர் தாங்கி சிம்மாசனத்தில் அமர்ந்தார்.

பய்யினவ்ன், இலங்கை மன்னரின் புத்திரியை மணக்க வேண்டிய அதிருஷ்டம வாய்க்கப் பெற்றவராயிருப்பதாக அன்னவருடைய ஜோஸியர்கள் மூலம் அறிந்தார். அவ் விளவரசியைப் பார்த்து அழைத்து வரும் பொருட்டும் அதோடு அன்னவரின் பிதாவிடத்தில் ஸ்ரீ புத்தரின் திருப் பல்லை வாங்கி வரும் பொருட்டும பய்யினவ்ன் தம்முடைய தூதர்களைக் காலம் தாழ்த்தாது அனுப்பி வைத்தார். இராஜ தூதர்கள் கொளும்பு போய்ச் சேர்ந்ததும் தங்களுடைய மன்னரின் விருப்பத்தைக் குறித்தும் பெருமையைப் பற்றியும் சொன்னார்கள். இலங்கை மன்னருக்கு பெண் மகவு கிடையாது. ஆயினும், அம் மன்னர், தமது நகர பொக்கிஷாதிபரின் அருந் செல்வியைப் புதல்வியாகப் பாவித்து போஷித்து வந்தார். கண்டியில் உள்ள புத்தரின் திருப் பல் ஆலயம் சம்பந்தமாய் தமக்கு எவ்வித அதிகாரமும் கிடையாதென்றும் அத் திருக்கோயில் இருக்கும் பாகத்தை மற்றொரு அரசர் ஆட்சி புரிகிறாரென்றும் இலங்கை மன்னர் ராஜ தூதர்களிடம் கூறி, திருப் பல் உள்ள மற்றோர் பூஜைப்

---

* 'ஐராவதப் பாகன்' என்று தேவேந்திரனுக்கு ஓர் பெயருண்டு. அவன் வெள்ளை யானைமீது ஆரோகணிப்பவனாதலால் அப் பெயர் அவனுக்கு இடப் பெற்றது. பய்யினவ்ன் ச்சோடின் நோரட்டாவும் சில வெள்ளை யானைகளுக்கு அதிபதியாக விருந்தார். அதையொட்டி அன்னவர்க்கும் அப் பட்டம் வழங்கப் பெற்றது போலும்.

பெட்டியைக் காண்பித்தார். அதன் பின்னர், பய்யி னவ்னின் தூதர்கள் இலங்கை மன்னரின் புத்திரியை மட்டும் அழைத்துக்கொண்டு பர்மா திரும்பினார்கள். தூதர்கள்வந்து சேர்ந்ததும பய்யினவ்ன் சகோடின் நோரட்டா இலங்கை மன்னருக்கு சிறப்பான வெகும திகளைக் கொடுத்தனுப்பினார். 1576—ல் திருப் பல் பாசீன் துறைமுகம் வந்துசேர்ந்தது. இராஜாங்க உடை கள் தரித்த பிரபுக்களும் சீமாட்டிகளும் புடை சூழ பய்யினவ்ன் நூற்றுக் கணக்கான ஓடங்களைக்கொண்ட பிரமாண்டமான ஊர்வலத்துடன் எதிர் சென்று வர வேற்றார். வைதிக முறையில் பய்யினவ்ன் ஸ்நானம் செய்து, வாசனைத் திரவியங்கள் அணிந்து, பூஜைப் பெட்டிக்கு முன்னிலையில் சிரம் வணங்கி நின்றார். தங்கப் பேழை யொன்றினுள் திருப பல் அடக்கம் செய்விக்கப் பெற்று பெகுவில் உள்ள மஹாச ஸேடி பொற்கோயிலில் வைக்கப் பெற்றது. அச் சமயத்தில் "இலங்கையிலிருந்து அநோரட்டா மன்னர் பொய்ப் பல்லைத்தான் பெற்றார், அலவன்ஸித்து சினு செய்யும் பயனற்றே திரும்பினார், ஆனால், நான் தெய்வ பகதி யாலும் கல்வி அறிவினாலும இப் பூஜைப் பெட்டியைப பெற்றேன்" என அக மகிழ்ந்து பய்யினவ்ன் கூறினார்.

லின்பியூமியாஷின் மன்னர் பர்மாவையும் அதை சூழ்ந்திருக்கும ஷான பிரதேசம், யூனை, கத்தே, சயாம ஆகிய நாடுகளையும அரசாண்டு வந்தார். தேசத்திற்காகவும் மதத்திற்காகவும் மிகவும் உழைத தார். அவருடைய ஆளுகையில் பகான, பூவாதா, ஸலே, பக்கான் ஙே, ஙதயௌவ், டேயுவின்டைன், சௌபடவ்ன் ஆகிய ஊர்வாசிகள், போப்பா மலை யின் முனியை ஆண்டு தோறும் பூசனை செய்து வந தார்கள். திருவிழாக காலங்களில எருது, மாடு, கோழி பன்றி முதலியவைகளைப் பலி கொடுதது,

அவற்றின் தலைகளைக் கயிற்றில் கட்டுவித்து, அதை வீட்டு முன் புறத்திலுள்ள முனி பீடக் கம்பத்தில் தொங்க விடுவார்கள். மானிட தர்மத்திற்கு முற்றும் புறம்பான அம் மூடக் கொள்கையை ஸின்பியூமியாஷின் அழுத்தமாய் கண்டித்தும் பலி கொடுக்கும் வழக்கத்தை அறவே ஒழித்தும் வைத்தார்.

ஒவ்ன்பௌன் மோமெய் முதலிய ஷான் பிரதேசங்களில் மகா ராஜா (ஸோபுவா)க்கள் இறந்தால் அவர்கள் சவாரி செய்த குதிரை, யானை முதலியவற்றையும் கொன்று, அவற்றைப் பிரேதக் குழிகளில் போட்டு, பிரேதங்களை அடக்கம் செய்வது வழக்கம். இக் கொடிய வழக்கத்தையும் ஸின்பியூமியாஷின் மன்னர் தடை செய்து பிரஜைகளிடை அறிவு என்னும் பிரகாசத்தை உண்டு பண்ணி, டிபிட்டகா பௌத்த சமய நூல்களைப் பரப்பி, பிக்ஷுக்களைக் கொண்டு மத ஹிதோபதேசம் செய்வித்து வந்தார். இவற்றின் பயனாய் ஜனங்களிடை அமிழ்ந்து கிடந்த அந்தகார மென்னும் பேய்த் தன்மையான ஆபாசப் பழைய வழக்கங்கள் மறையலாயின.

பௌத்த சமயத்தில் பூசனைக்குரிய இறைவனிடத்தும் வேதத்திடத்தும் ஞானிகளிடத்தும் அரசர் முழு நம்பிக்கை கொண்டிருந்தார். தர்மம் செய்வதில் அளவு கடந்த ஆர்வம் கொண்டிருந்தார். கல்விமான்களிடத்தில் அதிக பக்ஷம் காட்டி வந்தார். பிறர் செய்த நன்றியை அவர் மறந்ததில்லை. அதனால் அன்னாருடைய அரசாங்கத்தில் மந்திரி பிரதானிகள் வீரர்கள் முதலானோர் மிகுதியாகவே இருந்துள்ளார்கள். பர்மிய வேந்தர்களில் சக்திபவந்தராகவும், இராஜ தந்திரத்தில் இணையற்றவராகவும் ஸின்பியூமியாஷின் சிறந்து விளங்கினார்.

பர்மா எங்கணும் முழம், சேக்கல், கூடை முதலிய

ஒரே விதமான அளவுகளையும், நிறுவைகளையும், நாணயங்களையும் அமுலிற்குக் கொண்டு வந்த தனிப் பெருமை இன்னவர்க்கே அன்றி பிறிதெவர்க்கும் அன்று.

குடியேறியிருந்த மகமதியர்கள் தங்கள் பெருநாளாகிய பக்ரீத் பண்டிகையைக் கொண்டாடும் போதும், அவர்கள் உயிர் வதை செய்தல கூடாதென்று தடை செய்துள்ளார். ஜீவ பிராணிகளிடத்து ஸின்பியூமியாஷின் மன்னர் எங்ஙனம் அன்பு கொண்டிருந்தா ரென்பதற்கு அவர் செய்த அத்தடை யொன்றே போதிய சான்றாகவிருக்கிறது.

## எக்பாவிடம் தூது

மணிப்பூர் எக்பா மன்னரிடம், ச்சோடின் நோரட்டாவின் தூதர்களாக சுவாந்தராஸி, குவேலின்ஸா முதலினோர் சென்றிருந்தார்கள். எக்பா ராஜ்யத்தில் ஸின்பியூமியாஷின் தூதர்கள் நன்கு வரவேற்கப்பட்டு உபசரிக்கப் பெற்றார்கள். மற்றோர் தினத்தில் எக்பா மன்னர் அத் தூதர்களைப் பார்த்து, "ஸின்பியூமியாஷின் மன்னரின் பொன்னரண்மனையை போன்று மாட மாளிகைகள் நிறைந்த எமது அரண்மனைக் கட்டிடம் அமைக்கப் பெற்றுளதா" வென்று வினவினார்.

[எக்பா மன்னரின் அரண்மனைக் கட்டிடம் பொன் மயமாக உள்ள நண்டுகளின் ஓடுகளைக் கொண்டு அலங்கரிக்கப் பெற்றிருந்தது. பார்வைக்கு அது ரத்தினங்களைப் போன்று ஜாவலிக்கும. அவ் வேந்தன் மாண்புறு வரலாற்றை இவண் வாசகர்கள் அறிந்திருப்பது மிக இன்றியமையாததது. கத்தெ மணிப்பூர், மலைப் பிரதேசம், அசாம் முதலிய நாடுகளை ஆண்டு வந்தார். அவருடைய பிரஜைகளாகிய கத்தே வகுப்பார் குதிரை ஏற்றத்திலும, உடம்பு பிடிப்பதிலும், நெசவுத் தொழிலிலும் மிகச் சாமர்த்தியம்

வாய்ந்தவர்களாக விருந்தார்கள். அக் காலத்தில் கத்தே குதிரைப் படைகளிடம் பர்மிய மன்னர்கள் தனி மதிப்புக் கொண்டிருந்தார்கள்.]

அதற்கு அவ் விருவர்கள் அளித்த பதிலாவது.— ' எங்களுடைய மன்னரின் அரண்மனைக் கட்டடமானது இவ் வரண்மனையைப் போன்றதல்ல; அது ஐந்தடுக்கு, எழடுக்கு, ஒன்பதடுக்குகளை முறையே தாங்கிய பல பொற் கோபுரங்களைக் கொண்டதாய் திகழ்கிறது. அடி முதல் முடி வரை நவ ரத்னங்கள் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன. கோபுரமும் கதிரவன் ஒளி போன்று பிரகாசிக்கும். அதனைக கட்டி முடிப்பதற்கு பொக்கிஷ சாலையிலிருந்து அளவற்ற திரவியமும், தங்கக் கட்டிகளும் செலவாக்கப் பெற்றன. புயல் காற்று அடிப்பதாலும், மழை வருஷிப்பதாலும், கோபுரங்களின் மீது ஒட்டப்பெற்றுள்ள தங்க ரேக்குகள் சேதமாவது வழக்கம்; அவ்வாறு சேதமாகும் அவற்றிற்குப் பதிலாக புதிய தங்க ரேக்குகளை, கப்பம் கட்டும் சிற்றரசர்கள் ஆண்டுக்கொரு தடவை கொண்டு வந்து சேர்ப்பிப்பார்கள்."

இங்ஙனம், மன்னரின் செல்வாக்கைக் கேட்ட எக்பா மன்னர், அவ்விதமாயின் உங்கள் அரசர் திரவிய சம்பத்தில் என்னினும் மேம்பட்டவரே எனச் செப்பிக் கொண்டார். மீண்டும் அவ்வரசர், தூதர்களை நோக்கி, ' உங்கள் அரசர் புகழிலும் தெய்வீகத் தன்மையிலும மிகச் சிறநதவரென்றும் சொல்லப் படுகிறதே! அவை உண்மையா? அங்ஙனமாயின், அன்னவருடைய புகழைக் குறித்துச் சொல்லுங்கள்" என்று கேட்டார். தூதர்கள், எக்பா அரசரைப் பார்த்து, மன்னரே! எங்களுடைய முடி மன்னர், அரண்மனைப் பரிவாரங்களுடன வெளிப் பிரதேசங்களுக்குச் செல்லுங்கால், நீர்வாழ் ஜந்துக்களாகிய

முதலைகள், மீன்கள், ஆமைகள், நண்டு நத்தை முதலான வைகளும, வாத்தியங்களின் ஒலியைக் கேட்ட மாத்திரத்திலேயே, அவைகள் தத்தம் தலைகளை நீர் மட்டத்திற்கு மேல் நீட்டியாட்டி வரவேற்பு செய்கின்றன வென்றால், மன்னரின் பெருமையைக் குறித்து நாங்கள் ஈண்டு கூறவும் வேண்டுமோ?" என மொழிந்தனர். அத்துணை தெய்வீகத் தன்மையை உங்கள் முடி மன்னர் பெற்றிருப்பது மிக ஆச்சரியமேயாகும் என மணிப்பூர் அரசர் புன்முறுவலுடன் தூதர்களிடம் புகன்றார்.


இச் சம்பாஷணைகளுக்குப் பின்னர், எக்பா மன்னர் தூதர்களுக்கு ஓர் குதூகல விருந்தளித்தார். அறுசுவை உண்டியும், பானங்களும் தங்கத் தாம்பாளங்களில் வைத்துப் பரிமாறப் பட்டன. இச் சிறந்த விருந்துபசாரத்திலிருந்தே அவ்வரசர், ஸின்பியூஷின் மன்னரிடம் எத்தகைய நேயப் பான்மை கொண்டிருந்தார் என்பதை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம். எஞ்சி நிற்காதபடி தூதர்கள் எல்லா வித உண்டிகளையும் புசித்தனர் விருந்தினர்களில் சிலர், இவர்கள் என்ன பூதங்களா வென்றும் ஒருவருக் கொருவர் பேசிக் கொண்டனர். எக்பாவும் திகைப்புற்றவராய், தூதர்களைப் பார்த்து, நீங்கள் யாது காரணத்தால் இவ்விதம் உண்கிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு அத் தூதர்கள் "உங்களுடைய அரண்மனைப் பரிசாரகர்கள் திறமையைத் தெரிந்து கொள்ளும் பொருட்டே, நாங்கள் அவ்விதம் பாக்கி வைக்காமல் சகல வித உணவுகளையும் புசிக்கின்றோம்" மென்றனர். எக்பாவுக்கு அளவு கடந்த சந்தோஷம் உண்டாயிற்று. தம்முடைய இராஜ்யத்தில் இப் பரிசாரகர்களை விட வேறு சமர்த்தர்கள் கிடையா தென்றும் தூதர்களிடம் கூறினார். தூதர்கள் கொல்லென்று சிரித்தார்கள்; எக்பா மன்னர் அன்னவர்கள் பக்கம் திரும்பி

ஞர். அப்போது தூதர்களில் ஒருவர், "எங்கள் நாட்டில் மிக மிக சாமர்த்தியமுள்ள பரிசாரகர்கள் இல்லாமலில்லை; அவர்கள் இறைச்சியை வாட்டுவதிலும், அவிப்பதிலும், பொறிப்பதிலும் கை தேர்ந்தவர்கள். ஓருயிர்ப் பிராணியின் மாமிசத் துண்டுகளைப் பல் வேறு விதத்தில் கறி சமைக்கும் திறமை பெற்றவர்கள்" எனப் பெருமையாய்க் கூறினார். விருந்துபசார மெல்லாம் ரஸமான சம்பாஷணையில் முடிந்தது. சில நாட்கள் சென்றபின் எகபா அரசர் அப் பரிசாரகர்களின் சாமர்த்தியத்தை நேரில் அறிந்து வரும் பொருட்டு, தமுடைய பிரதிநிதியாக ஒருவரைத் தெரிந்தெடுத்து அந்த தூது கோஷ்டியினர்களுடன் அனுப்பி வைத்தார். பெருவை அடைந்த இரு தூதர்களும் எகபா மன்னரின் பெருமையையும் தயாள குணத்தையும் சிலாகித்து ஸின்ப்யூமியாஷின் மன்னரிடம் கூறினார்கள். விருந்தில நடந்த சம்பாஷணைகள் யாவும் மன்னனுக்குச் சொல்லப்பட்டது. சில தினங்களுக்குப் பின்னர், பரிசாரகர்களின் திறமையை எகபாவின் பிரதிநிதி தெரிந்து கொள்ளும் பொருட்டு தல்லாய்ங் உத்தியோகஸ்தர் பிஞாடலா உணவு தயாரிப்பதில் பங்கெடுத்துக் கொண்டார். வாட்டல், பொறித்தல், அவித்தல் முதலிய முறைகளைக் கொண்டு மாமிச பதார்த்தங்கள் தயாரிக்கப் பெற்றன. பிரத்தியேகமாகக் கோழி யொன்றும், சேவ லொன்றும் கொல்லப்பட்டு, அவை ஜலத்திலே நன்றாய்க் கழுவப் பெற்றன. பிறகு சிறகுகள் யாவும் பிடுங்கப்பட்டு, உட்பாகங்கள் சுத்தம் செய்யப் பெற்றன. அதன் மேல் மிளகாய், வெங்காயம், இஞ்சி, வாசனைப் பட்டை முதலான காரச் சரக்குகள் உள்ளே செலுத்தப் பட்டன. பிஞாடலாவைத் தலைமையாகக் கொண்ட பரிசாரகர்கள், அவ் வேலைகளை முடித்துக் கொண்டு,

அவற்றின் விலாப் பக்கங்களை அறுத்து, அவற்றி னுள்ளே இரண்டு முட்டைகள் வீதம் செலுத்தி, மேல் பாகத்தில் நெய், முட்டை, பால் முதலியவற்றை தடவினர். கோழியும் சேவலும் நன்றாய் வெந்த தன் மேல் முட்டைகள் அப்புறப் படுத்தப் பட்டன. அவற்றிற்குப் பதிலாய் உயிரோடிருந்த சிட்டுக் குருவி களை உள்ளே வைத்து விலாப் புறங்களைத் தைத்து விட்டனர். மூட்டு வாய்க்குமேல் பால், நெய் முத லானவை தடவப் பெற்று, பொற் தாம்பாளங்களில் அவை கொண்டு வைக்கப்பெற்றன.

விருந்துக் களியாட்டம் விமரிசையாகவே ஆரம் பிக்கப் பெற்றது. பல் வேறு வகையில் கறி பதார்த்தங் கள் பாகம் செய்யப் பெற்றிருப்பதைக் கண்ணுற்ற எக்பாவின் பிரதிநிதி மிக ஆச்சர்யப் பட்டார். மே லும் கோழிக் கறியைச் சாப்பிடுவதற்காக அவர் கத்தி யால அதனின் விலாப் புறத்தைக் கீறினார். கீறியது தான் தாமதம்! அதனுள் விருந்த சிட்டுக் குருவி சிடுக்கெனப் பறந்து போவதைக் கண்டு, அவர் அங்கு மிங்கும் பார்த்து பரக்க விழித்தார்; மார்பைத் தட்டி னர். தான் உலகில இம மாதிரி அதிசயம் பார்த்த தில்லையென்றார். கறி வகைகள் எம் முறையில் தயா ரிக்கப் பெற்றன வென்றும் வினவினார்.

வைபவம் முடிவுற்ற பின்னர், ஓர் தினத்தில் ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட சமயம் பார்த்து ஸிங்பியூஷின் மன்னர், அமைச்சர்கள் புடை சூழ பரிவாரங்களுடன் ஆடல் பாடல் விமரிசைகளி னிடையே அரசாங்கப் படகில் சென்றார். மேள தாளங்களின் ஒலியைக் கேட்ட மாத்திரத்தில், நீர் வாழ் ஜந்துக்களனைத்தும் ஜல மட்டத்திற்கு மேலெ ழுந்து தாவிக் குதிப்பதன் வாயிலாக அரசரை வர வேற்புச் செய்தன. இப் பேராச்சர்யமான சம்பவத்



பர்மிய மாதாக குழு.

தைக் கண்ணுற்ற எக்பாவின் தூதர், ஸின்பியூஷின் மன்னரை, ஓர் தேவ தூதராகவே மதித்தார். பவனி முடிந்த மறுநாள் காலையில் ஸின்பியூமியாஷின் மன்னரிடம் வெகுமதிகள் பலவற்றைச் சமர்ப்பித்து விட்டு எக்பாவின் பிரதிநிதி விடை பெற்று ராஜ்யத்திற்கு பயணமானார்.

ஸின்பியூமியாஷின் தர்பாரில் நடந்த உபசரிப்புகளையும், சம்பவங்களையும் குறித்து பிரதிநிதி மணிப்பூர் அரசரிடம் அடுக்கடுக்காகக் கூறினார், அவற்றையெல்லாம் ஆர்வத்தோடு கேட்டு வந்த எக்பாவுக்கு உடனே ஸின்பியூமியாஷின் மன்னரைப் பார்த்து வர வேண்டுமென்ற பேரவா அதிகரித்தது. அங்கு செல்வதெனத் தீர்மானித்து மரக்கலமேறப் புறப்பட்டார். வழியில் அம் மன்னர் காலவியோகமானாரென்ற துக்கச் செய்தி எக்பாவுக் கெட்டியது. அதனால் சோர்வு கொண்டார்; துக்கப்பட்டார். என்ன செய்வதென்று திகைத்தார். துக்க முகத்துடன் பிரயாணத்தை நிறுத்திக் கொண்டு, தமது இராஜதானியை நோக்கி எக்பா அவர்கள் திரும்பினார்கள்.

காலம் சென்ற ஸின்பியூமியாஷின் 97 குழந்தைகளுக்குப் பிதாவாக இருந்து, அறுபத்தாறுவது வயதில் உயிர் நீத்தார்.

# அதிகாரம் 12.

## சேனாதிபதி

## மகா பாண்டுலா

மகா பாண்டுலாவின் வீரம் செறிந்த பூத உடம்பு மறைந்து ஏறக்குறைய நூறு வருடங்களுக்கு மேலாகும். அவ்வீர திலகம் இறந்தும், இருப்பவராகவே பாவிக்கப்படுகிறார். பர்மிய இல்லங்களில் ஆண் பெண்பாலர்களில் இளைஞர் முதல் வயோதிகர்கள் வரை அவ்வீர புருஷரின் பெயரை உச்சரிப்பதில் தனிப் பெருமை கொள்கிறார்கள். அன்றும், இன்றும், என்றும் மகா பாண்டுலா போன்ற சேனாதிபதிகள் பாராட்டப் பெற்று வருவார்களென்பதற்குச் சான்றுகள் பல பகரலாம்.

நிகழப் போகும் சம்பவங்களை முற்கூட்டி மதி நுட்பத்தா லறிதல், வீரம் செறிந்து திகழ்தல், உயர்ந்த கொள்கையைக் கொண்டிருத்தல் போன்ற உத்தம—உயரிய சீலங்களில் மகா பாண்டுலா இணையற்றவராக இருந்தார். அத்தகைய போர்க் குணம் வாய்ந்த ஒருவரின் சரிதையைச் சுருக்கமாக இங்கு கூறுவாம்.

### ஜனனம்.

அப்பர் பர்மாவைச் சேர்ந்த லோயர் சிண்டுவின் உள்ள டபயின் என்ற சிற்றூரில், உழுது பயிரிடும் தொழிலைச் செய்து வந்த எளியவரும் தூய்மை யுடையவருமான ஊ பௌட்டோ, மேமினெய்ன் ஆகிய தம்பதிகளுக்கு ஆண் குழந்தைகளிரண்டும், பெண் குழந்தை யொன்றும் பிறந்தன. அச் சிசுக்களில் தலைப் பிள்ளைதான் பிற்காலத்தில் படை வீரனாகத் தோன்றி, சேனாதிபதியாக மாறி, "மகா

பாண்டுலா" என்று உயரிய பட்டத்தைத் தாங்கி, உன்னற்கரிய போர் திறனாற்றி, வீர திலகமாகப் பொலிந்தவர் 1783 ஆம் ஆண்டில் மகா பாண்டுலா பிறந்தார். குழந்தைப் பெயர் "மௌன்யி" என்பதாகும். பால் சுவைக்கும் பருவத்திலேயே மௌன்யி, பிதாவை இழந்தார். தக்க வயதடைந்ததும் விதவையான தாயையும் சகோதர சகோதரியையும் போஷிக்க வேண்டிய கடமை மௌன்யிக்கு ஏற்பட்டது. அதற்கேற்ப, அவர் தொழிலில் ஈடுபட்டார். தாயினிடத்து மிக மரியாதை காட்டி வந்தார். குத்துச் சண்டை போடுவதிலும் பலாத்காரச் செயல்களைப் புரிவதிலும் மிக்க ஆர்வமுடையார். சில காலத்திற்குப் பின்னர், சகாயிங் இளவரசர் மெய்க் காப்புப்படையில் அவர் ஓர் வீரனாகச் சேர்ந்து பணியாற்றி வந்தார். இதற்கிடையில் கத்தி வீச்சு, வாள் வீச்சுகளில் பயிற்சி பெற்று தேர்ச்சி யடைந்தமையாலும் செவ்வனே தன் கடனாற்றி வந்தமையாலும் அவரை, 'அரண்மனையைப் பாதுகாவல் செய்யும் பூத' மெனச் சொல்லி பிரஜைகள் சிலாகித்துப் பேசினார்கள். பிற்காலத்தில் பாஜீடோ மன்னர் என்றழைக்கப்பெற்ற சகாயிங் இளவரசர், 1820 ஆம் ஆண்டில் அரியாசனத்தி லமர்ந்து இராஜ்ய பாரத்தை யேற்றார். மெய்காப்பாளர் படையில் ஓர் வீரனாகச் சேர்ந்து சில வருடங்களாகியும் அவர் தக்கதோர் புகழை அடைந்தாரில்லை; எவருடைய புகழுரைகளுக்கும் இலக்கானாரில்லை. இதைக் குறித்து அவர் அடிக்கடி மனச்சோர்வு கொள்வதுண்டு. இங்ஙனமாக இருந்து வருகையில் அவருக்கு ஓர் யுக்தி தோன்றியது. சகாயிங் மன்னரின ஆளுகையில் தான் கௌரவிக்கப் பெறல் வேண்டுமென்ற எழுச்சியால் ஓர் தினத்தில், தர்பார் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமயத்தில் அவர் தம்முடைய சகாக்களில் ஒருவனை, எக் காரணமுமின்றி திடீரென் றெழுந்து கீழே பிடித்து அமிழ்த்தினார்,

இவருடைய துடுக்கான செயலைக் கண்ட உத்தியோகஸ்தர்கள் உடனே கைது செய்து, அவ்விதம் நடந்து கொண்டதற்குக் காரணம் யாதென வினவினர். அதற்கு அவர் அளித்த மறு மொழியில், ஒன்றும் செய்யாமல் விட்டு வைத்தால், தான் ஜீவித்திருக்கக் கூடு மென்றும், கொன்றுவிட்டால், தான் இறக்க வேண்டியதுதா னென்றும், மெய்க் காப்பாளர் படையில் சேர்க்கப்பட்டு சில ஆண்டுகளாகி விட்டனவென்றும், அவ்வாறிருந்தும்கூட தான் பிறிதோர் பதவிக்கு உயர்த்தப்பட வில்லை யென்றும், அக் காரணத்தால் தான் அரசர் முன்னிலையில் வீரனென்ற பெயரை அடைய விரும்பியே அங்ஙனம் நடந்து கொள்ள நேர்ந்த தென்றும் அச்ச மின்றி விளககினர். அவற்றைக் கேட்ட மன்னர், உத்சாகம் மிகக் கொண்டவராய், காலம் தாழ்த்தாது பியேடை தான்டோஸ்ஸின் என்னும் பிரிவி கௌன்ஸிலின் தூதர் பதவியை அளித்து அவரைக் கௌரவித்தார். அப்போது அவருக்கு முப்பத்தேழு வயதெனச் சொல்லப்படுகிறது. ஓரிரண்டாண்டுகளுக்குப் பின்னர், அவர் "அல்லொவ்ன் ஊன்" என்னும் கவர்னர் பதவிக்கு உயர்த்தப்பெற்றார்.

## மணிப்பூர் மஸ்ஜித்

மௌன்யி அப் பதவி யேற்ற சமயத்தில் மணிப்பூர் மன்னன் மஸ்ஜித் என்பான், பாஜீடோவை உதாசீனம் செய்தவனாய், அவருக்கு வழக்கமாய் அனுப்பி வந்த வெகுமதிகள் முதலானவற்றை நிறுத்தியதோடு, அவரைச் சிம்மாசனத்தினின்றும் இறக்கி விட சூழ்ச்சிகள் பல செய்து வந்தான். மஸ்ஜிதத்தின் உதாசீனத்தையும், சூழ்ச்சிகளையும் அறிந்த பாஜீடோ மன்னர் சேனை யொன்றைத் திரட்டி, கவர்னர் பதவி யேற்ற மௌன்யியை அதற்குத் தலைவராக நியமித்து மஸ்ஜித்தை தோற்கடிக்குமாறு திட்டம் செய்து அனுப்பி வைத்தார்.

அரசரின் ஆணைக் கேற்ப, மௌன்யி தமது கடமையை திறம்படச் செய்து, தமது கீர்த்திப் பிரதாபம் என்றுங் குன்று திலங்குமாறு ஜெய வீர திலகமாய் ராஜ்யத்திற்கு திரும்பினார். தலை நகரை அடைந் அவ் வீரருக்கு "மகா பாண்டுலா" என்னும் பட்டத்தை பாஜீடோ மன்னர் குதூகலத்துடன் வழங்கினார்.

சந்திர காந்த சிங்.

1822 ஆம் ஆண்டில் அஸாம் அதிபர் சந்திரகாந்த சிங் என்பார் ஆங்கிலேயர்களால் தூண்டப் பெற்றவராய், அதுகாறும் பாஜீடோ மன்னர்க்குச் செய்து வந்த வழக்கமான கௌரவோபசாரங்களை நிறுத்தி விட்டதோடு, அம் மன்னருக்கு விரோதமாய் கிளர்ச்சியும் செய்து வந்தார். அவற்றால் சினமடைந்த பர்மியர்கோன், மகா பாண்டுலாவின் தலைமையின் கீழ் படையை அனுப்பி, போரிடுமாறு ஆக்ஞாபித்தார். அப் போரின் பயனாக சந்திரகாந்த சிங் முடியிழக்க நேர்ந்தது. அத்துடன் அஸாமும் பர்மியர் வசமாகியது. தமது அதி வீர பராக்கிரமத்தால் மாற்றலரைப் புற முதுகிட் டோடுமாறு செய்த பாண்டுலா ஓராண்டு சென்ற பின்னரே, தாயகம் திரும்பி வரலானார். தமது சேனைத் தலைவரின் மதிக் கொண்ணு அதி வீரத்தின் உதவேகத்தைப் பெரிதும் உணர்ந்த பாஜீடோ மன்னர், அஞ்ஞான்று இராணுவத் தலைவர்களுக்கு அரிதாய் வழங்கப் பெற்று வந்த "மீன்ஜி மகா மீன்கவ்ன்", "மீன்ஜி மகா தெட்டோ ஷே", "மீன்ஜி மகா", "மகா சேனாதிபதி" போன்ற பெரும் பட்டங்களில் சிறந்ததான "அகா மகா சேனாபதி" என்னும் மற்றொரு சன்னத்தை அன்னவர்க்கே அளித்து உவகை அடைந்தார்.

## சிட்டகானியர்

ஒரு வருடத்திற்குப் பின்னர், அரக்கான் பிரதேசத்தைச் சேர்ந்த ஷின்மாபியூ தீவினுள் சிட்டகானியர்கள் பிரவேசித்து தங்கள் சொந்தக் கொடியை நாட்டினார்கள். அது சம்பந்தமாய் நடந்த வாக்குவாதத்தால் யுத்த களம் புக வேண்டிய அவசியம் மேற்பட்டது. பின்னர், இரு தரப்பாருக்கும் யுத்தம் மூண்டது. இதை உத்தேசித்து மகா பாண்டுலா தமது படைகளை அப் பகுதி நோக்கி நடத்திச் சென்றார். இம் முறையில் தமது சேனை வங்க தேசம் வரை முன்னேறிச் செல்ல வேண்டுமென்பது மகா பாண்டுலாவின் விருப்பம். அவர், சேனையை ஷின்மா பியூ தீவுக்கு நடத்திச் செல்ல முற்பட்ட போதே பாஜீடோ மன்னர் மகா பாண்டுலாவுக்கு "போ வற்மூ ஊன்ஜி தடோமீன்ஜி என்னும் மற்றுமோர் பெரும பட்டத்தை வழங்கி உற்சாகப் படுத்தினார்.

மகா பாண்டுலா ஷின்மா பியூ தீவு செல்லும் பாட்டையில் உள்ள கோமடோ பல்லீன் என்ற பகுதி வரை தமது படையை நடத்திச் சென்றார். அங்கு ஆங்கில இராணுவ வீரர்கள் விடுதிகளமைத்து தங்கியிருப்பதை அறிந்த அவர், தம்முடைய சேனைகளைக் கொண்டு அவர்களை யெதிர்த்து யுத்தம் செய்தார். யுத்தரங்கத்தில் பர்மியர் வசம் சிக்கிய ஆங்கில ராணுவ வீரர்கள் படுவதை செய்யப்பட்டனர். பர்மியரை யெதிர்த்து ஆங்கிலேயர்க்கு உதவி புரிய சிட்டகானிய வீரர்கள் யுத்த களம் நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். அப்போது ஆங்கிலேயர் பக்கம் தோல்வி ஏற்பட்டதைக் கேள்விப்பட்ட சிட்டகானியர்கள் உடனே திரும்பி விட்டார்கள்.

இவ்விதம் வெற்றியடைந்த மகா பாண்டுலா, அவ் விடத்திலேயே ஆடம்பர மிக்கதான கோட்டை

யொன்றைக் கட்டி முடித்தார். அவர் இன்னும் முன்னேறிச் சென்று யுத்தரங்கத்தில் வெற்றிப் பெற்று வாகை மாலை சூடுவதில் எவ்வளவு ஆர்வங் கொண்டிருக்க வேண்டுமென்பதை அவர் கோட்டை கட்டிய செயலொன்றே மெய்ப்பிக்கிறது.

## ஆங்கிலேயர் எதிர்ப்பு.

இஃதிங்ஙனமிருக்க, ஆங்கிலேயர்கள், மற்றோர் வழியாக இரங்கூனுக்குள் புகுந்து அதனை தங்கள் வசமாக்கிக் கொண்டனர். இரங்கூனிலிருந்து முன்னேறி ஆங்கிலேயர்கள் ஒருகால் வந்துவிடுவரோ வென்னும் ஐயத்தாலும் பீதியாலும் பாதிக்கப்பட்ட பாஜீடோ மன்னர், உடனே சேனையுடன் திரும்பி வருமாறு மகா பாண்டுலாவுக்குச் செய்தி அனுப்பினார். இச் செய்தி கிடைக்கப் பெற்ற மகா பாண்டுலா தமது சேனையைப் பல அணிகளாக வகுத்து, பல்வேறு திசைகளின் வழியே போகச் செய்து, குறிப்பிட்ட காலத்தில் அவ் வணிகள் யாவும் ஐராவதி முகத்துவாரத்தில் உள்ள டனுப்பியூ என்னும் நகரில் சந்திக்குமாறு திட்டம் செய்தார். அவ் வணிகளி லொன்றிற்கு தாமும் தலைமை வகித்து மலை, மடு, வனாந்தரங்களைக் கடந்து டனுப்பியூவுக்கு வந்து கொண்டிருந்தார். இப் பிரயாணத்தின் போது சீதோஷ்ண பேதத்தால் இராணுவ வீரர்களில் பெரும் பகுதியினர் இறந்து படலாயினர். டனுப்பியூவுக்குப் போகும் மார்க்கத்திலுள்ள இரங்கூனை யடைந்த பாண்டுலா, கீமந்தானில் பாசறை அமைத்து ஆங்கிலேயருடன் போரிடலானார். பாண்டுலாவின் எதிர்ப்பு ஏற்பட்டவுடன் வானளாவி நிற்கும் ஷுவேதகான் பொற்கோயில் தெய்ன் கொவ்ட்டரா மலைக் குன்றை ஆங்கிலேயர்கள் முக்கிய ஸ்தலமாகக் கொண்டு போரிடலானார்கள். அதே சமயத்தில் பாஜீடோ மன்னர் அவசியம் வந்தேகுமாறு பாண்டுலாவுக்குச்

செய்தி யொன்றை அனுப்பினர். அரசரின் அழைப் பிற் கிணங்கி, மகா பாண்டுலா அவா என்னும் தலை நகரை நோக்கிச் சென்று மன்னரைக் கண்டார். அப்போது பாஜீடோ மன்னருக்கும் மகா பாண்டு லாவுக்கும் நீண்ட சம்பாஷணைகள் நடைபெற்றன. அதன் பின்னர், மகா பாண்டுலாவுக்கு சிட்டகாங்கை கொடுத்திருப்பதாக மன்னர் அறிவித்தார். அதோடு அவரின் வெற்றிக்கு ஆஸ்பதமாய் உள்ள போர் நடத்து முறையையும், அஞ்சாது முன்னேறி எதிரி களைத் தாக்கி தோற்கடிக்கும் திறமையையும் பாராட் டிப் பேசினர்.

ஆங்கிலேயர்களை யெதிர்த்துப் போராடுவதில் நாட் டங் கொண்டவரான மகா பாண்டுலா, மீண்டும் இரங் கூனுக்கு திரும்பி வந்து சேர்ந்தார். சிறிது காலத் திற்குள் பர்மியர் தரப்பில் தோல்வி ஏற்படவே, அவர்கள் டனுப்பியூவிற்கு தங்கள் பாசறைகளை மாற் றும்படி நேர்ந்தது. டனுப்பியூவைச் சேர்ந்த பின்னர், மகா பாண்டுலா உறுதி வாய்ந்ததான கோட்டைகளை யும் சீர்திருத்தம் செய்தார். அவர் இரண்டு மாத மாகக் கோட்டைகள் கட்டுவதிலேயே ஈடுபட்டிருந் தார். அவ்வமயம் மகா பாண்டுலாவின் தலைமையில் பதினையிரம் படை வீரர்கள் தானிருந்தனர், ஆங்கி லேயர்கள் டனுப்பியூவிற்கு வடபுறமாக வந்து யுத்த விடுதிகளமைத்துத் தங்கினர். அவர்களின் தண்ணீர்ப் படையை மகா பாண்டுலா எதிர்த்தார். ஆயினும் வெற்றி யேற்படவில்லை. இறுதியாக போரிட்டு முடிப்பதென்ற முடிவுக்கு வந்த இரு தரத்தாரும் தங் களின் சேனை பலத்தை அதிகமாக்குவதில் ஊக்கம் காட்டினர். யுத்தமும் மூண்டது. கோரமான யுத்தம் இரு தரத்தாரில் எவரேனும் வெற்றி பெறுவதென்ற முடிவான யுத்தம்.

1825 ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் முதற் தேதி அதிகாலையில் ஆங்கிலேயர்கள் பீரங்கிகளைப் பிரயோகித்தனர். பர்மியர்கள் எதிரிகளின் பேரில் சிறிது நேரம் வரைதான் பீரங்கிகளைப் பிரயோகித்தனர் காலை சுமார் 9 மணிக்கு வழக்கம்போல் மகா பாண்டுலா சைன்யங்களைப் பார்வையிட வந்துகொண்டிருந்தார். பின்னர் ஓரிடத்தில் இளைப்பாறுவதற்காக உட்கார்ந்து படைத் தலைவர்களுக்கு உத்தரவிட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது ஆங்கிலத் துருப்புகள் பிரயோகித்த பீரங்கி குண்டு மகா பாண்டுலாவுக்குச் சமீபத்தில் வந்து விழுந்து வெடித்ததன் பயனாய் அவர் அகால வியோக மடையலானார்.

அன்னாரின் பூத உடலை தகனம் செய்து, அஸ்தியை மலூன் என்னுமிடத்தில் அடக்கம் பண்ணி, அதன்மீது கோபுரமொன்றை அமைத்துள்ளார்கள். அதோடு, மகா பாண்டுலா குண்டினால் தாக்குண்டு உயிர்நீத்த இடத்திலும் ஞாபகார்த்த சமாதி யொன்று கட்டப்பெற்றுள்ளது. அவற்றை இன்றும் காணலாம்.

ஜய வீர திலகமாய்த் திகழ்ந்து அகால மரணமெய்திய மகா பாண்டுலாவிற்குப் பின், சேனாதிபதி பதவியை அன்னாரின் சகோதரன் மீண்ட்டின் மீன்ககவ்ன் என்பானுக் களிக்க ஏற்பாடாகியது. ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாயினும், குண வேறுபட்டால் அச்சத்தின் வயப்பட்டவனான மீண்ட்டின் மீன்க்கவ்ன் சேனாதிபதி ஸ்தானம் பெற அஞ்சியவனாய், ஓடிப் பதுங்கலானான். அவ்வாறு பதுங்கிய மீண்ட்டின் மீன்க்கவ்னை அரசர் சிரச் சேதம் செய்து விட்டார். பயந்தவனான மீண்ட்டின் மீன்க்கவ்ன் உயிர் வாழ்ந்திருப்பானே யாயின், அது மகா பாண்டுலாவின் வீரப் பிரதாபத்துக்கு ஊறு விளைவிப்பதாகு மென அரசர் எண்ணி அவனுயிரைப் போக்கினார்.

போலும். தலைமை வகித்து இராணுவத்தை நடத்தும் திறமை வாய்ந்தோர் இல்லாது போகவே, இராணுவமும் கலைந்தது. பர்மியரின் சகல ஆதிக்கமும் ஆங்கிலேயர் வயப்பட்டது. மகா பாண்டுலா கால வியோக மானதற்கு பர்மிய சரித்திராசிரியர்கள் பல திறப்பட்ட கருத்துகளை வெளியிட்டுள்ளனர். அவற்றுள் பின் வரும் காரணங்களும் ஒப்பத்தக்கவையே!

"சமய பேதத்தாலும், அப்பர் பர்மாவிலிருந்து உதவிக்குப் படை வீரர்கள் வரக்கூடாது போனதாலும், அரக்கானில் மணிப்பூர் மன்னருடன் போர் செய்து திரும்பியபோது ஏற்பட்டிருந்த நெடும் பிரயாணத்தால் இராணுவ வீரர்கள் சோர்வடைந்திருந்ததாலும், வழியிலேயே இராணுவ வீரரில் பெரும்பாலோர் இறந்துவிட்டதால் படை வலிமை குறைந்திருந்ததாலும், நெருக்கமான இடத்தில் கோட்டை அமைக்காது விசாலமான பாகத்தில் அமைக்கப்பட்டிருந்ததாலும் பர்மியர் தோல்வியடையும்படி நேர்ந்தது. மகா பாண்டுலாவின் அகால மரணம் ஆழமற்ற நீர்ச் சுனையில் விழுந்து ஒருவர் உயிர் நீத்ததையே நிகர்க்கும்."

வீர புருடர்களின் துணிகரமானதும்—அபார வலிமை வாய்ந்ததுமான செயற்றிறன்களை அறிய ஆவலுறும் எவரும், அத்தகையோரின் வீர மரணம் கமழும் உரைகளையும் மனதிலிறுத்தியாக வேண்டியது அவசியமாகும். எனவே, மகா வீரரான பாண்டுலா, தன் உயிர் நீங்கும் தறுவாயில் முழங்கிய வீர உரைகளை ஈண்டு தருவது மிகுதியும் சால்புடைத்து.

## வீர உரைகள்.

"அசந்தர்ப்பத்தால் நமது கோரிக்கைகள் பூர்த்தியாகாமலும் போகலாம். அவ்விதமாயி

னும் நாம் வீரத்தையேனும், தைரியத்தையே னும் தளர விடுதலாகாது. இப் பர்மாவில் பிறந்த மக்களின் கீர்த்திப்ரதாபம் உலகெங்கும் பரவி நிற்க எனது செயல்களே என்றும் பிரதி பலித்து நிற்கும். பர்மாவில் பிறந்த சேனாதிபதி உயிர் துறக்க வேண்டிய இடத்தில் உயிர் துறப் பதை நான் மெய்ப்பித்து விட்டேன். சேனாதி பதி உயிருடனிருந்து சேனைக்குத் தோல்வி ஏற் படின், அது பர்மாவின் சரித்திரத்திலேயே இழி வாக அமையும். படைத் தலைவன் மரித்த பின் தோல்வி ஏற்படுமாயின், அதற்காக நாட்டை யேனும், உங்களைப் போன்ற இராணுவ வீரர் களையேனும் குறை சொல்ல மாட்டார்கள். என் போன்ற சேனாதிபதிகள் உண்மையில் பர்மா வின் கௌரவத்தை நிலைநாட்டி வைப்பார்களாக. ஓ வீரர்களே! நான் தியாகம் செய்ததைப் போல் நீங்களும் உங்கள் வழித் தோன்றும் சந்ததியார்களும, சமயம் நேரின் வீரத்துடன் —பின் வாங்காது—தியாகம் செய்ய முன் வரு வீர்களாக! கைகண்ட பலனை நானே உங்க ளுக்கு வழிகாட்டிச் செல்கிறேன். என்னைப் பின் பற்றுங்கள்."

"தோன்றிற் புகழொடு தோன்றுக—அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று" (—குறள்)

முற்றிற்று.

# யோகி-உப்பு.

விலையுயர்ந்த மூலிகைகளைக் கொண்டு வைத்திய முறையில் யோகி—உப்பு தயாரிக்கப்பட்டிருக்கிறது. குடலினுள்ளிருக்கும் அசுத்தங்களினால் ஏற்படும் தினவைப் போக்கடிப்பதற்கு யோகி—உப்பொன்றே சிறந்தது. இணையற்றது சுவாசக் குழாயின் வழியே உப்பின் வேகம் குடலினுள் சென்று தக்க வேலையைச் செய்யும். கக்குவான், நெஞ்சடைப்பு, கபம், சுவாச காசம், மூச்சு விடுவதில் தினவு முதலியவற்றால் அவஸ்தைப்படும் மக்களுக்கு யோகி—உப்பு கை கண்ட மருந்தாகும். வயது முதிர்ந்தவர்கள் இளைப்பினால் கஷ்டப்படவேண்டாம். இந்த உப்பை உட்கொண்டால் சூரியனைக் கண்ட பனிபோல் இளைப்பு நோய் மறைந்துவிடும். தேக சுகத்தை விரும்பும் சிறுவர் முதல் கிழவர்கள் வரை உபயோகிக்க வேண்டிய ஒப்பற்ற மருந்து யோகி—உப்பொன்றே யாகும்.

ஒரு புட்டியின் விலை ரூபாய் ஒன்றே.

**யோகி மெடிக்கல் ஹால்**

173—38 வது வீதி, இரங்கூன்.

53920